Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්

ரூபா 30.00
பெப்ரவரி
04 - 10, 2016
பக்கம்24
முரசு 1155

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY



## கரணம் அடிக்கப் போகிறார்கள் கவனம்!



## முதல் இதய மாற்றுச் சிகிச்சை



## தூதரகத்துக்கு வந்த கரும்புலி



## சில்லரைப் பாவியாக்கும் கல்வியதிகாரிகள்

## சமாதான சகவாழ்வு

## ॐ இந்துக்கள் எதைச் செய்யலாம் எதைச் செய்யக்கூடாது!

1. விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக் கூடாது. (விநாயக சதுர்த்தியன்று மட்டும் ஒரு தளம் போடலாம்)

2. பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, வில்வம், கொன்றை முதலியன விசேஷம். ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியனவற்றாலும் அர்ச்சிக்கலாம்.

3. விஷ்ணுவை அட்சதையால் அர்ச்சிக்கக் கூடாது.

4. அம்பிகைக்கு அறுகம்புல் உகந்ததல்ல.

5. லட்சுமிக்குத் தும்பை கூடாது.

6. பவளமல்லியால் சரஸ்வதியை அர்ச்சனை செய்யக் கூடாது.

7. விஷ்ணு சம்பந்தமான தெய்வங்களுக்கு மட்டுமே துளசி தளத்தால் அர்ச்சனை செய்யலாம். அதுபோல, சிவ சம்பந்தமுடைய தெய்வங்களுக்கே வில்வார்ச்சனை செய்யலாம்.

8. சாமந்திப்பூவை கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது.

9. மலரை முழுவதுமாக அர்ச்சனை செய்யவேண்டும். இதழ் இதழாக கிள்ளி அர்ச்சனை செய்யலாகாது.

ஆன்மீகம்

## சொந்தங்களின் புறக்கணிப்பு!

இயேசு தம் சொந்த ஊருக்கு வந்தபோது புறக்கணிக்கப்பட்ட நிலையை இவ்வாசகம் அழகாகச் சித்தரிக்கிறது. "இறைவாக்கினர் எவரும் தம் சொந்தஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை" என்று இயேசுவே தம் ஊர் மக்களிடத்தில் சொல்கின்றார். இயேசுவின் குடும்பத்தை, பின்னணியை, சுற்றத்தை நன்கு அறிந்தவர்கள் நாசரேத் ஊர் மக்கள். அந்த அறிமுகமே அவரை ஏற்றுக் கொள்வதற்கும், அவரது நற்செய்தியை நம்புவதற்கும் தடையாக அமைந்துவிடுகின்றன. எனவே, அவர்கள் அவரது செய்தியைப் புறக்கணிக்கின்றனர்.

நமது வாழ்விலும் இத்தகைய அனுபவங்கள் நமக்குக் கிடைத்திருக்கலாம். நமது சொந்தவீட்டினர், குடும்பத்தினர், உறவினர்களே நமது அருமையை, திறமைகளை உணராமல், அறியாமல் நம்மை இகழ்ந்து ஒதுக்கிய நிலை நமக்கு ஒருவேளை கிடைத்திருக்கலாம். நாம் கொஞ்சம் கவனமாக இருப்போம். அடுத்த முறை நன்கு அறிமுகமான நபர்களின் ஆளுமையை, ஆற்றல்களை, சிந்தனைகளைத் திறந்தமனதுடன் ஏற்றுக்கொள்ள முன்வருவோம். அறிமுகமே முற்சார்பு எண்ணங்களைத் தூண்டி, உறவை முறித்துவிடாதபடி, தவறான தீர்ப்புகளுக்கு நம்மைத் தள்ளிவிடாதபடி கவனமாயிருப்போம்.

## வயோதிபரை கண்ணியப்படுத்துவோம்

நபியவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்:- எந்த ஒரு வாலிபரும் ஒரு வயோதிபரை அவரது வயதுக்காக கண்ணியப்படுத்துவாரேயானால் அவரது வயோதிகத்தின் பொழுது அவரை கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் ஏற்படுத்தியே தீருவான். (திர்மதி)

ஒருவர் அமர்ந்திருக்கும்பொழுது, அவரருகில் வயது முதிர்ந்தவரொருவர் வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டால் அவர்மீது இரக்கம் காட்டி அவருக்கு அவரது இடத்தை அளிப்பது, கனமான சுமையை அவர் சுமந்து வந்தால் அவரது சுமையை பகிர்ந்துகொள்வது, பஸ் – ரயில் போன்ற வாகனங்களில் அவர் ஏறஇறங்க சிரமப்பட்டால் அவருக்கு அதில் உதவுவது, போக்குவரத்து நிறைந்த சாலையை அவர் கடக்க முற்பட்டால் அதற்கு உதவுவது, சாலைகளில் அவருக்கு முன்னிலை வழங்கி சிறப்பிப்பது போன்றவை அவர்களைக் கண்ணியப்படுத்தும் வகைகளைச் சார்ந்தவைகளாகும்.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

# தேன் கிண்ணம்



## உனக்குத்தான்

ரசிகனைப் போல்
நெருங்கி வருகின்றேன்
நீயேன் ஒரு
விமர்சகன் போல்
விலகி நிற்கிறாய்?
ஆயிரமாயிரம்
முகங்களின் நடுவில் நான்
தேடிக் கொண்டிருக்கிறேன்
அறிமுகமாகாத
உன் முகத்தை!!

கே.லோகேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

## பாசத்தை மட்டுமே!

பசித்திடும்போது புசித்திட - தன்
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டிவிடுபவள் தாய் - அது
அவள் கடமை அல்ல - ஆனால்
உனக்கு அது கடன் - நீ
அழுதிடும்போது தாலாட்டி
உறங்கச் செய்பவள் தாய் - அது
அவள் கடமை அல்ல - உனக்கு அது
கடன்.


தள்ளாடி நடக்கையிலே
தாவிப்பிடித்து அவள் தோல் சேர்த்து
அணைத்துக் கொள்பவள் தாய் - அது
அவள் கடமை அல்ல உனக்கு
அது கடன்.

பாசத்தை தேனாக்கி
பருகத்தந்து நீ பாரினில்
படித்துப் பட்டம் பெற
மெழுகுதிரியாக உருகுபவள் தாய்
அது அவள் கடமை அல்ல
உனக்கு அது கடன்.

பதவி கிடைத்தபின் பக்கத்துணைச்
சேரும்வரை
வாஞ்சையுடன் காத்திருப்பவள் தாய்
அது அவள் கடமை அல்ல
உனக்கு அது கடன்.

கொஞ்சம் திரும்பிப் பார்
உன் பின்னால் ஓடி வருபவள்
உன் தாய் தானா என்று
அவள் உன்னிடம் கேட்பது

இதுவரை நீ நினைத்திருந்த
கடனை அல்ல
அவளுக்காக நீ செய்யவிருந்த
கடமைகளையும் அல்ல - அவள்
இறக்கும்வரை இரந்து கேட்பது
உன் பாசத்தை மட்டுமே!



இளம்பிறை யோகன்,
புத்தளம்.

## மோகம் - 30
## ஆசை - 60
## ஆயுள் - 100


மோகம்
முப்பது நாள்...
நாளுக்கு நாள்
மூப்புற்று முதிர்ந்து
முற்றுங் கசந்து
முனிவராய்
ஆனீரோ?

ஆசை(கள்)
அறுபது நாள் – அது
நாளுக்கு நாளறுந்து...

சொத்துஞ்சேர்த்து
சுகவாழ்வும் சேர்த்து
சுகவாழ்வும் அற்று
செத்துந்தான்
போனீரோ?

மோகம் மூப்பதும்
ஆசை(கள்) அறுபதும்
அவரவர் உடலுறவு
உணர்வுக்கு – உயிர்
அற்று உடல் நாறு(ம்)
ஆன்மாக்கு ஆயுள் நூறு
ஆ(காட்டில்) கூறு(ம்!)

பாண்டியூர்
பொன்.நவநீதன்



## காதோரம் சொன்ன காதல்...

எந்தனது காதலை
உந்தனது வரிகளில்
எழுதியனுப்பி வைத்தேன்!

காதல் தோல்வி
தழுவிய இதயங்களுக்கு
இதமான வருடலென...
மறவாதே போன
இறவாத காதலது!
என்றும் இளமையதாம்.

என்னை ஓயாது
தழுவும் தென்றலே
என்காதலை தழுவ
ஏன் மறுக்கிறாய்
ஈரமான இதயத்தை
எங்கே தொலைத்தாய்
அவனைப் போல...
சாகாத காதலது
வேகாது கட்டையிலும்...

நிலவு தழுவு மாசை
உனக்கும்... எனக்கும்
எப்பொழுதும் எட்டாது என்பது
தெரிந்தும் நீ
வான் மேகங்கள்
மீது தவழ்கிறாய்
நிலவு தழுவும் ஆசையில்!


என்மீது மட்டும்
உனக்கொரு
நக்கல் பார்வை...

ஓயா அலைகள்
தேயாதே மோதி
காதல் சொல்வதில்லையா?
கரை ஓரமாக

காதோரமாக
சொல்லி வைத்தேன்
யுகம்தோறும்
ஓயாத காதல்
கதையது என்று

சுவைகள் பலவிதமாம்
சொன்னார்கள்
எந்தனுக்கு
சொந்தம் தோல்வி
சுவை மட்டுமே!
துயரம் நிறைந்த
பிரிவு துயரமும்
ஏமாற்றமும் – அது
ஒருவித சுகமானதா?

சிங்கத்தின்
பிடரி மயிர்
தடவும் துணிச்சல்



உனக்கிருக்குமென நினைத்தேன்!
தென்றலே
என் பிடரியை
ஏன் தடவுகிறாய்
சிலரைப் போல...
பிரசவமாகாத காதலே
வெளிப்பட்டு நீ
சுகப்படமாட்டாயா?
பிரசுரமாகி உன்னை
அடையாளப்படுத்த
வெட்கப்படுவதேன்? கங்கை
நதியோடு போன காதலை
அலையோடு தேடுகிறேன்
ஏக்கத்தோடு பைத்தியமாய்...

மண்டைதீவ
'மகிழ்நன்'


தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

தினமுரசு வாரமலர்,
மாநகரசபை கட்டடம்,
3 ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 0214503262,
0774150799





### பெப்ரவரி - 28

"சோம்பல் எல்லா விசயங்களையும் கஸ்டமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிதாக்கும்."

ஃபிராங்க்ளின்

# கட்சிகள் தான்தோன்றித்தனமாகச் செயற்படக் கூடாது

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முதலமைச்சர் உரை!



கட்சிகள் மக்கள் மனமறிந்து நடந்து கொள்ளவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக மக்கள் நலம்சார்ந்த விடயங்களில் மக்களின் மனமறிய முற்படாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படக்கூடாது. கடந்த கால கட்சி அனுபவங்களை முன்வைத்து தமிழ் மக்களின் வருங்கால வாழ்வைப் பாழடித்துவிடாதீர்கள் என்று யாவரிடமும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் மக்கள் பேரவை கட்சியாக மாற்றப்படமாட்டாது. அரசியல்ரீதியாகச் செயற்படமாட்டாது என்ற உத்தரவாதம் தந்த பின்னரே நான் இதில் கலந்துகொண்டேன். தமிழ் மக்களின் புத்திஜீவிகள் மக்கள்சார்பாக நடவடிக்கைகள் எடுத்து தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடிய அரசியல் வழிமுறைகளை எடுத்தியம்புவது எந்த வித்திலும் பிழையென்று யாராலும் கூறமுடியாது.

உண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மற்றைய சகல கட்சிகளும் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவையை ஊக்குவிக்கவேண்டுமேயொழிய எதிர்ப்பைத் தெரிவிக்கக் கூடாது. கட்சிக்கான விசுவாசம் என்பது சிலரின் கண்களை மூடிவிட்டது. ஆனால் வடகிழக்கு மாகாண மக்களின் வருங்காலமே முக்கியம். வழி வழியாக வரவிருக்கும் எமது வாரிசுகளின் வருங்கால வாழ்க்கையே எமக்கு முக்கியம். அதற்காக எந்த ஒரு கடினமான பாதையில் பயணிக்கக்கூட நாங்கள் தயங்கக்கூடாது.

# புதிய அரசியலமைப்பில் சமஷ்டிக்கு இடமில்லை!

## ஜனாதிபதி திட்டவட்டம்!!




யார் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் புதிய அரசியலமைப்பில் 'சமஷ்டி' முறையிலான அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். அரசியல் அமைப்பில் உள்ளடங்கவேண்டிய விடயங்கள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒன்பது யோசனைகளை முன் வைத்துள்ளது. எனினும் யார் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் சமஷ்டிக்கு இடமேயில்லை என அவர் இதன்போது மேலும் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேறிய மக்களிற்கு

# முழுமையான நிரந்தர வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா



வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் அநேகர் தற்காலிக மற்றும் அரை நிரந்தர வீட்டுத் திட்டங்களில் குடியேற்றப்பட்டுள்ள நிலையில், இவர்களுக்கு முழுமையான, நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்க உரிய திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீள்குடியேற்ற, புனரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்திலும், அதன்பின்னர் தற்போதைய ஆட்சியிலும் எமது மக்களில் பலர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனினும், இம்மக்களுக்கான அடிப்படை வசதிகள் முழுமையாக செய்துகொடுக்கப்படாத நிலைமைகளும் காணப்படுகின்றன. அவை குறித்து உரிய அவதானம் செலுத்தப்பட்டு, அவை தீர்க்கப்படவேண்டும்.

அத்துடன், மீள்குடியேறிய மக்களில் அநேகர் தற்காலிக மற்றும் அரை நிரந்தர வீடுகளிலேயே குடியேற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டு பல காலம் கடந்துள்ளநிலையில் அவ்வீடுகள் தற்போது சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றன. அத்துடன், தொடர்ந்தும் இம்மக்களால் தற்காலிக மற்றும் அரை நிரந்தர வீடுகளில் குடியிருக்க இயலாதநிலையும் காணப்படுகின்றது.

எனவே, இவ்விடயம் குறித்து அவதானம் செலுத்தி, முழுமையான நிரந்தர வீட்டுத்திட்டங்களை வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ள செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இந்திய அரசிடம் கலந்துரையாடி, இந்திய வீட்டுத் திட்டத்தைத் தான் பெற்றதையும் இங்கு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான் விட்ட பிழைகளை எண்ணிப் பார்க்கின்றேன்!

## கண்டியில் மகிந்த



செயற்பாட்டு அரசியலில் தீவிரமாக களமிறங்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கண்டியில் இன்று ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் பின்னர் சொந்த ஊருக்கு சென்று சில காலம் ஓய்வு பெற்றுக்கொண்டேன். மக்கள் அழைத்த சந்தர்ப்பங்களில் அரசியலில் ஈடுபட்டிருந்தேன். எனினும் இனி எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக செயற்பாட்டு அரசியலில் ஈடுபடவுள்ளேன். ஊருக்குச் சென்று அமைதியாக இருந்தபோது மூன்று மாதங்களாக எனக்கு எதிராக சேறுபூசப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்டது. பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னை அரசியலுக்குள் மீளவும் இழுத்துவிட்டார்கள். நான் அரசியலுக்குள் வந்துவிட்டேன்.

இனி எனது அரசியல் பயணத்திற்கு பிரேக் கிடையாது. பயங்கரவாத நிதி இலங்கையில் முதலீடு செய்யப்படும் என்ற அச்சத்தில் நான் நிதிச் சலவை குறித்த சட்டத்தை கொண்டுவந்தேன். அந்த சட்டத்தின்கீழ் எனது மகன் யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சட்டத்தில் மொத்தமாக ஏழு விடயங்கள் ஊடாக பணம் சம்பாதித்த நிதி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. போதைப்பொருள் விற்பனை, 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகளை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்தல், ஆயுத விற்பனை போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த சட்டத்தின் அடிப்படையிலேயே யோசிதவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதாவது சீ.எஸ்.என் தொலைக்காட்சி போதைப்பொருள் விற்பனைசெய்து பணம் சம்பாதித்துள்ளது. அது ஊடகப்பணியில் ஈடுபடவில்லை.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஒரே மனிதனின் மகன் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதாகியுள்ளார் என்பதுதான் நல்லாட்சியாகும்.

கடந்த காலங்களில் நான் செய்த பிழைகளை நினைத்துப் பார்க்கின்றேன். பிரேமதாசவின் மகள் கள்ளநோட்டு அடித்து பிடிபட்டபோது நான் கண்டுகொள்ளவில்லை. ஜனாதிபதியின் மகன் பாசிக்குடாவில் பிரச்சினை ஒன்றில் சிக்கியபோது அதனை நான் பொருட்படுத்தவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் அமைதி பேணியதே நான் செய்த தவறாகக் கருதுகின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# மட்டு.கல்குடா வலயத்தில் 321 ஆசிரியர் வெற்றிடங்கள்

"மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திலே மொத்தமாக 1317 ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் இன்னும் 321 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்." என கல்குடா கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சிறிகிருஸ்ணராஜா தெரிவித்துள்ளார். அண்மையில் மட்டக்களப்பு செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கஸ்டப் பிரதேசங்களில் குறைந்தது இரண்டு வருடங்களாவது எமது ஆசிரியர்கள் கடமையாற்றவேண்டும். ஆனால் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆசிரியர்கள் தங்களது பெட்டி, படுக்கைகளை தூக்கிக்கொண்டு திருகோண மலைக்கும் மட்டக்களப்பிற்கும் வருகைதந்து கல்வி கற்பித்ததால்தான் நாங்கள் இன்று ஆசிரியர்களாக இங்கு கற்பித்துக்கொண்டு இருக்கின்றோம்.

அன்று அவர்கள் நான் ஏன் திருகோணமலைக்கு செல்லவேண்டும்? நான் ஏன் மட்டக்களப்பிற்கு செல்ல வேண்டும்? என்று நினைத்து இருந்தால் அன்று பிரதேசவாத உணர்வு அவர்களுக்கு இருந்திருந்தால் இன்று கிழக்கு மாகாணத்தில் ஒரு கல்விமான்களையும் காண முடியாதிருந்திருக்கும். நான் இதை ஏன் இங்கு கூறுகின்றேன் என்றால், மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்கள் மட்டக்களப்பு நகரத்திலே இருந்துகொண்டு கல்குடாவிற்கு செல்லமுடியாது வாகரைக்கு செல்லமுடியாது மண்முனைமேற்கிற்கு செல்ல முடியாது என சவால் விட்டுக்கொண்டிருக்கின்றனர். நான் உங்களை வேறு மாவட்டத்திற்கு செல்லசொல்ல வில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கஸ்டப் பிரதேசங்களில் குறைந்தது இரண்டு வருடங்களாவது எமது ஆசிரியர்கள் கடமையாற்றவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்" என்று கல்குடா கல்வி வலய கல்விப்பணிப்பாளர் சிறிகிருஸ்ணராஜா தெரிவித்துள்ளார்.

# இறுதிப்போரில் நிகழ்ந்ததை அறியாதோரே இலங்கையின் யுத்திகள் குறித்து பேசுகின்றனர்!

## துருக்கித் தூதுவர்



போரின்போது இலங்கை பின்பற்றிய உத்திகளைக் கையாளவேண்டும் என்று கூறுபவர்கள் இறுதிப் போரின்போது இங்கு நடந்தவை குறித்து போதுமான அறிவைக் கொண்டிராதவர்கள் என இலங்கைக்கான துருக்கி நாட்டுத்தூதுவர் டுன்ஜா ஒஷ்ஸுகதார் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகண்ட வழியில் நாமும் தீர்வு காணவேண்டும் என அவர்கள் எண்ணுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

போரின்போது இலங்கை பின்பற்றிய உத்திகளை துருக்கியிலும் பின்பற்றவேண்டும் என துருக்கிய அரசியல்வாதியொருவர் தெரிவித்ததாக அண்மையில் ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்தி குறித்து வினவியபோதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

# யாருடைய நகர்வு யாருக்கு ஆரோக்கியத்தைத் தரும்

இடியப்பச் சிக்கல்போல இலங்கையரசியல் இன்று இடம்மாறி நிற்கின்றது. இதன் விளைவுகள் விபரீத நினைவுகளையும் உண்டு பண்ணுகின்றது. மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவை மைத்திரிபால சிறிசேன அதிரடியாக கைது செய்யச்சொல்லி மிகப்பெரிய அதிர்வலைகளை இலங்கை அரசியலில் ஏற்படுத்தியுள்ளார். மறுபுறத்தில் வடக்கில் தமிழ் தரப்புக்களில் சிலர் எதிர்பார்த்திருக்கும் சமஷ்டி என்றுமே சாத்தியப்படாது எனும் கருத்தினையும் மைத்திரி வெளியிட்டுள்ளர். போர்க்குற்ற விசாரணை தற்போது தேவையில்லையெனும் தொனியும் இடையிடையே விடப்படுகின்றது.

மிகவும் அமைதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அவ்வப்போது எதிர்பாராதவிதமாக திடீர் திடீரென்று தனது முடிவுகளை அறிவித்து இலங்கை அரசியலில் அவ்வப்போது தன்னை நிலைநிறுத்திவருகின்றார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செல்வாக்கு இன்னமும் குறைவடையவில்லை என்பது உண்மையாயினும், மைத்திரிபால சிறிசேனவிற்கும் அதேயளவு இடம் சிங்கள மக்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களிடமும் உண்டு என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

இதனால் அரசியலில் இருபெரும் துருவமாக இவர்கள் விளங்குகின்றார்கள். ஆயினும், மகிந்த ராஜபக்சவின் விடயத்தில் மைத்திரிபால சிறிசேன தனது காய்களை மெல்லவே நகர்த்துகின்றார் என்பது தெளிவாக தெரிகின்றது. ஏனெனில் மகிந்த ராஜபக்ச விடயத்தில் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் அது அவருடைய ஆட்சிக்கே குந்தகம் விளையும் என்பதில் அவர் தெளிவாகவே இருக்கின்றார். இதனால்தான் இன்றுவரை மகிந்த ராஜபக்சவை கைதுசெய்யுமாறு அவரால் உத்தரவு பிறப்பிக்க முடியவில்லை. மகிந்த ராஜபக்சமீதான விடயத்தில் நிதானம் முக்கியம் என்பது மைத்திரியின் முடிவு. அது தவறும் அன்று. ஆனால் மகிந்த ராஜபக்சவிற்கு அவ்வப்போது ஒரு பயப்பீதியை மைத்திரி கொடுக்காமலும் இல்லை.

முதலில் பசில் ராஜபக்சவை கைது செய்ய பணித்தார். கோத்தபாய ராஜபக்சவை விசாரணைக்கு இழுத்துவிட்டார். மகிந்தவின் மனைவியையும் அவர் விசாரணைக்காக அலையவைத்திருக்கிறார். அதன் அடுத்தகட்டமே யோசித ராஜபக்சவின் கைது நடவடிக்கை. இது மகிந்த ராஜபக்சவின் ஊழல்களை விசாரிப்பதற்கானது என்பதைக்காட்டிலும் இப்படியான ஒரு நெருங்குவாரங்களை கொடுத்து அவரை மிரட்டுவதற்கான, அல்லது தன்னுடைய இருப்பைக் காட்டுவதற்கான செயற்பாடாக ஜனாதிபதி நினைத்திருக்கக்கூடும். அதன் விளைவுதான் யோசிதவின் கைது.

ஆனால் மறுபுத்தில் மைத்திரியும் நிதானமாகக் காலை வைக்கவேண்டிய தேவையுள்ளது. அதாவது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஜனாதிபதி போன்று உயர்பதவியில் இருப்பவரே அந்தக் கட்சியின் தலைவராக இருக்கமுடியும் என்ற அந்தக் கட்சியின் யாப்புக்கு அமைவாக மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

நாட்டிலும் சுமூகமான ஆட்சி மாற்றம். சுதந்திரக் கட்சிக்குள்ளும் நல்லதொரு தலைமைத்துவ மாற்றம் என்ற ஒரு நிலை தோன்றியது. ஆனால், ஓரிரு நாட்களில் அந்த நிலைமையைக் குழப்பும் சதிகள் அரங்கேற்றப்பட்டன. இவற்றுக்குப் பல காரணங்கள் இருந்தன. ஜனாதிபதியாகவும் சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் மைத்திரி நியமிக்கப்பட்டமையை சுதந்திரக் கட்சியில் உள்ள சிலரும் அக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள சிலரும் விரும்பவில்லை. இவர்கள் கொள்கைரீதியாக மைத்திரியை எதிர்க்கவில்லை. மைத்திரியின் தலைமையின்கீழ் அரசியல் சுகபோகங்களை அனுபவிக்கமுடியாது ஊழல், மோசடிகளில் ஈடுபடமுடியாது குறுக்குவழியில் அரசியல் செய்யமுடியாது என்பதால்தான் அவர்கள் மைத்திரியை வெறுத்து மகிந்தவை ஆதரித்தனர்.

மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் கவிழ்ந்ததும் மைத்திரியும் ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் இணைத்து இடைக்கால அரசு ஒன்றை நிறுவினர். அந்த அரசின் செயற்பாடுகள் ஊழல்வாதிகளுக்கு எதிரானதாக இருந்தன. இந்த ஆட்சி தமக்கு ஒத்துவராது என்பதை அவர்கள் உணர்ந்தனர். மகிந்தவின் ஆட்சியில் அவர்கள் எவ்வாறு அரசியல் சுகபோகங்களை அனுபவித்தார்கள். அவர்கள் நினைத்ததைச் செய்யும் அளவுக்கு மகிந்த எவ்வாறு இடங்கொடுத்திருந்தார் என்பதை எண்ணிப் பார்த்த இவர்கள் மகிந்த இல்லாமல் தங்களால் அரசியல் செய்யமுடியாது என்பதை உணர்ந்தனர். இதனால், மகிந்தவை அழைத்துவந்து சுதந்திரக் கட்சியில் இணைத்து ஆட்சியைக் கைப்பற்றுதல், இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தி வேறு அணியாக - வேறு கட்சியாக செயற்படுதல் என்று முடிவெடுத்தனர். இந்த முடிவை எடுத்து முன்நின்று உழைத்தவர்கள் சுதந்திரக் கட்சியின் பங்காளிக் கட்சியினர்தான். அவர்களுள் முக்கியமாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பிள்ள, தினேஸ் குணவர்த்தன மற்றும் வாசு தேவா நாணயக்கார போன்ற சுதந்திரக் கட்சி சாராதவர்களாவர்.

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவை இறக்கி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர்கள் திட்டம் தீட்டினர். சுதந்திரக் கட்சியில் போட்டியிட மகிந்தவுக்கு மைத்திரி அனுமதி வழங்கியபோதும், பிரதமர் பதவி அவருக்கு வழங்கப்படமாட்டாது என மைத்திரி அறிவித்ததால் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின்பின் நாடாளுமன்றில் தனி அணியாக செயற்படத் தொடங்கினர். சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு மகிந்தவாலும் அவரது சகாக்களாலும் எதுவும் செய்யமுடியாது என்பதை உணர்ந்த அந்த அணி, ஒரு புதிய கட்சியை உருவாக்கி அதன் ஊடாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு அந்தத் தரப்பு முடிவெடுத்துள்ளது. புதிய கட்சியின் உருவாக்கம் சுதந்திரக் கட்சியைப் பாதிக்கும் என்பதால் சுதந்திரக் கட்சியின் பிளவை தடுப்பதற்கும் கட்டியெழுப்புவதற்கும் மைத்திரி காய்நகர்த்தத் தொடங்கியுள்ளார்.

இதன் அடிப்படையில் இவர் செயற்பட்டாலும் மைத்திரிபால சிறிசேனவின் இந்த முடிவானது அவசரப்பட்டு எடுக்கப்பட்ட ஒன்று என்றும், இதனை நினைத்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிர்ச்சி அடைந்து போயுள்ளார் என்றும் பிறிதொரு தகவல்கள் தெரிவிக்கின்றன. தேசிய அரசாங்கமாக ஆட்சி செலுத்தும் தற்போதைய கூட்டு அரசியலைப் பயன்படுத்தி ஐக்கியத் தேசிய கட்சியை வளப்படுத்த ரணில் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார்.

இதன் முதற்கட்டமாக, அடுத்து நடக்கவுள்ள இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றாகவேண்டும் என்னும் கண்டிப்பு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மைத்திரிபால சிறிசேன யோசித ராஜபக்சவை கைது செய்ய உத்தரவு பிறப்பித்தமையானது அவர் மீதான கூட்டு எதிர்க்கட்சிகள் மீதான அனுதாப அலைகளாக மாறிவிடும் என ரணில் அச்சம் கொண்டுள்ளார். இந்த நிலையில் யாருடைய நகர்வு யாருக்கு ஆரோக்கியத்தைத்தரும் என்பதில் பல சிக்கல்கள் உள்ளன.



# காரணம் காட்டிக் கரணமடிக்கப் போகின்றார்கள் கவனம்!

இலங்கையரசு சமஷ்டியை ஒருபோதும் தராது என்பது தெரிந்தும் அதியுச்ச சமஷ்டியைத்தான் நாம் ஏற்போம். ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஒருபோதும் நாம் ஏற்கமாட்டோம் என பொது அமைப்புக்களைக் கிளப்பி விட்டுள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைகள். தங்களை மக்களும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் மேவுகின்றார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட கூட்டமைப்பின் தலைமைகள் தமது அரசியல் அனுபவத்தால் வேறு துருவத்தில் தமது அரசியல் ஆக்கிரமிப்பைத் திணிக்க முனைகின்றனர். முட்டிமோதி வரும்போது தமது தேவை சுயமாக உணரப்படும் என்பதே இதன் சாரமாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பல எடுகோள்களும், பல தீர்வுப் பொறிமுறைகளும் தற்போது முன்வைக்கப்பட்டுவருகின்றன. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பல தரப்புக்கள் பல வழிகளில் முனைப்புப் பெற்றுச் செயற்பட்டுவருவது பாராட்டுதற்குரியது. ஆனால் அது பெரும்பான்மையரசினால் உள்வாங்கப்படுமா? என்பதுதான் இன்றுள்ள பிரச்சினையாகும். சிறுபான்மை இனங்கள் எதிர்பார்க்கும் தீர்வுத்திட்ட வரைபை உருவாக்கித் தருமாறு பெரும்பான்மையரசு என்றாவது தமிழ் தரப்புக்களைக் கோரியதா? என்றால் இல்லை. அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தில் ஓர் சாரத்தில் சொற்பதத் தொனி வேறுபாட்டுடன் கூறப்பட்ட விடயம்தான் இனமுரண்பாடு. இதை வைத்து சிறுபான்மை இனங்கள் இந்தளவு தூரம் நகருவது பயனளிக்குமா? என்பது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் இலங்கை மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பு எனும் போர்வையில் இத்திட்ட கோரிக்கை முன்மொழிவுகளை உள்வாங்கினாலும் ஒற்றையாட்சிக்குள் ஒரு திட்டவரைபு என்பதுதானே அரசின் கோரிக்கை. அதற்கு அப்பால் தமிழரின் கோரிக்கை சென்றுவிட்டது என ஒட்டுமொத்தமாக திட்டவரைபை நிராகரிக்கவும் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நிராகரிக்கப்பட்டு ஒற்றையாட்சிக்குள் தீர்வு கொடுக்கப்பட்டால் அந்த அதிகாரப் பரவலாக்க முறைமையில் தமிழ் தரப்பின் அபிப்பிராயங்கள் எதுவும் இருக்காது. அவ்வாறான நிலைதோன்றுமானால் மாகாண சபைபோல் அரைகுறை அதிகாரத்துடன்தான் அதுவும் அமுல்படுத்தப்பட வாய்ப்புண்டு. “மாகாணசபை முறை வேண்டாம்” என்று கூறியவர்கள் தானே பின்பு வேண்டுமென்று போட்டியிட்டார்கள். அவர்களின் நிலைப்பாடு வேறு, தயவுசெய்து அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள்.

**புதிய அரசியலமைப்பில் சமஷ்டிக்கு இடமில்லை! - ஜனாதிபதி உறுதி**

இலங்கையில் சமஸ்டி முறை ஆட்சிக்கு இடமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். புதிய அரசாங்கத்தின் உத்தேச அரசியல் அமைப்பில் சமஸ்டி ஆட்சி முறைமை குறித்த எந்தவொரு யோசனையும் உள்ளடங்காது. அரசியல் அமைப்பு குறித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒன்பது யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யார் எவ்வாறான கோரிக்கை விடுத்தாலும் வேண்டுகோள்களை முன்வைத்தாலும் அரசியல் அமைப்பில் சமஸ்டி முறைமையிலான ஆட்சிக்கு இடமில்லை என ஜனாதிபதி திட்டவட்டமாக சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

**பிரிவினைவாதத்தின் பிரதிவிம்பமாகும் சமஷ்டி**

சமஷ்டிதான் பிரிவினையை, பிளவை ஏற்படுத்தும் என்று இடதுசாரித் தலைவர்களின் எண்ணப்பாடுகள் தற்போது நிஜவடிவம் பெறுகின்றது. சோவியத் ஒன்றியம் எதனால் வீழ்ச்சி பெற்றது? அதே நிலைதான் இலங்கைக்கும் ஏற்படப் போகின்றது. யதார்த்தத்திற்குப் புறம்பாக பேசுவதால் தமிழ் தேசியத்தையும் தனதாக்க முடியாது. அதேவேளை இனவாதத்திற்குத் துணைபோவதாகவும் கூறமுடியாது. இத்தனை அழிவுகளிற்குப் பின்பாவது சாத்தியப்படக்கூடிய கோரிக்கைகள் பற்றிப் பேச நாம் தயாராகவேண்டும்.

சுமந்திரன் அவர்கள் கூறினார்; “சமஸ்டிக்கு அரசு உடன்படவில்லையானால் பிரிந்து செல்லவேண்டிய நிலை உருவாகுமென்று.” இதுதான் இவர்களின் தற்போதைய அடிப்படை நிலைப்பாடு. மீண்டும் பிரிவினைவாதத்தை இலங்கையில் விதைத்து தமது தேவையை நிலை நிறுத்தப் போகின்றார்கள். இலங்கையரசுடன் இணக்கப்பாடு வந்தவுடன் தமிழ் மக்கள் தமக்கு அப்பால் சிந்திக்கப் புறப்பட்டுவிட்டார்கள் என்பதற்கு தமிழ் மக்கள் பேரவை நல்ல உதாரணம். இதுவே தற்போது இவர்களிற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சரி. இவரது கருத்தை சாதகமாக எடுத்தாலும் பிரபாகரனால்கூட இத்தனை ஆண்டுகள் சாதிக்கமுடியாததை இவர் சாதிக்கப்போகின்றாரா...? இப்படிப்பட்ட பூச்சாண்டிக் கதைகள்தான் சிங்கள இனவாதத்தை சீண்டிவிடும் பொறுப்பற்ற வார்த்தைப்பிரயோகங்களாகும். தூண்டுவதற்காக திட்டமிட்டு பேசுபவர்களை என்றுமே நிறுத்தமுடியாது.

இவ்வாறு நிலைமையிருக்க, வேடிக்கை என்னவெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சித்தார்த்தன் போன்றவர்கள் ஸ்கொட்லாந்தின் சமஷ்டி பற்றிய அங்குள்ள அதிகாரப்பகிர்வு குறித்து ஆராய்வதற்காக லண்டனுக்குச் சென்றிருக்கின்றனர்.

ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றுள்ள ஸ்கொட்லாந்தில் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 85 மக்கள் வாக்களித்த அந்தச் சர்வசன வாக்கெடுப்பில் 55 சதவீதமானோர் ஸ்கொட்லாந்து தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கு எதிராகவும், 45 சதவீதமானோர் பிரிவினைக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். கனடாவில் கியூபெக் மாகாணத்தில் பிரிந்து செல்வது தொடர்பாக 1980ஆம் ஆண்டிலும் மற்றும் 1995ஆம் ஆண்டிலுமாக இரண்டு முறை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளிலும் பிரிவினைக்கான ஆணை வழங்கப்படவில்லை. இவ்வாறாக சர்வதேச அரசியலில் சமஷ்டிப் பக்கங்கள் உள்ளன. ஆனால் இலங்கையின் பௌதீக புவியியல் பிராந்திய முறைமைகளை வைத்து பெரும்பான்மையரசு சமஷ்டியை நிராகரித்தால் அதை அமுல்படுத்த எவராலும் முடியாது. மீண்டும் இனமுரண்பாடு இலங்கையில் நிலைத்திருக்கும் இதற்கூடாக தமது நிலைப்பு தமிழ் மக்களிற்குத் தேவைப்படும் என்பது தெரிந்துதான் திடீரென சம்பந்தர் திசைமாறினார் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அன்றில் இருந்து இன்று வரை தமிழ் மக்களில் உருக்கம் போல் நடித்து கூட்டமைப்பின் தலைமைகள் வாய்திறந்தால் அதன்பின்னால் பெரும் குழப்பம் பொதிந்திருக்கும். இதற்கு இன்றுள்ள நிலைமை நல்ல உதாரணம். ஒருபோதும் இலங்கையில் சமஷ்டி சாத்தியப்படாது என்பது தெரிந்தும் ஓலமிடுகின்றனர். அதன் அடிப்படை என்னவெனில் காரணம் காட்டிக் கரணமடிக்கப் போகின்றார்கள் கவனம்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

பகுதி -18-
WikiLeaks

# அமெரிக்க தூதரகத்துக்கு வந்த கரும்புலி!

**ஜீவரத்தினம் பாடசாலையில் புலிகள் நடத்திய ஆட்சேர்ப்பு பிரசாரத்துக்கு எடுபட்டு விரும்பி 15 வயதில் இயக்கத்தில் சேர்ந்து இருக்கின்றார். 2003 ஆம் ஆண்டு தற்கொலை குண்டுதாரியாக கரும்புலிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு இருக்கின்றார். பிற்பாடு வட மாகாணத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டார். இவற்றில் ஒன்றாக 6 மாத காலத்தில் வாரம் ஒரு முறை இரு மணித்தியாலங்கள் வகுப்பெடுத்தார்கள், இவ்வகுப்பில் மூளைச் சலவை செய்தார்கள் என்று கூறினார்.**

அன்பார்ந்த நம் வாசகர்களே! அமெரிக்க தூதரகத்தில் புலிகள் இயக்க தற்கொலைக் குண்டுதாரி சந்தேக நபர் சரண் அடைந்தார் என்கிற தலைப்பில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமைக் காரியாலயத்துக்கு 2005 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இம்முறை பார்ப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தற்கொலை குண்டுதாரி என்று சந்தேகிக்கப்படுகின்ற ஆள் ஒருவர் கடந்த 07 ஆம் திகதி தூதரகத்துக்கு வந்தார். அரசியல் தஞ்சம்வேண்டுமென்று கோரினார். இவரால் அமெரிக்காவுக்கோ, அமெரிக்க அமைப்புகளுக்கோ, அமெரிக்கர்களுக்கோ ஆபத்து இல்லை என்று நேர்காணலில் உறுதிப்படுத்தினோம். பிற்பாடு இவர் பொலிஸில் கையளிக்கப்பட்டார். தூதரகத்தின் பாதுகாப்பு நடைமுறையில் மாற்றம் செய்யவேண்டிய தேவை கிடையாது.



### கரும்புலி வந்தார்

கரும்புலி என்று சொல்லி ஆள் ஒருவர் தூதரக வாசலில் வந்து நிற்கின்றார் என்றும் அமெரிக்கன் ஒருவருடன் பேசவேண்டும் என்று கோருகின்றார் என்றும் எமக்கு அறிவிக்கப்பட்டது. தூதரகத்தில் கடமையாற்றுகின்ற நன்றாக தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்மூலம் இவர் பேட்டி காணப்பட்டார்.

வந்தவரின் பெயர் ஜீவரத்தினம். மட்டக்களப்பில் காத்தான்குடியை சேர்ந்த தமிழர். இவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 832383171V. புலிகள் இயக்கத்தைவிட்டு விலக விரும்புகின்றார் என்று சொன்ன இவர் அமெரிக்கா செல்ல உதவிசெய்ய வேண்டும் என்று கோரினார்.

இவருடன் எச்.எச்.ஆர். சந்தன என்பவர் கூடவே வந்திருந்தார். இவரின்

### ஊடுருவி

அடையாள அட்டை இலக்கம் 673500927. இவர் சவுத் ஏசியன் ட்ரவல் கம்பனியில் வேலை பார்க்கின்றார்.

ஜீவரத்தினம் ஒரு கரும்புலி என்றும் கருணா அம்மானை அல்லது டக்ளஸ் தேவானந்தாவை கொல்கின்ற நடவடிக்கைக்கு அமர்த்தப்பட்டு இருந்தார் என்றும் மொழிபெயர்ப்பாளர் கூறினார்.

ஜீவரத்தினம் பாடசாலையில் புலிகள் நடத்திய ஆட்சேர்ப்பு பிரசாரத்துக்கு எடுபட்டு விரும்பி 15 வயதில் இயக்கத்தில் சேர்ந்து இருக்கின்றார். 2003ஆம் ஆண்டு தற்கொலை குண்டுதாரியாக கரும்புலிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு இருக்கின்றார். பிற்பாடு வடமாகாணத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டார். இவற்றில் ஒன்றாக 6 மாத காலத்தில் வாரம் ஒரு முறை இரு மணித்தியாலங்கள் வகுப்பெடுத்தார்கள். இவ்வகுப்பில் மூளைச்சலவை செய்தார்கள் என்று கூறினார்.

இவர் ஒரு மட்டக்களப்பு தமிழர் என்பதால் கருணா அம்மானை அணுகி படுகொலை செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டு மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டார் என்றும் மொழிபெயர்ப்பாளர் கூறினார். அத்துடன் வவுனியாவுக்கும், வடமத்திய மாகாணத்துக்கும், மட்டக்களப்புக்கும் மாறி மாறி பயணம் செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டும் உள்ளார். அத்துடன் கருணா அம்மான், டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்பில் உள்ள சில நபர்களை அடையாளம் காணவேண்டும் என்றும் பணிக்கப்பட்டார்.

### ஏன் வெளியேறுகின்றார்?

குடும்பம் சம்பந்தப்பட்ட பின்னணியிலேயே இவர் புலிகளைவிட்டு விலக விரும்புகின்றார் என்று மொழிபெயர்ப்பாளர் சொன்னார். வீட்டுக்கு சென்று குடும்ப உறுப்பினர்களை காணவேண்டும் என்று புலிகளை திரும்ப திரும்ப கேட்டு இருக்கின்றார். ஆனால் முடியாது என்று ஒவ்வொரு தடவையும் சொல்லிவிட்டனர். இவர் ஒரு முக்கிய பிரிவில் கடமை புரிகின்றார் என்று காரணமும், விளக்கமும் சொன்னார்கள். இச்சூழலிலேயே இவர் புலிகள் இயக்கத்தை விட்டு விலக விரும்பினார்.

இவர் அண்மையில் எச்.எச்.ஆர். சந்தனவை படுகொலை செய்ய அனுப்பி வைக்கப்பட்டார். சந்தன மட்டக்களப்பில் தமிழ் பெண் ஒருவரை திருமணம் செய்து வாழ்கின்றார். இராணுவத்துக்கு தகவல் வழங்குகின்றார் என்பதற்காகவே சந்தனவை கொல்ல சொன்னார்கள். ஆனால் சந்தனவின் மனைவி நெருக்கமான உறவினர் என்று ஜீவரத்தினம் கண்டுகொண்டார். அத்துடன் சந்தன அரசாங்கத்தின் உளவாளி அல்லர் என்றும் கண்டுகொண்டார். இந்நிலையிலேயே புலிகள் இயக்கத்தில் இருந்து தப்ப சந்தனவின் உதவியைக் கேட்டு இருக்கின்றார். இதன் பிற்பாடுதான் தூதரகத்துக்கு வரவும், புகலிடம் கோரவும் தீர்மானித்தார்.

ஆனால் புலிகளால் அமெரிக்காவுக்கோ, அமெரிக்க அமைப்புகளுக்கோ ஆபத்து உள்ளதா?, இல்லையா? என்பது குறித்து தெரியவில்லை என்று இவர் கூறுகின்றார் என்று மொழிபெயர்ப்பாளர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். நேர்காணலின் முடிவில் ஜீவரத்தினமும், சந்தனவும் பொலிஸில் கையளிக்கப்பட்டார்கள்.

### தற்கொலை அங்கியால் பரபரப்பு

ஆனால் ஜீவரத்தினம் பொலிஸில் கையளிக்கப்பட்டு சில நேரத்தில் பிரதமரின் வாசஸ்தலத்துக்கு அருகில் தற்கொலை அங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. பிரதமரின் வாசஸ்தலம் தூதரகத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில்தான் உள்ளது. தற்கொலை அங்கிக்கும், ஜீவரத்தினம் தூதரகத்துக்கு வந்த சம்பவத்துக்கும் தொடர்பு இல்லாத போதிலும் புலனாய்வுகளை முடுக்கி உள்ளனர் என்று படைத்தரப்பை சேர்ந்த பலரும் எமக்கு தெரிவித்தனர். இவர் ஒரு கரும்புலி என்றும் அமெரிக்கா செல்ல உதவி கேட்டு தூதரகத்துக்கு வந்தாரே ஒழிய அமெரிக்க தூதரகத்தை தாக்க வந்திருக்கவில்லை என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்தது என்று கூறினார்கள்.

தூதரகத்தின் அவசர நடவடிக்கை குழு இன்று கூடியது. தற்போதைய தகவல்களின்படி தூதரகத்தின் பாதுகாப்பு நடைமுறையில் மாற்றம் செய்யவேண்டிய தேவை கிடையாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் தூதரகத்தின் கண்காணிப்பு குழுவினரும், காவலர்களும் விழிப்பாக செயற்படவேண்டும் என்று எம்மால் அறிவுறுத்தப்பட்டார்கள்.

இன்று மாலை ஸ்ரீலங்கா உள்ளக புலனாய்வு சேவை பணிப்பாளரை சந்தித்துப் பேசினோம். இப்புலனாய்வு விசாரணைகளில் இவரின் உத்தியோகத்தர்களும் பொலிஸாருக்கு உதவுகின்றனர் என்று தெரிவித்தார். அத்துடன் தூதரகத்துக்கோ, அமெரிக்கர்களுக்கோ ஆபத்து இல்லை என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறினார்.

தூதரகத்துக்கு நபர் வந்தது தொடர்பாக ஊடகங்கள் செய்திகளை எழுதிக் குவித்தன. ஊடகங்கள் தொடர்புகொண்டு கேட்டபோது நபரை பொலிஸில் ஒப்படைத்தமையை உறுதிப்படுத்தினோம். வேறு எவ்வித கருத்தும் கூறவில்லை.

(யாத்திரை தொடரும்)

# வளரும் வன்முறை வாசலுக்கு வருமா?

# ISIS



பாகிஸ்தானில் இயங்கிவரும் பல்வேறு தீவிரவாத அமைப்புகளில் ஒன்றான டெஹ்ரிக் இ கிலாபத் (Tehreek-i-Khilafat) டான் பத்திரிகைக்கு அளித்த செய்தியில் தனக்கு ISIS தீவிரவாத அமைப்புடன் தொடர்புண்டு என்பதை முதன் முதலாக வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ISIS அமைப்பு தனது இலக்கை அரபுநாடுகளுடன் நிறுத்திக்கொள்ளாது என்பதும், அது உலகம்முழுவதும் தனது இலக்கை செயல்படுத்த அந்தந்த பகுதிகளில் செயல்படும் தீவிரவாதிகளுடனும், தீவிரவாத அமைப்புகளுடன் கைகோர்க்க ஆரம்பித்துள்ளன என்பதும் தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

1990-களில் அல்கொய்தா அமைப்பு எப்படி தனது அமைப்பிற்கு தீவிரவாதிகளையும், பணத்தையும் சேர்த்ததோ அதே வழியைத்தான் ISIS அமைப்பும் பின்பற்றுகிறது.

ஈராக்கின் ISIS ஆரம்பித்த காலத்திலிருந்தே அந்த அமைப்பில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பெரும் பங்கு வகித்துவந்தனர். பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்பான Lashkar-e-Jhangv (Lej) மற்றும் பலுசிஸ்தான், பஞ்சாப் பகுதிகளில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்புகளின் பெரும் எண்ணிகையிலான தீவிரவாதிகள் இந்த அமைப்பில் பெரும் பங்கு வகித்தனர். Lej அமைப்புதான் 2013இல் Gazi Abdul Rasheed பயிற்சி முகாமை ஈராக் நகரத்தில் தொடங்கியது. இம்முகாமில் பயிற்சி பெற்றவர்கள்தான் பின்னாளில் Gazi Force என்ற தீவிரவாத அமைப்பைத் தொடங்கினர்.

பாகிஸ்தானின் தீவிரவாத மற்றும் மதவாத அமைப்புகள் என்றுமே தனித்து இயங்கி வந்ததில்லை. அவைகள் ISIS போன்ற தீவிரவாத அமைப்புகளையே தங்களது முன்னுதாரணமாக வைத்து செயற்பட்டன. எனவே பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்புகளுக்கும் ISIS அமைப்புக்கும் இடையே கொள்கை ரீதியாகவும், தாக்குதல்ரீதியாகவும் தொடர்பு ஏற்படுவது இயற்கையானது தான். இதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லைதான்.

ஈராக்கில் போர் முடிந்ததும் இந்த தீவிரவாதிகள் பாகிஸ்தான் திரும்புவார்கள். பாகிஸ்தானில் மிகப்பெரும் தீவிரவாத தாக்குதல்களை இவர்கள் நடத்துவார்கள். ஏற்கனவே ஷியா இனத்தவர்மீது மிகப் பெரும் இனப்படுகொலை நடத்திவரும் பாகிஸ்தான் சுன்னி பிரிவு தீவிரவாத அமைப்புகளான பாகிஸ்தான் தலிபான், லஷ்கர், தொய்பா மற்றும் Lej அமைப்பினர் மிகப்பெரிய தாக்குதலை பாகிஸ்தான் மற்றும் உலக ஷியா இனத்தவர்மீது நடத்துவார்கள். அவர்களின் தாக்குதல் ஷியா இனத்தவர்மீது மட்டுமே இருக்காது.

அவர்களின் பொது எதிரியான இந்தியாவும் அவர்களின் இலக்கில் கண்டிப்பாக உண்டு. இவர்களை எதிர்கொள்ள இந்திய மக்களும் இந்திய அரசாங்கமும் தயாராக இருக்கிறார்களா? என்பதுதான் இப்போதைய மிகப்பெரிய கேள்வி. வந்தபின் காப்பதைவிட வரும்முன் காப்பது நல்லது என்பது பழைய பழமொழி. ஆனால் இந்திய அரசாங்கம் எப்போதுமே கற்றுக்கொள்ளாத பழமொழி!

(முற்றும்)





38

# முதுமையிலும் புதுவாழ்வு கண்ட மண்டேலா!!

நீண்டகாலத்திற்குப் பிறகு சந்தித்ததால் இருவருக்கும் பேச்சு வராமல் இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர்தான் வெளிவந்தது. ஜோங்கிந்தாபாவை காலத்தின் கோலம் மாற்றியிருந்தது. அவரது கம்பீரமான நடை, உற்சாகமான பேச்சு, கல கலப்பான சிரிப்பு, மிடுக்கான பார்வை ஒன்றுமேயில்லாமல் அவரது முகம் களையிழந்து சோகமே உருவாக காட்சியளித்தார். நடையிலும் தள்ளாட்டம் தென்பட்டது. தலையிலே நிரம்பியிருந்த வெள்ளை மயிர்கள் அவரது முதுமையின் அடையாளச் சின்னமாகக் காணப்பட்டது.

மண்டேலாவுக்கு அவரை பார்த்தவுடனேயே இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் வலியெடுத்து இரு சொட்டு கண்ணீர் கன்னத்தில் வடிகாலமைத்து கழுத்துவரை கோடிட்டு நின்றது. கண்களை துடைத்தவாறே "அப்பா என்னை மன்னித்துவிடுங்கள், நான் செய்தது மாபெரும் தவறுதான். உங்களை நேருக்கு நேர் எதிர்க்க தைரியமில்லாமல் கோழைத்தனமாக ஊரைவிட்டே ஓடி வந்துவிட்டேன்" என்று கெஞ்சிக்கேட்டான். அவரோ விரக்தியும் கவலையும் ததும்பிய முகத்துடன் "பழையதை பேசி என் ஆத்திரத்தை கிளப்பாதே. நான் அது பற்றிப் பேசவும் கேட்கவும் இங்கே வரவில்லை.

நீங்கள் இருவரும் செய்த நம்பிக்கை துரோகத்தால் நான் மனம் நொடிந்து நோயாளி ஆகிவிட்டேன். உங்களை வளர்த்த பாவத்திற்கு நல்ல பரிசு கொடுத்துவிட்டீர்கள். சரிபோனது போகட்டும். நீ இப்போது எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்? ஜஸ்டிஸ் எங்கே இருக்கிறான்?" என்று கேள்விக்கணைகளை தொடுத்தார். மண்டேலா அதற்கு "ஜஸ்டிஸ் சுரங்க நிர்வாகத்திலே தான் பணிபுரிகின்றான். நான் அலெக்சாண்ட்ரியாவிலுள்ள ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்துகொண்டே சட்டப்படிப்பையும் முடித்து தற்போது பி.ஏ. பட்டதாரியாகிவிட்டேன். எனக்கும் உங்களை பார்க்கவேண்டும் என்று மனது அடிக்கடி அங்கலாய்க்கும். ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு உங்கள் முன்நிற்பேன் என்ற நினைப்பு அதைத் தடுத்துவிடும்.

அவ்வளவு நிகழ்ந்த பின்பும் உங்களை நேருக்கு நேர் சந்திக்கும் திராணியற்ற கோழை நான். நான் பாவி அப்பா. என்னை நீங்கள் மன்னிக்காவிட்டால் கடவுள்கூட என்னை மன்னிக்கமாட்டான்" என்று மன்றாடினான். அவரோ அவன் பேசியதை அசட்டை செய்துவிட்டு, பேச்சை திசை மாற்றினார். "ஜஸ்டிஸ் அங்கே நல்ல படியாக வேலை செய்கிறானா? நானோ, இன்றோ, நாளையோ என்று என்னுயிரை கையில் பிடித்துவைத்திருக்கிறேன். ஊரில் எனக்கு பிறகு என் சொத்துக் களையும் பொறுப்புக்களையும் அலுவலக நிர்வாகத்தையும் கவனிக்கவும், பராமரிக்கவும் அவனை எவ்வாறாவது சம்மதிக்க வைத்து என்னுடன் நீதான் அனுப்பி வைக்கவேண்டும்.

அதுவே எனது இறுதி ஆசை. நீ எனக்கு நன்றிக்கடனாக இதை கண்டிப்பாக செய்தே ஆகவேண்டும்" என்று உறுதியாகக் கூறினார். அதற்கு மண்டேலா "கண்டிப்பாக அவனை உங்களுடன் அனுப்பி வைக்க என்னாலான உதவிகளை செய்வேன்" என்றுகூறி சிசுலுவும் மண்டேலாவும் ஜோங்கிந்தாபாவை தாங்கள் தங்கியிருக்கும் இருப்பிடத்திற்கு சென்றார்கள். கோரும் வந்து ஜோங் கிந்தாபாவை சந்தித்து உரையாடினான்.

மண்டேலா தொலைபேசியூடாக ஜஸ்டிஸுடன் தொடர்புகொண்டு தந்தை வந்திருக்கும் செய்தியைக் கூறினான். அச்செய்தி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு கணம் வியந்து மறுகணம் நெகிழ்ந்து "நாளைக் காலையிலேயே நான் அங்கே இருப்பேன். அவர் எப்படி இருக்கிறார்?, நன்றாக இருக்கிறாரா? அவருக்குத் தேவையானவற்றை செய்து "கொடு" என்று உணர்ச்சி வசப்பட்டவனாக கூறினான். ஜோங்கிந்தாபா அவரது அருமை மகன் ஜஸ்டிஸின் வரு கையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா?!

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

மண்டேலா நண்பர்களின் உதவியை நாடாமல் தானே அலுவலகத்தில் பணிபுரிந்துகொண்டு மிகுந்த பணக் கஷ்டத்தினூடாகவே பட்டப்படிப்பை தொடர்ந்தான். காலமெனும் செடியில் வருடங்கள் எனும் பல பூக்கள் மொட்டென மலர்ந்து சட்டென உதிர்ந்தன. 1942 இல் அவனது சட்டப்படிப்பு நிறைவுக்குவந்து அவனொரு பி.ஏ. பட்டதாரியாகி தனது நீண்டநாள் கனவை நனவாக்கினான். ஆனாலும் பட்டம் கிடைத்ததை நினைத்து அப்போது மண்டேலாவால் குதூகலிக்க முடியவில்லை. உயர்ந்த இலட்சியத்துக்குமுன் பட்டம் ஒரு பொருட்டல்ல என்று நினைக்கும் அளவுக்கு கோர் அவனை நன்றாக மாற்றிவைத்திருந்தான்.

(தொடரும்)

# அணிசேரா இயக்கம்


உலக வல்லரசுகளான ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் அரசியல், இராணுவ, பொருளாதார, விஞ்ஞான துறைகளில் ஜாம்பவான்களாக விளங்கிய காலகட்டத்தில் அபிவிருத்தியடைந்துவரும், மூன்றாம் உலக நாடுகள், குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் வல்லரசுகளின் ஆதிக்கத்தினால் ஏற்பட்ட பாதக நிலைமைகளை கருத்திற் கொண்டனர். நேரடியாக இரு வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலுடன் இணையாமல் மூன்றாவது அணியாக சர்வதேச மேடையில் பல நாடுகளைக் கொண்ட ஒரு அணி உருவாகவேண்டுமென்ற வேட்கையில் இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்தோனசியா ஜனாதிபதி சுகர்ணோ, எகிப்திய ஜனாதிபதி நாசர், யுகோஸ்லேவிய ஜனாதிபதி மார்சல் டிட்டோ, கானா ஜனாதிபதி நிக்கொரோமா ஆகியோரின் கூட்டுமுயற்சியால் மூன்றாவது அணி உருவாகவேண்டும் என்கின்ற சிந்தனை அணிசேரா இயக்கம் உருவாக காரணமாக இருந்தது. அத்துடன் புகழ்பெற்ற இந்திய இராஜதந்திரி V.K. கிருஸ்ணமேனன் அவர்கள் 1953 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையில் உரையாற்றியபோது முதன்முதலாக அணிசேராமை பற்றி பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலப்பகுதியில், 1954 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்திய பிரதமர் ஜவர்கர்லால் நேரு கூட்டுச்சேராமை பற்றி உரையாற்றினார். எல்லாவற்றுக்கும் மேலாக ஜவகர்லால் நேரு இந்திய, சீனா உறவுகளைப் பற்றி எவ்வாறு அமையவேண்டும் என்கின்ற ஐந்து கொள்கைகளை முன்வைத்தார். ஜவகர்லால் நேரு மிகுந்த முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டவர். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் சீனாவுடன் நல்லுறவுகளைப் பேணியவர். இந்திய, சீன உறவுக்கு அவர் முன்வைத்த ஐந்து கொள்கைகளும் ஐந்து தூண்கள் என வர்ணிக்கப்படுகிறது. அவையாவன:

01. ஆள்புல நிலப்பரப்பு, இறைமை ஆகியவற்றை பரஸ்பரம் மதித்தல்.
02.பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை.
03. உள்விவகாரங்களில் தலையிடாமை.
04. சமாதான சகவாழ்வு.

இந்த காலப்பகுதியில் 1995 இல் இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் இடம்பெற்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மகாநாடு அணிசேரா இயக்கத்துக்கு முன்னோடி என வரலாற்றாசிரியர்கள் வர்ணிக்கின்றனர். ஜவகர்லால் நேரு குறிப்பிட்ட ஐந்து கொள்கைகளும் ஏறக்குறைய பாண்டுங் மகாநாட்டின் கொள்கைகளாக அமைந்தன. இந்தோனேசிய ஜனாதிபதி சுகர்ணோவின் முயற்சியே பாண்டுங் மகாநாடாகும். பாண்டுங் மகாநாட்டு கோட்பாடுகளானவை.

01. ஐ.நா. சாசன கோட்பாடுகளின் அடிப்படையில் மனித உரிமை மதித்தல்.
02. சகல நாடுகளினதும் இறைமை, ஆட்புல நிலப்பரப்பு அங்கீகரித்தல்.
03. தேசிய விடுதலை இயக்கங்களை அங்கீகரித்தல்.



04. பெரிய, சிறிய நாடுகளின் சமத்துவம், சகல இனங்களையும் அங்கீகரித்தல்.
05. இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களின் தலையிடாமை.
06. ஐ.நா. சாசனப்படி, ஒவ்வொரு நாடும் தனது உரிமையை பாதுகாக்க தனியாகவோ, கூட்டாகவோ நடவடிக்கையெடுக்கும் உரிமையை மதித்தல்.
07. ஒரு நாட்டின் ஆட்புல நில உரிமையை அல்லது ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தை மீறி அச்சுறுத்தல் விடுக்காமை அல்லது பலம் பாவிக்காமை
08. ஐ.நா. சாசனப்படி சர்வதேச முரண்பாடுகளை சமாதான வழிகளில் தீர்த்தல்
09. பரஸ்பர நலன்களும் கூட்டுறவும்.
10. நீதியையும் சர்வதேச மதிப்பாடுகளையும் மதித்தல்.

இவ்வாறு ஐந்து தலைவர்களும் முன்மொழிந்த பிரேரணைகள் மூலம் உருவாகிய அணிசேரா இயக்கத்தின் முதலாவது உச்சி மகாநாடு யுகோஸ்லேவியா தலைநகர் பெல்கிரேட்டில் 1961 ஆம் ஆண்டு நடைபெற்றது. இரண்டு வல்லரசுகளின் போட்டியான பனிப்போர் காலத்தில் அ.சே.இ அரசியல்ரீதியாக முக்கியத்துவம் பெற்றது. அ.சே. இயக்கத்தின் கொள்கைகள் அடிப்படையில் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. எனினும், நாடுகளுக்கிடையே வர்த்தக உறவுகள் மீள அமைக்கப்பட வேண்டும். தொடர்பாடலில் ஐக்கியம் பேணவேண்டும் என்ற கொள்கைகளையும், பின்னர் நடைபெற்ற மகாநாடுகளில் தீர்மானித்தன. எவ்வாறெனினும் ஆபிரிக்காவில் நிலவிய நிறவெறியும், அதாவது தென்னாபிரிக்கா, ரெடிசியா, (இன்றைய சிம்பாப்வே) நாடுகளில் அன்றைய நிறவெறி ஆட்சியாளர்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களுக்கும், அரபு - இஸ்ரேல் பிரச்சினையில் பலஸ்தீன மக்களின் விடுதலை, சுதந்திரம் ஆகியவற்றுக்காக பெருங்குரலில் ஆதரவு அளித்தமை சாதனைகளாக கருதப்படுகின்றன.

எனினும், காலனித்துவம், பனிப்போர் முடிவுக்குப் பின்னைய காலகட்டத்தில கூ.சே. இயக்கத்தின் முக்கியத்துவமும் தேவையும் கேள்விக்குட்படுத்தப்படுகிறது. ஏனெனில் கூ.சே. இயக்கத்தின் அணிசேராமை என்பது அமெரிக்க - சோவியத் ரஷ்யா பனிப்போருக்குப் பின்னர் தேவையற்றதொன்றாகியது. அத்துடன் பிரிட்டன் பல நாடுகளை முன்னைய காலனிகளைக் கைவிட்டு சுதந்திரநாடுகளாக உருவாகிய பின்னர் விடுதலைக்காக போராடும் நாடுகளும் இல்லையென்ற நிலை.

மாறிவரும் சர்வதேச சமகால பிரச்சினைகளில் எவ்வாறு முகம் கொடுப்பது என்ற தெளிவின்மை அ.சே இயக்கத்தைப் புதிய பாதையில் செல்லநிர்ப்பந்திக்கின்றது. குறிப்பாக அமெரிக்காவின் ஏகவல்லரசு நிலைமையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்க மனப்பான்மையும் உலக விடயங்களில் அ.சே. இயக்கம் கவனம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக: அமெரிக்காவின் தலைமையில் 2003ஆம் ஆண்டு ஈராக்கின் இறைமையை மதிக்காமல் ஆக்கிரமிப்பு செய்தமை, வடகொரியாவின் அணுத்திட்டத்தை அமெரிக்காவின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளும், அ.சே. இயக்கம் அமெரிக்காவை கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் ஏராளமான நாடுகள் வறுமையைத் தணிப்பதற்கு பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டாலும் உலக பொருளாதார முறைமை இந்நாடுகளுக்கு சாதகமாக இல்லை. நிலைத்து நிற்கும் பொருளாதாரத்தை அமைப்பதற்கும் MDG என அழைக்கப்படும் மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் முயற்சித்தாலும் வறுமை பெரும் சுமையாகவே உள்ளது. சர்வதேச பொருளாதார முறைமையைச் சீராக்க வேண்டுமென்று WTO போன்ற மகாநாடுகளில் குரல்கள் ஒலிக்கின்றன.

உலகமயமாதல், கடன் சுமை, நீதியற்ற வர்த்தக கொள்கைகள், குறைந்துவரும் வெளிநாட்டு உதவி, உதவி வழங்கும் நாடுகளில் நிறுவனங்களின் நிபந்தனைகள் நிதி உதவிவழங்கும் நிறுவனங்களின் தீர்மானம் மேற்கொள்ளுதலில் ஜனநாயகத் தன்மை குறைவாக காணப்படுதல், இவ்வாறான சர்வதேச போக்குகள் அபிவிருத்தியடைந்துவரும் அபிவிருந்தியடையாத நாடுகளுக்கு அரசியல், பொருளாதார ரீதியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மாறிவரும் உலக அரசியல் சமன்பாட்டில் அ.சே. இயக்கம் தனது நிகழ்ச்சி நிரலை மாற்றி முன்னுரிமைகளை அடைவதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டும்.

1961 ஆம் ஆண்டு பெல்கிரேட்டில் முதலாவது உச்சி மகாநாட்டை அந்நாட்டு தலைவரின் தலைமை யில் நடாத்தி 16 உச்சி மகாநாடுகளை நடாத்தியுள்ளது. 2012 இல் ஈரான் தலைநகர் தெஹ்ரான் தலைவரின் தலைமை யில் நடைபெற்றது. அடுத்த உச்சி மகாநாடு வெனி வெனிசூலா தலைநகர் கராகஸ் நகரில் இவ்வாரம் நடைபெறவுள்ளது. நூற்றி இருபது அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இப்பாரிய அமைப்பு உச்சி மகாநாட்டில் எந்தவித தீர்மானங்களை முன்மொழியவுள்ளது என்பதை பொறுத்திருந்து அவதானிப்போம்.

—— தேவ தர்மா ——



# மாற்றுத் திறனாளிகளை அபிவிருத்தியில் பங்காளர்களாக்குவோம்

வலது குறைந்தவர்கள் என்றாலே அவர்களது கையில் இருக்கும் வெள்ளைப் பிரம்பு, ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலி, பிரைல் இயந்திரம், கைத்தடி, அத்தோடு கைத்தாங்கலாக உதவும் ஒருவர் இவைதான் எமக்கு நினைவிற்குவருபவை.

மாற்றுத் திறனாளிகள் என்று கூறப்படுகின்ற வலதுகுறைந்தோரின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் அவர்களது உடல் மற்றும் உளரீதியான வசதிகளுக்கும் இவை இருந்தால் போதும் என்றுதான் நம்மில் பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றோம்.

சமூக நிலைப்பாடுகளின் விளைவாக பெரும்பாலும் தமது குடும்ப உறுப்பினர்களின் அல்லது நண்பர்களின் அல்லது பரோபகாரிகளின் உதவி ஒத்தாசையுடன் வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இந்த வலது குறைந்த மக்களுக்கு ஏற்பட்டு விடுகின்றது.

அவர்களது தினசரிக் கருமங்களின் ஒவ்வொரு கட்டத்திலும் இன்னொருவரின் நேரமும் இன்னபிற வளங்களும் தேவைப்படுகின்றன.

வலது குறைந்த மக்களின் வித்தியாசமான வாழ்க்கை முறைக்குப் பொருத்தமான வசதிவாய்ப்புக்கள், மற்றும் தொழிநுட்பங்கள் கொண்ட அமைப்புக்கள் நிறுவப்படாவிட்டால் இந்த வலதுகுறைந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் 1.6 சதவீதமானோர் அதாவது 274711 பேர் வலது குறைந்தோர் என்கின்ற கணக் கெடுப்புக்கள் இருக்கின்றன.

ஆனால், இந்த புள்ளிவிவரம் 2001 ஆம் ஆண்டினுடையதாக இருப்பதோடு வடக்கு, கிழக்கின் வலது குறைந்தோர் இதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் தெரிகிறது.

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளினால் அங்கவீன மடைந்து கதியற்றுப் போயிருக்கும் பல்லாயிரக்கணக்கானோரின் பட்டியலும் நீண்டுசெல்கின்றது. இதேவேளை, பாதுகாப்புத் தரப்பினரில் கணிசமான எண்ணிக்கையினரும் ஆயுத மோதல்களின் விளைவாக அங்கவீன மாகிப் போயிருக்கிறார்கள். அதேவேளை அவர்களது சேமநலன்களில் அக்கறை காட்டும் பல ஏற்பாடுகள் உண்டு.

“ஒன்றிணைந்த அபிவிருத்திக்கான நகர்வு, வலதுகுறைந்த நபர்களுக்கான அபிருத்தியின் கதவினை திறந்திடுவோம்” என்ற தொனிப்பொருளில் வலது குறைந்தோருக்கான அபிவிருத்தி வலையமைப்பின் ஏற்பாட்டில் ஏற்கெனவே பல மாநாடுகள் நடந்திருக்கின்றன.

வலதுகுறைந்தோரை அபிவிருத்தியின் பங்காளர்களாக உருவாக்குவதோடு வலது குறைந்தவர்களை அனைத்து அம்சங்களிலும் கவனத்தில் எடுக்கவேண்டும் என்பது கொள்கையளவிலும் சட்டஅங்கீகாரத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்துவதுதான் பெரிய சவாலாக உள்ளது.

வலது குறைந்தவர்களுக்கு வாய்ப்பளிப்பதுதான் மிகவும் பொறுப்புவாய்ந்த விடயம். அவர்களுக்கென்று விஷேட திட்டங்கள் இருக்கின்றன என்று வெறுமனே கூறிவிட்டு நமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

வலது குறைந்தவர்களின் விருப்பு வெறுப்புக்கள் இதில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். புறம்பான திட்டங்களை மாத்திரம் அவர்களுக்கென கொண்டுவருவது அபிவிருத்தியின் கொள்கையாக இருந்து விடக்கூடாது. பிரதான அபிவிருத்தியின் பங்காளர்களாக வலது குறைந்தவர் களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

வலது குறைந்தவர்களுக்கான அபிவிருத்தி என்கின்ற ஒன்றும் வலது குறைந்தவர்களை உள்வாங்கிக் கொள்ளும் அபிவிருத்தி என்கின்ற மற்றொன்றுமாக இரண்டு விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

வலது குறைந்தவர்களுக்கான விசேட தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதன்மூலம் அவர்களுக்குள் மறைந்திருக்கின்ற ஆற்றல்களை வெளியே கொண்டுவர முடியும். இவை நடந்தால் ஏனையவை இயல்பாகவே நிறைவேற்றப்பட்டுவிடும். இதற்கு முன்பாக செயற்பாட்டாளர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதுதான் பெரிய சவால்.

வலது குறைந்தோர் பற்றிக் கதைக்கின்றபோது சாதாரணமானவர்களுக்கு உள்ளதுபோல அவர்களுக்கும் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் என்பன தேவைதான்.

ஆயினும், இயல்பாக உடலாற்றல் உள்ளவர்களைப் போல் இந்த அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் வலது குறைந்தோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள் கின்றார்கள். அவர்கள் வாழ்வதற்காகப் போராடவேண்டியிருக்கின்றது. அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் சொல்லுந்தரமன்று.

வலது குறைந்தோரும் சாதாரண ஒரு பிரஜையாக கௌரவத்துடன் வாழ்வதற்கு போட்டியும் நெருக்கடியும் மிகுந்த இந்த வாழ்க்கை முறையில் பலவிதமான தடைகளும் சவால்களும் நிறைந்து காணப்படுகின்றன.

சுதந்திரமான அல்லது தடைகளற்ற சூழல் என்பது பால், வயது, உடலாற்றல், என்பனவற்றுக்கு அப்பாற்பட்டது. அப்படியாயின் வைத்தியசாலைகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், நீர் பெறும் இடங்கள், சந்தைகள், போக்குவரத்து இடங்கள், பொழுதுபோக்கு இடங்கள், நிர்வாக அலுவலகங்கள், பாதைகள், குடியிருக்கும் வீடுகள் என்பவை ஏன் வலது குறைந்தவர்களுக்கு சவால் நிறைந்த ஒன்றாக மாறியிருக்க வேண்டும்?

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

வயோதிபர்கள், இளஞ்சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார், சக்கர நாற்காலியும் உதவி உபகரணங்களும் பாவிப்போர், காயமடைந்தோர், புலன் இழந்தோர் மற்றும் அனைவரும் விஷேட தேவையுள்ளவர்கள் என்ற வரையறைக்குள் அடங்குகிறார்கள்.

எனவே இந்த விஷேட தேவைகள் உள்ளோருக்கு விஷேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதுதான் இங்கு கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய விடயம்.

இடர்கள் ஏற்படும்போது சாதாரண-மாக இயன்றவர்களைவிட வலது குறைந்தோர் இன்னமும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இடர்முகாமைத்துவம் மற்றும் உள்கட்டுமானம் போன்ற விடயங்களில் வலதுகுறைந்தோர் பற்றி முக்கிய கரிசனை காட்டப்படவேண்டும்.

வலது குறைந்தோருக்கான சட்ட உரிமைகளைப் பாதுகாத்தால் முழுச் சமுதாயமும் நன்மையடையும். வலது குறைந்தோரைப் பாதுகாக்கக் கூடிய நீதி மன்றத்தின் தீர்ப்புக்கள் இருக்கின்றன. சட்டத்தை அமுலாக்குவதில் பல இடைவெளிகள் காணப்படுகின்றன.

சமூகத்தில் ஒவ்வொரு சாராரும் இந்த விடயத்தில் ஒரு பாத்திரப் பங்கை வகிக்கவேண்டியிருக்கின்றது. அதற்காக வலுவுள்ளோர் தமது கண் களையும் இதயத்தையும் திறந்து வைக்கவேண்டும்.

அடிமட்டத் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பங்களில் வலது குறைந்தோர் உள்வாங்கப்படவேண்டும். அவர்களுடைய முனைப்பான பங்கேற்பு இடம் பெறாவிட்டால் வலதுகுறைந்த சமுதாயத்தினர் அவர்கள் தம்மை வலுவூட்டிக் கொள்ளமுடியாமல் போய்விடும்.

எவரும் ஒரு கண்ணியத்துடன் வாழ்வதற்குப் பொருளாதார சுதந்திரம் தேவை. மற்றவர்களில் கூடுதலாகத் தங்கியிருந்தால் சுயகௌரவம் என்பது கேள்விக்குறியாகிவிடும். அவர்கள் தமது பொருளாதார சுதந்திரத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளக்கூடிய வழிமுறை இருக்க வேண்டும் மனிதக்கேடுகளாயினும் இயற்கை இடர்களாயினும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய முதலாவது தரப்பினர் இந்த வலுவிழந்தோர்தான்.

சமூகம் இன்னமும் வலதுகுறைந்தவர்களை எவ்வாறு அபிவிருத்தியில் உள்வாங்கிக்கொள்வது என்று தெரியாமலிருக்கின்றது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஒட்டுமொத்த சமூகமுமே முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கின்றது.

உள்ளூர் மட்டத்தில், சமூக மட்டக்குழுக்களில் தொடங்கி அரசியல் வாதிகள்வரை இந்த விழிப்புணர்வின் தாக்கம் உணரப்படவேண்டும்.

கட்டிடங்களுக்கு அனுமதி வழங்குகின்றபொழுது நிபுணத்துவ அறிவில்லாத நிலைமையினால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. உள்ளூர் மட்டத்தில் நிபுணத்துவம் இல்லை. சாதாரண நிலையிலுள்ள ஒருவர் மலசலகூடத்தைப் பாவிப்பதற்கும் வலதுகுறைந்த ஒருவர் அந்த அணுகும் வசதியைக் கொண்டிருப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. தற்போது உள்ள வீதிகளிலும் பொதுக் கட்டிடங்களிலும் வலுவிழந்தோர் நன்மையடைய முடியாத நிலையுள்ளது.

நம்மில் எவருமே முதுமையிலிருந்து தப்பிக்கமுடியாது. 2020 ஆம் ஆண்டாகும்போது நாலுபேருக்கு ஒருவர் அதாவது மொத்த சனத்தொகையில் கால்வாசியினர் வயது முதிர்ந்தோராக இருப்பர். அந்த ஆண்டை நாம் அடையும்போது இப்போதுள்ள வசதிகள் வலுவிழந்தோருக்குப் போதுமானதாக இருக்காது. சமூகத்தில் பெருந்தொகையானோர் இவ்வாறு ஒரு பிரச்சினையை எதிர்கொள்வது ஒரு சவாலாகவும் வாய்ப்பாகவும் இருக்கும்.

கல்வி, நிர்வாகம், போக்குவரத்து, சமூக சேவைகள், வாழ்வாதாரத் திட்டங்கள் என அரசு வழங்கும் சேவைகளில் வலதுகுறைந்தவர்கள் கூடுதலாக வைத்திய சேவையைத்தான் நாடியிருக்கின்றார்கள் என்பது ஒரு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கல்வி, தொழில்வாய்ப்பு வாழ்வாதாரம் வருமானம் ஈட்டும் முயற்சிகள், அரச சேவைகள், தொழிநுட்பப் பயிற்சிகள் என்பனவற்றில் வலது குறைந்தவர்களுக்கு வாய்ப்புக் கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டிருக்கின்றது.

பல்வேறு பாரபட்சமான சமூக ஓரங்காட்டல்கள்காரணமாக வலது குறைந்த மக்களிடம் சமூக உளவியல் தாக்கம் உள்ளது. அவர்களது பரிந்துரைகள், பாதுகாப்பு, அவர் களுக்கான அணுகும் வசதிகள், உள்வாங்கும் வசதிகள், மேலதிகத் தேவைகள், பங்கேற்கும் ஆற்றலை அதிகரித்தல், சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, அனுபவங்களைப் பகிரும் வாய்ப்புக்கள் என்பன அதிகரிக்கப்படவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக வலதுகுறைந்தோருக்காக அமுலாக்கும் செயல்திட்டங்களில் கொள்கை, நடைமுறை, அறிவு, அர்ப்பணிப்பு எல்லாம் ஒன்றிணையவேண்டும். ஒட்டுமொத்தத்தில் சமூக மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் நீண்டகால நோக்கில் பரப்புரைசெய்து மக்களின் மனநிலையை மாற்றவேண்டும்.

# ஆரம்பக் கல்வி மாணவர்களின் பதற்ற நிலை



பயம், கோபம், பொறாமை என்பவற்றுடன் இணைந்த பிறிதொரு மனவெழுச்சியாக பதற்றம் அமைகின்றது. கவலை தொடர்ச்சியாகவும் செறிவுடனும் செயற்படும் பொழுது பதற்றத்திற்கு இட்டுச் செல்லப்படுகின்றது. பதற்றம் உளவியல்சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு காரணம். சிறாரினால் அதற்குரிய காரணங்களை அறிய முடியாமையாக இருக்கலாம். மகிழ்ச்சி நேர்ப்பண்பு வாய்ந்த ஒரு மனவெழுச்சி என்று கொள்ளப்படும். ஓர் அடைவை அல்லது இலக்கை ஓர் ஊக்கலின் விளைவால் அடையப்பெறும்பொழுது ஏற்படும் திருப்தியே மகிழ்ச்சியாகக் கொள்ளப்படும். ஊக்கல் என்பது உயிரியல் சார்ந்ததாக இருக்கலாம். செயற்பாடுகள் சார்ந்ததாக விளங்கலாம். சமூக ஊக்கங்களாகத் தொழிற்படலாம்.

பதற்றநிலையில் காணப்படும் மாணவர்களின் மனநிலையானது பின்வரும் நிலைகளில் காணப்படும். கை கால் குளிர்தல், உடல் பலவீனம், உடல் மெலிவு, சோர்வு, களைப்பு, படபடப்பு, பசியின்மை, அடிக்கடி சலங் கழித்தல், வியர்வை, அந்தரப்படல், நடுங்குதல் போன்ற உடல் குறைபாடுகளுடன் கவலை, விரக்தி, பயம், ஏக்கம், வெட்கம், அங்கலாய்ப்பு, குழப்பம், திகைப்பு, மனச்சோர்வு, பதற்றம், விடுபட்ட நிலை, பொருத்தமற்ற சிரிப்பு, நம்பிக்கையின்மை, திக்கற்ற மனநிலை, எதிர்பார்ப்பு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவர்.

எனவே, இவ்வாறான பதற்ற நிலையுடன் ஆரம்ப கல்வி மாணவர்கள் காணப்படுவார்களானால் அவர்கள் கல்வியில் பாரிய பின்னடைவில் காணப்படுவர். நகர்ப்புறங்களை பார்க்கும் போது தரம் - 1இற்கு உள்வாங்கப்படும் மாணவர்கள் பெரும்பாலும் முன்பள்ளி சென்றவர்களாகக் காணப்படுவர். எனவே முன்பள்ளி ஆசிரியர் ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் அக்கறை செலுத்தும்போது பதற்றநிலையில் காணப்படும் சிறார்களை அறிந்து அவர்களின் பெற்றோருக்கு இது தொடர்பாக ஆலோசனை வழங்கி இருப்பர். ஆனால் கிராமம், பெருந்தோட்ட பகுதி சிறார்களில் பெரும்பாலானோர் முன்பள்ளி செல்லாது நேரடியாகவே தரம் - 1 இற்கு உள்வாங்கும்போது ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

குழந்தை கருவிலிருக்கும்போதே தனது தந்தையின் குரலொலியை உணர்கிறது. தந்தையின் குரலொலியை கேட்டு அதிகப்படியான அசைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே பெற்றார் குழந்தை கருவில் இருக்கும்போதே நல்ல விடயங்களை கதைத்தல், சிந்தித்தல் போன்றவற்றுடன் தாயிற்கு கணவனின் அன்பு, ஆதரவு, குடும்பத்தாரிடையே மகிழ்ச்சி, தாய்க்குப் போதிய ஓய்வு, வேலைகளில் பங்கு, போசாக்கு, மருத்துவ உதவி, ஆன்மீகம், பொழுதுபோக்கு போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். எனவே தாயின் உணர்வை குழந்தையும் உணர்கிறது. இதையறிந்து பெற்றார் உணர்வுபூர்வமாக நடந்துகொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் குழந்தைகள் மனவெழுச்சி நிலையிற்கு தள்ளப்படுவர்.

இப்பதற்ற நிலையுடன் காணப்படும் மாணவர்கள் மொழி விருத்தியில் மாத்திரமின்றி ஏனைய பாடங்களிலும் பின்னடைவில் உள்ளனர். அத்துடன் இணை பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போதும்கூட அவற்றிலும் பின்தங்கிய நிலையை காணக்கூடியதாக உள்ளது. எனவே இவ்வாறு இவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்று இவர்களை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் உதாசீனப்படுத்திவிடமாட்டார்கள். அவர்களுக்கென்று பரிகார கற்பித்தலை மேற்கொள்ளுகின்றனர். இவ்வாறு இவர்களுக்கு கற்பிக்கும்போது ஏனைய மாணவர்களின் கல்வி செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. அதாவது இவர்களுக்கு கற்பிக்கும் பாடநேரம் குறைவடைவதும் ஒரு பிரச்சினையாகவே உள்ளது. அத்துடன் இவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களான முதன்மைநிலை ஒன்று, முதன்மை நிலை இரண்டு, முதன்மை நிலை மூன்று ஆசிரியர்களும் இவர்களுக்கு வழிகாட்டுவதற்கென்று பிரத்தியேகமான வழிகாட்டல் பாடநெறியை கற்பிக்கும் அவசியமும் ஏற்படுகின்றது. அவ்வாறின்றி பாடசாலைகளில் இவர்களுக்கென்று பிரத்தியேகமான கற்பித்தலை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். இவை பொதுவாக பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். இவ்வாறு இவர்களுக்கு பிரத்தியேகமாக கற்பிக்கும்போது மேலும் உளவியல்ரீதியான பிரச்சினைக்கு இட்டுச் செல்லும்.

"குழந்தையானது கருவில் இருக்கும் போதே கற்றுக்கொள்கிறது" என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே ஒரு குழந்தையை அறிவாளியாகவும், நன்னடத்தை கொண்டவனாகவும், மனவெளிச்சியற்றவனாகவும் பெற்றெடுப்பது பெற்றோரின் கடமையாகும். இந்த மனவெழுச்சிப் பதற்ற நிலை குழந்தையிடம் ஏற்படுவதற்கு பெற்றாரும் ஒரு காரணகர்த்தாவாகின்றனர்.

இவர்கள் நேரடியாக தரம் -1இற்கு உள்வாங்கப்படும்போது இவர்களை இனங்காணும் செயற்பாட்டில் இவர்களின் பதற்றநிலையை அறிய முடிவதில்லை. காரணம் இச்செயற்பாடு பெரும்பாலும் விளையாட்டுடன்கூடிய செயற்பாடாக காணப்படுவதேயாகும். எனவே இவர்களின் மனவெழுச்சியை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது.

கடந்த காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் சமயத்தில் குறிப்பிட்ட மாணவர்கள் பத்து வயதை பூர்த்தி செய்தால் மாத்திரமே பரீட்சைக்கு தோற்றமுடியும் என்ற நிபந்தனை காணப்பட்டது. ஆனால் தற்போது தரம் 5இல் கல்வி பயிலும் அனைவரும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பதற்ற நிலையில் காணப்படும் மாணவன் தரம் -5இனை எட்டும்போது அவன் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றான். எனவே இவர்களின் பெறுபேறு வீழ்ச்சியுறும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பாடசாலையின் பெறுபேற்றின் சராசரியும் வீழ்ச்சியுறும். அத்துடன் வலய மட்டத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிட்ட வலயமும் பெறுபேற்றின் அடிப்படையில் வீழ்ச்சி போக்கினை காட்டும். எனவே இந்தப் பதகளிப்பு நிலையினை ஆரம்பத்தில் கண்டறியாது கைவிடுவதால் பாடசாலை, கோட்டம், வலயம் என்பன புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் வீழ்ச்சி நிலையில் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

எனவே இவ்வாறான நிலையை நிவர்த்தி செய்ய பெற்றாரும் பங்களிக்க வேண்டும். பாடசாலைகளில் முதன்மை நிலை ஒன்றிலே பதற்றநிலையுடன் காணப்படுவதால் மொழி விருத்தியில் பாரிய பின்னடைவை சந்திக்கின்றனர். குழந்தையில் இயக்கச் சக்தியும் மொழி வளர்ச்சியும் சரி சமமாக நடக்கிறது. பிள்ளையின் இயக்கச் சக்தி குறையும் போது மொழி வளர்ச்சி குறைகின்றது. உடலை ஆட்டி அசைத்தல்மூலம் குழந்தை தனது இயற்கையான அனுபவ உலகத்தினுள்ளே நுழைகிறது. இந்த தொழிற்பாடுகள்மூலம் கிட்டிய உலகிற்கு குழந்தை தன்னை நுழைக்கிறது. தனது வளர்ச்சியை முன்னேற்றுகின்றது. குழந்தை நான் எனும் உணர்வை தருவதற்கு தன்னை சுற்றியுள்ள உலகத்தை அறிவதற்கும் உடம்பு தான் திடமான ஆரம்பமாக அமைகின்றது. அனுபவம்மூலம் தான் மொழி கட்டியெழுப்பப்படுகின்றது. எனவே இவ்வாறான குழந்தைகளுக்கு ஆரம்ப நிலையிலேயே பரிகார கற்பித்தலை மேற்கொள்ளாதுவிடின் அவர்கள் மொழி விருத்தி தொடர்பாக பின்னடைவை எதிர்நோக்குவர். மொழி தொடர்பாக பிரச்சினை காணப்படுமாயின் ஏனைய பாடங்களை கற்பதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றது. இதனால் முதன்மை நிலை ஒன்றில் அடைய வேண்டிய தேர்ச்சியை அடையாத போது முதன்மைநிலை இரண்டிலும் பின்தங்கிய நிலை காணப்படும். இவ்வாறு இப்பிரச்சினை முதன்மை நிலை மூன்று வரையும் தொடர்ந்து செல்கிறது.

சில உளவளத்துறை நிபுணர்கள் இந்த பதற்றம் தொடர்பான தங்களது கருத்துக்களைக் கூறியுள்ளனர். உளநலம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை செம்மையடைய செய்ய ஆசிரியர்கள் முயலும்போது அவர்களை மற்றவர்கள் முன்பு அடையாளப்படுத்தி, தனிமைப்படுத்தி அணுகுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும். முடியுமானவரை ஏனைய மாணவர்களுடன் இணைந்த செயற்பாடுகளின்மூலம் உளநலக் குறைபாடுள்ள பிள்ளைகளை செம்மையாக்கல் நல்லது என்று தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்ட சிறுவர் உளநலம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கற்பித்தலை மேற்கொள்ளும்போது இரு தரப்பினருக்கும் தரமான கல்வி செயற்பாடுகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்குவது என்பது சிரமமாகவே காணப்படுகிறது. இதனால் இருதரப்பினரும் அடையவேண்டிய தேர்ச்சி மட்டம் குறைவடைந்து செல்லும்.

T.தவப்பிரியா (ஆசிரியர்)
மே மா ஹொரண எல்லகந்த
தமிழ் மகா வித்தியாலயம்

இந்த பதற்றநிலை கொண்ட மாணவர்கள் சரியான காரணம் இல்லாமலே அடிக்கடி அல்லது எந்நேரமும் அழுதல், நித்திரை குறைவாக இருத்தல் அல்லது நித்திரை குழம்புதல், பயங்கரமான கனவுகளை காணுதல், அளவுக்கு மிஞ்சிய பயத்தினால் நடுங்குதல், உணவிலே அக்கறை செலுத்தாமல் இருத்தல், படுக்கையை அல்லது வகுப்பறையை நனைத்தல், முரட்டுத்தனம் காணப்படல், மூர்க்கத்தனமான சுபாவம் உடையவராக இருத்தல், தேவை எதுவுமின்றி உரக்கச் சத்தமிடல், அதிகளவிலே ஒதுங்கி இருத்தல், ஞாபகக் குறைவு ஏற்படல், ஒழுங்கற்ற பாடசாலை வரவு காணப்படல், வேலைகளை செய்து முடிக்க இயலாமல் இருத்தல் போன்ற குணப் பண்புகளை கொண்டவர்களாக காணப்படுவர். இவர்கள் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வது சவாலாகவே காணப்படுகிறது.

எனவே, இந்த பதகளிப்பு நிலையை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து பரிகாரம் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இது பொதுமைப்படுத்தப்பட்ட பதற்ற நிலையாக மாற்றமடையும் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.



# காதலோ! காதல்!

## முதல் இதய மாற்றுச் சிகிச்சை

இந்த நோக்கு என்ன செய்தது என்பதைக் கவிஞன் மேலும் சொல்கிறான். கவிகளின் கருத்துப்படி ஆடவர் உடலில் மிகக் கவர்ச்சியான பகுதி தோள்களும், பெண்டிர் உடலில் தனங்களும். ஆம். அவையே வேட்கையை விளைப்பதில் சிறந்த உறுப்பெனக் கொள்ளப்படுவன. ஆக இந்தக் கருத்துக்கேற்ப யார் யாருடைய நோக்கு எது எதன் மேல் பதிந்தது என்பதைக் கம்பன் குறிப்பிடு வான். சீதையுடைய நோக்கு இராமனுடைய தோள்களிலும், இராமனுடைய நோக்கு சீதையின் தனங்களிலும் பதிகின்றன. ஒவ்வொருவருக்கும் கண்கள், இரண்டு. ஆண்களுக்கு இருதோள்கள், பெண் களுக்குத் தனங்கள் இரண்டு. ஆக இருவருடைய கண்ணிமைக்கும் இரண்டு இலக்குகளும் கிடைத்துவிடுகின்றன. இந்த இலக்குகளில் அவ்விருவர் நோக்குகளும் பதிந்தவிதத்தையும் அவரவர் தன்மைக்கு ஏற்பக் கவிஞன் எடுத்துக்காட்டுவதிலும் நயமும் சிறப்பும் இருக்கின்றன.

சீதையின் கண்களைக் கூர்மையுடைய இரண்டு வேலாயுதங்கள் என்று கவிஞன் கூறுவான். அத்தகைய வேலாயுதங்கள் வலிமையுடைய இராமனுடைய தோள்களில் ஆழ்கின்றன. இராமனுடைய கண்களுக்கு இவ்வாறு உவமை எதுவும் கூறாமல் வெறுமனே 'செங்கண்' என்று மாத்திரம் கூறுவான். அந்தச் செங்கணும் சீதையின் தனத்திலே தைக்கின்றன;

**"நோக்கிய நோக்கு எனும் நுதி**
**கொள் வேல் இணை**
**ஆக்கிய மது கையான் தோளில்**
**ஆழ்ந்தன.**
**வீக்கிய கனை கழல் வீரன்**
**செங்கணும்**
**தாக்கு அணங்கு அனையவள்**
**தனத்தில் தைத்தவே."**

'தாக்கு அணங்கு' என்பதற்கு மோகினித் தெய்வம் என்றும், பொதுவாக திரு - அதாவது இலக்குமி என்றும் பொருள் கூறுவர்.

சீதையினுடைய கண்களுக்கு வேலினை உவமையாகச் சொல்லி, அவ்வேல், வளர்ந்த வலிமையுடைய இராமனுடைய தோள்களில் ஆழ்ந்தன என்றும் கவிஞன் கூறுகிறான். வேலை உவமையாக்கும் போதே அந்தக் கண்ணோக்கின் கூர்மையான சக்தி வெளிப்படுத்தப்பட்டு விடுகிறது. இந்த வேலுடைய இலக்கும் இந்த வேலுடைய வலிமையைத் தாங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் அல்லவா? ஆகையால்தான் இராமனுடைய தோளை 'ஆக்கிய மதுகையான் தோள்' என்று கவிஞன் குறிப்பிடுகிறாள். 'ஆக்கிய மதுகையான்' என்றால் வளர்ந்து பெருகிய வலிமையுடையவன் என்று பொருள். ஆக, வன்மையான வேலைத் தாங்கிக் கொள்வதற்கு வன்மையான தோள்களையே கவிஞன் காட்டுகிறான். அப்படி இருந்தும் பெண்ணின் பார்வையின் ஒப்பற்ற

**- காத்தார் -**

வலிமையை விளக்குவதற்காக, சீதையின் நோக்கு இராமனின் தோள் களில் 'ஆழ்ந்தன' என்று கூறுவான். 'ஆழ்ந்தன' என்ற சொல்லுக்குப் "பதிந்து மூழ்குதல்' என்று பொருள். எனவே சீதையினுடைய கூர்மையான நோக்கு இராமனுடைய வலிய தோள்களில் பதிந்து ஆழமாக மூழ்கிவிட்டது.

சீதையுடைய கண்ணுக்கு வேலை உவமையாகக்காட்டியதுபோல இராமனுடைய கண்களுக்கு கவிஞன் உவமை எதுவும் காட்டவில்லை. அப்படிக் காட்டாதது மாத்திரமின்றி இராமனுடைய செங்கண் சீதையின் தனத்தில் தைத்தது என்று மட்டும் கூறிவிடுகிறான். 'தைத்தல்' என்ற சொல்லுக்குப் பதிதல், பொருந்துதல், ஊடுருவுதல் என்பன போன்ற பொருள்கள் உண்டு. இங்கே ஊடுருவுதல் என்று பொருள் கொண்டாலும், இராமனுடைய கண்களுக்கு எந்த ஆயுதத்தையும் உவமையாகக் கூறாததன் காரணமாகச் சீதையின் அங்கம் எதற்கு பங்கம் உண்டாயிற்று என்ற கருத்தினைக் கவிஞன் கொடுக்கவில்லை. காரணம் என்னவென்றால், பெண் மென்மையானவள். ஆகவே அதனைத் தாங்கமாட்டாள் என்பதுதான். அது மாத்திரமல்லால் இராமனுடைய பார்வை சீதையின் தனங்களில் தைப்பதின் காரணமாக அவளுக்கு உவகைப்பெருக்கும், காமக் கிளர்ச்சியும் உண்டாகுமேயன்றி வேறு விதமான துன்பம் உண்டாகாது. அது போலவே இராமனுடைய தோள்களில் சீதையின் கண்ணாகிய வேல் ஆழ்ந்த போதிலும், அவனுடைய தோள்கள் வலிமை பெற்றனவாக இருப்பதன் காரணமாக அந்த வேல் அவனுக்குத் துன்பத்தை உண்டாக்காமல் ஒத்த இன்பக்கிளர்ச்சியையே உண்டாக்குகிறது. இத்தகைய நயங்கள் அனைத்தையும் ஒருங்கே தரக்கூடியதாக கம்பனின் இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

இந்த இருவருடைய நோக்கும் செய்யும் வேலையைக் கவிஞன் இவ்வளவோடு விட்டுவிடுவதாக இல்லை. காரணம், முதல் சந்திப்பு காதலுக்கு உற்பத்தியாக அமைந்துவிடுகிறது. இதில் இருந்துதான் ஈடிணையற்ற பிணைப்பும், பிடிப்பும் பாசமும் பிறக்கப்போகின்றன. ஆகையால் இந்தச் சந்திப்பினால் தோன்றிய உணர்ச்சிகளையும் விளைவுகளையும் அழுத்தமாகவும் ஆழமாகவும் விரிக்கத் தொடங்கிவிடுகிறான். எனவே, இந்த நோக்குக்கு இன்னொரு வேலையையும் கொடுக்கிறான். ஒருவருடைய கண் மற்றவர் கண்ணைக் கவ்வி விழுங்குகிறது என்று முன்னர் கூறினான். அப்படி விழுங்கிய கண்ணின் பார்வையைப் பிணிக்கின்ற பாசமாகக் கவிஞன் இப்போது காட்டுவான். 'பிணித்தல்' என்ற சொல்லுக்குச் 'சேர்த்துக் கட்டுதல்' என்று பொருள், சேர்த்துக் கட்டுதல் என்பதிலிருந்தே இரண்டு பொருள்கள் இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. அப்போதுதான் ஒன்றைப் பிடித்து மற்றொன்றோடு சேர்த்துக் கட்டமுடியும். 'பாசம்' என்ற சொல்லுக்கு அன்பு என்ற பொருளோடு கயிறு என்ற பொருளும் உண்டு. இங்கே ஒருவரையொருவர் பருகிய நோக்கு பாசமாகிவிடுகிறது. பாசக்கயிற்றை ஒரு பொருளைப் பிடித்து இழுப்பதற்கு பயன்படுத்துகிறோம். இழுத்துக்கொண்டு வந்த பிறகுதானே மற்றொரு பொருளோடு சேர்த்துக் கட்டமுடியும்? இங்கே இராமனுடைய பார்வையாகிய பாசம் சீதையுடைய உள்ளத்தைப் பிடித்து ஈர்த்து இராமனுக்குள் கொண்டுவந்துவிடுகிறது. அதேசமயத்தில் சீதையினுடைய பார்வையாகிய பாசக்கயிறு இராமனுடைய உள்ளத்தைப் பிடித்து இழுத்துச் சீதை யினுள் கொண்டு வந்துவிடுகிறது. இதன் விளைவு என்ன? ஒருவருடைய இதயம் மற்றவருக்குள் மாறி இடம்பெற்றுவிடுகிறது. இதனைத்தான் கம்பன்.

**"பருகிய நோக்கு எனும் பாசத்தால்**
**பிணித்து,**
**ஒருவரை ஒருவர்தம் உள்ளம்**
**ஈர்த்தலால்,**
**வரி சிலை அண்ணலும் வாட்கண்**
**நங்கையும்,**
**இருவரும் மாறி புக்கு, இதயம்**
**எய்தினார்"**

என்று கூறுவான். இங்கே இருவருடைய உணர்ச்சிகள் ஒன்றித்த தன்மையை மிக்க அழகாகக் கவிஞன் எடுத்துக்காட்டுகிறான். இந்தப் பாட்டில் இன்னொரு சிறப்பையும் கவிஞன் வைத்து இருக்கிறான். முந்தின பாட்டில் சீதை யினுடைய கண்களுக்கு வேலினை உவமையாகக்கொண்ட கவிஞன், இராமனுடைய கண்களுக்கு எதனையும் உவமையாகச் சொல்லாமல் விட்டனன் என்றும், அப்படி விட்டமைக்குக் காரணம் பெண்ணினுடைய மென்மையும் ஆணினுடைய வலிமையையும் பிரித்துக் காட்டுவதற்கே என்றும் கண்டோம். இந்தப் பாட்டிலோ சீதையை 'வாட்கண் நங்கை' அதாவது 'வாள் போலும் கண்களை யுடையவளும் மகளிரில் சிறந்தவளுமான சீதை' என்று குறிப்பிடுகிறான். அதே சமயத்தில் இராமனையும் வெறுமனே விட்டுவிடக் கவிஞன் விரும்பவில்லை. ஆகையால், 'வரிசிலை அண்ணல்' அதாவது 'கட்டமைந்த வில்லையுடைய ஆடவரில் சிறந்தவனாகிய இராமன்' என்ற குறிப்பிட்டுவிடுகிறான். எனவே இராமனுக்கு ஓர் ஆயுதத்தையும் சீதைக்கு ஓர் ஆயுதத்தையும் கொடுத்து இருவரையும் சமநிலையில் வைத்துவிடுகிறான். அதாவது இதயம் மாறிவிட்டதன் காரணமாக ஒருவர் மற்றவரின் நினைவாகவே ஆகிவிடுகின்றனர். இந்தச் சமநிலையிலும் கூட ஒரு தனிநயத்தைக் காணமுடியும்.

சீதையினுடைய கண்களே அவளுக்கு வாளாக அமைந்துவிடுகின்றன. கண் களைத் தவிர வேறு வாள் அவளிடத்து இல்லை. ஆனால் இராமன் கையில் இருப்பதோ அவன் உடலின் அங்கமாகாத வில், அதாவது இராமனோடு சேர்த்துக் கூறப்படும் வில் செயற்கையானது, சீதை யோடு சேர்த்துக் கூறப்படும் வாளோ இயற்கையானது. ஏன் இப்படிச் சீதையின் அங்கமான கண்ணையே வாளாகக் குறிப்பிட்ட கவிஞன், இராமனைப் பொறுத்தவரையில் அவன் கையிலேந்திய சிலையினைக் குறிப்பிட்டான். பின்னால் வரும் கதைப்போக்கு இதன் அருமையை உணர்த்தும்.

பொதுவாக, ஆணும், பெண்ணும் கருத்தொருமித்துவிட்டால் அவர்தம் திருமணத்திற்கு வேறு தடைஇருக்காது. இங்கு ராமனும் சீதையும் கருத்தொருமித்து விட்டதனால் மாத்திரம் இவர்களுடைய திருமணம் நடக்கமுடியாது. காரணம் என்னவென்றால், சிவதனுசை வளைப்பவனு க்கே சீதையை மணம்முடித்துக் கொடுப்பதாக ஜனகன் ஏற்கனவே அறிவித்துவிட்டான். ஆகையால் சீதை மாட்டு இராமனுக்குக் காதல் உண்டானதன் காரணமாக அவளைத் திருமணம் செய்து கொள்ளமுடியாது. சிவதனுசை வளைத்தால் தான் அவளைத் திருமணம் செய்து கொள்ளமுடியும். அதைச் செய்து முடிக்க வல்லவன் தான் இராமன் என்பதை முன்கூட்டியே உணர்த்தும்வகையில் 'வரிசிலை அண்ணல்' என்று கவிஞன் இங்கே இராமனைக் குறிப்பிடுகிறான். இதயம் மாறிப் புகுந்த பிறகு அப்படி மாறிப்புகுந்த இருவருக்குமிடையே திருமணம் நடக்காவிட்டால் தவறாகி விடுமல்லவா? ஆகையால்தான் அப்படி இதயம் மாறிப் புகுந்த நிலையைச் சொல்லுமிடத்து மிகப்பொருத்தமாக 'விரிசிலை அண்ணல்' என்ற கூறுகிறான். இல்லாவிட்டால் 'வாட்கண் நங்கை' என்று வாளினைச் சீதையின் உறுப்பொன்றின் மீது ஏற்றிச் சொன்னதுபோல, இராமனைப் பற்றியும் கவிஞனால் குறிப்பிட்டிருக்க முடியுமல்லவா?

இந்தக் கண்களாலும், நோக்கினாலும் விளைந்த விளைவுகளை விளக்கிக் கொண்டுவந்த கவிஞன் அதற்கு ஒரு முத்தாய்வு வைக்க எண்ணுகிறான். இராமனும் சீதையும் 'இரண்டு உடற்கு ஓர் உயிர் ஆயினார்' என்பதுதான் அந்த முத்தாய்ப்பு. கருத்தொருமித்த காதலர் இருவர் உணர்ச்சியினால் ஒன்றிவிடும்போது அவர்களின் உடம்புகள் தாம் இரண்டாக இருக்கின்றனவேயன்றி உயிர் ஒன்றாகவே ஆகிவிடுகிறது. இது எல்லா இலக்கியங்களும் என்றும் கூறிக்கொண்டிருப்பதுதான். 'ஆவி ஒன்று; இரண்டு உடம்பு' என்று சீவக சிந்தாமணி கூறும். ஆனால் கம்பன் இதனைச் சொல்லுகின்ற இடமும், வரிசைப்படுத்திச் சில விளைவுகளைக் குறிப்பிட்டுவிட்டு இதை முத்தாய்ப்பாக கூறுகின்ற சிறப்பும் பாராட்டுக்குரியன.

**"மருங்கு இலா நங்கையும் வசை இல்**
**ஐயனும்,**
**ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர்**
**ஒன்று ஆயினார்"**

என்பது கம்பன் வாக்கு.

**(தொடரும்)**

வாரமொரு வாழ்வியற்
# சிந்தனை

மனிதர்கள் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள், மாறுபட்டவர்கள். - இனத்தாலும், குணத்தாலும், நிறத்தாலும், கருத்தாலும். ஒரு தாய் மக்கள் என்றாலும் ஒட்டிப் பிறந்தவர்கள் என்றாலும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தனித்தனி உடல், மூளை, சிந்தனை. எனவே, ஒருவருடைய கருத்திற்கும் மற்றவருடைய எண்ணத்திற்கும் நிச்சயம் வேறுபாடு இருக்கும். மாறுபட்ட வழிமுறைகளைக் கொண்டிருக்கும் இருவருக்கிடையே நடக்கும் கருத்துப் போராட்டமே முரண்பாடு ஆகும். குடும்பத்தில், சமூகத்தில், அலுவலகச் சூழலில், தொழில் செய்யும் இடத்தில் என்று அனைத்து இடங்களிலும் கருத்து முரண்பாடு ஏற்படலாம். உண்மையில் முரண்பாடு என்பது இயல்பானதும், ஆரோக்கியமான உறவு முறைகளைக் கடைப்பிடிக்க வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றுமாகும். ஆனால், முரண்பாட்டை முற்றவிட்டால் உறவுகளில் முறிவை ஏற்படுத்திவிடும். அதை மரியாதைக்குரிய முறையிலும் நேர்மறையாகவும் கையாளும்போது வளர்ச்சிக்கான வாய்ப்பாக இருக்கும். மேலும், இருவருக்கிடையேயான உறவை வலுப்படுத்தும். முரண்பாடுகளைக் கையாண்டு முடிவுக்குக் கொண்டுவரும் திறன்களைத் தெரிந்துகொண்டால் எந்தவொரு மாற்றுக் கருத்துக்களையும் தைரியமாக எதிர்கொண்டு தனி வாழ்க்கையிலும், தொழில் சூழலிலும் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டு வளர்ச்சி காணலாம். உறவுகளில் ஏற்படும் முரண்பாட்டைப் புரிந்து கொள்ளுதல் மாறுபாட்டில் இருந்து முரண்பாடு தோன்றுகிறது. ஒருவருடைய மதிப்பீடுகளை, நோக்கங்களை, பார்வையை, யோசனைகளை, விருப்பங்களை, மற்றவர் மறுக்கும்போது முரண்பாடு தோன்றுகிறது. சிலநேரம் இது பெரிதாகத் தோன்றுவதில்லை. ஆனால், முரண்பாடுகள் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும்போது தன்னுடைய பாதுகாப்பிற்கும் மதிப்பீட்டிற்கும் தடையும், தடைமீறலும் பூசலுக்குக் காரணமாகிறது. ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பங்களையும் கருத்துகளையும் மதித்து ஏற்றுக் கொள்ள முயற்சிக்கவேண்டும். குடும்ப வாழ்க்கையில் புரிந்து கொள்ளுதலில் ஏற்படும் பின்னடைவு இருவருக்கிடையே இடைவெளியை ஏற்படுத்துவதோடு வீண் விவாதங்களில் ஈடுபட்டு பிரிவை உண்டாக்குகிறது. வேலை

# முரண்பாடுகளை தீர்க்கும் சமன்பாடு



தனித்தன்மைக்கும் ஆபத்து என்று நினைக்கத் தோன்றுகிறது. ஒவ்வொருவரும் பிறரால்தான் புரிந்து கொள்ளப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும், மதிப்பளிக்கப்படவேண்டும், ஆதரிக்கப்படவேண்டும் என்று நினைக்கிறார்கள். தனி வாழ்க்கையிலும், தொழில் வாழ்க்கையிலும் இணக்கமான உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொள்வது சவாலாக இருக்கிறது.

சாதாரணமாக நம் வீட்டில் தத்தித் தவழ்ந்து நடைபோடும் குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையே நடைபெறும் போராட்டம் போன்றதுதான் இது. குழந்தை தெருவிற்கு வந்து ஓடி விளையாட விரும்புகிறது. ஆனால், பெற்றோர் குழந்தையின் பாதுகாப்பைக் கருதி அதைத் தடை செய்கிறார்கள். குழந்தை அடம்பிடிக்கிறது. செய்யுமிடங்களில் ஏற்படும் முரண்பாடு தொழில் தகராறுகளை (நீதிமன்ற வழக்கு) ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவரும் மற்றவரின் கருத்துக்களை நடுநிலைமையோடு ஆய்ந்து புரிந்துகொண்டால் பிரச்சினைகளைத் தீர்த்து கூட்டு முயற்சியோடு உறவுகளைப் பலப்படுத்தும் வழி திறக்கும்.

முரண்பாடு என்பது மறுதலித்தல் என்பதன் முற்றிய வடிவமாகும். அதாவது, மாற்றுக்கருத்துள்ள இருவரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ அச்சுறுத்தும் நிலையாகும். முரண்பாட்டை முளையிலேயே கிள்ளாவிட்டால் புரையோடிய புண்ணாகிவிடும். முரண்பாட்டைத் திறமையாகக் கையாண்டு தீர்வு காணாவிட்டால் உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டாக்கும். அதேநேரத்தில் முரண்பாட்டைத் திறமையாகக் கையாண்டு நம்பிக்கையையும் உறவையும் பலப்படுத்தினால் அதுவே வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமையும்.

**முரண்பாட்டைக் கையாள குறைபாடான வழியும், சிறந்த வழியும்:**

**குறைபாடான வழிமுறை**

1. மற்றவரின் கருத்துகளை மதிக்கவும் ஏற்கவும் தகுந்த திறன் பெறாதிருத்தல்.
2. சீற்றம், கோபம், புண்படுத்தல், வெறுப்பான வெளிப்பாடுகள்.
3. நேசித்தவரை வெறுத்தல், விலக்குதல், தனிமைப்படுத்தல், அவமானப்படுத்தல், கைவிடுதல்.
4. சமாதானப்படுத்தவோ அவரின் நிலையிலிருந்து சிந்திக்கவோ திறனற்ற நிலை.
5. விரும்பத்தகாத விளைவுகளுக்கு அஞ்சி முரண்பாட்டைச் சந்திக்க மறுத்தல்.

**சிறந்த வழிமுறை**

1. மற்றவரின் கருத்துகளை மதிக்கவும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் பெறுதல்.
2. அமைதியாயிருத்தல், மறுக்காதிருத்தல், மரியாதை கொடுத்தல்.
3. மன்னிக்கவும், மறக்கவும் தயாராயிருத்தல் மற்றும் சீற்றத்தைக் கைவிடுதல்.

(தொடரும்...)

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

### குறுக்கெழுத்துப் போட்டி - 662

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 660 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 த் | 3 து | 4 வா | 5 ன | 6 ம் |
| 7 க | 8 ம் | 9 பு | | 11 ம | 12 கி |
| 13 த் | 14 தி | 15 மை | 16 ரி | | 18 ர |
| 19 தி | 20 ரி | | 22 து | 23 ந் | 24 க |
| | 26 த | 27 க் | 28 க | 29 து | |
| 31 ந | 32 ர | 33 சி | 34 ம் | 35 ம | 36 ம் |

**மேலிருந்து கீழ்**

1. எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படம் ஒன்று.
2. அத்தி, உடல், வில்.(திரும்பியுள்ளது)
3. திரையிசைப் பாடகி ஒருவர்.
5. "........ ஒரு நாளும் இருக்கவேண்டாம்."
6. விலைத்தொகை, விற்பனை. (திரும்பியுள்ளது)
10. இருவினை, செய்தொழில்.(குழம்பியுள்ளது)
20. கார்காலம், புதுமை, பூமி.

**இடமிருந்து வலம்**

01. ஈழத்து வீராங்கனைகளில் ஒருவர். 'பூவின் மடல்' என்ற கவிதைத் தொகுப்பின் இளங்கவிஞர்.
5. ஆன்மீக ஒலியாக கருதப்படும் ஒரு சப்தம்.
7. பொன்னும் விளைபொருட்களும். (குழம்பியுள்ளது)
15. சூரியன், தினகரன். (குழம்பியுள்ளது)
19. இஸ்லாம் மார்க்க தீர்க்கதரசி(திரும்பியுள்ளது)
22. 'பொன்னியின் செல்வன்' என்ற காவியத்தின் ஆசிரியர்.
25. படைவீரர், வேடர். (குழம்பியுள்ளது)
31. பாரம், கனம்.
35. ஏவல் சொல் ஒன்று, தோழி.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 15.02.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 662
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.660 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

டி.ஜோர்ஜ்,
கடற்கரை வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. என்.தர்சன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
02. அ.தவப்பிரியா, மடு, மன்னார்.
03. தொ.சேந்தன், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
04. க.அஜந்தன், உடப்புசல்லாவ.
05. ஞா.நிமால், பிரதான வீதி, காலி.
06. ந.வந்தனா, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
07. இ.செந்தூரன், எட்டியாந்தோட்ட.
08. து.சங்கீதா, வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.
09. கை.நிசாந்தன், வவுனிக்குளம், வவுனியா.
10. எவ்.எவ்.நிசார், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்



வேலைன்னு வந்துட்டா வெள்ளக்காரன்

# பிடிவாதமே எனது வெற்றியின் ரகசியம் – காஜல் அகர்வால்

காஜல் அகர்வால் நடித்து கடந்த வருடம் மாரி, பாயும் புலி ஆகிய படங்கள் வெளிவந்தன. தெலுங்கிலும் ஒரு படத்தில் நடித்திருந்தார். தற்போது தமிழ், தெலுங்கில் தயாராகும் பிரம்மோற்சவம் என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

கவலை வேண்டாம் என்ற படமும் கைவசம் உள்ளது. இந்தியிலும் ஒரு படத்தில் நடிக்கிறார். காஜல் அகர்வால் அளித்த பேட்டி வருமாறு:-

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் சௌகரியமாக இருக்கவே விருப்பப்படுவார்கள். தன்னைப் பற்றியே சிந்திக்கவும் செய்வார்கள். ஆனால், நான் அதில் மாறுபட்டு இருக்கிறேன். எப்போதும் என்னை சுற்றி இருக்கும் விஷயங்களை பற்றியே சிந்திக்கிறேன். மற்றவர்களை பற்றியே யோசிக்கிறேன். தேவையில்லாதவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்.

இது எனக்குள் இருக்கிற பெரிய பலவீனம் ஆகும். என்னைப் பற்றியும், என் சினிமா வாழ்க்கை பற்றியும் மட்டுமே சிந்திக்க வேண்டும் என்று நான் நினைப்பது உண்டு. ஆனால், அப்படி இருக்க முடியவில்லை. சுற்றி இருப்பவர்களை பற்றியே என் மனம் யோசிக்கிறது. இதிலிருந்து விடுபட தொடர்ந்து முயற்சித்து வருகிறேன். நான் ஏதேனும் ஒன்றை அடைய நினைத்தால், அது நிறைவேறும்வரை விடமாட்டேன்.

ஆசைப்பட்டதை முடித்த பிறகுதான், அடுத்தது பற்றி சிந்திப்பேன். இப்படிப் பட்ட ஒரு பிடிவாத குணம் எனக்குள் இருக்கிறது. இந்த பிடிவாதம் தான் என்னை உயரத்தில்கொண்டு வைத்து இருக்கிறது. இதை என்னுடைய பெரிய பலமாகக் கருதுகிறேன். நான் சினிமாவில் அறிமுகம் ஆனபோது நிறைய நல்ல கதைகள் வந்தன. ஆனால், மொழி தெரியாது இருந்தாலும் அவற்றில் நடிக்க ஒப்புக்கொண்டேன்.

மொழி தெரியாவிட்டாலும் நிச்சயமாக இந்த படங்களில் என்னால் சிறப்பாக நடிக்கமுடியும் என்ற பிடிவாதம் இருந்தது. அப்போது நடிக்க யோசித்திருந்தால் சினிமாவில் பின்தங்கியிருப்பேன். பிடிவாதம் காரணமாகவே அவற்றில் நடித்து முன்னுக்கு வந்துள்ளேன். ஒவ்வொரு படமும் எனக்கு புதிய அனுபவத்தை கொடுக்கிறது. தமிழ், தெலுங்கில் நிறைய படங்களில் நடித்து விட்டேன். அந்த படங்களில் நடித்துக் கொண்டிருந்தபோது, திரைப்பட தொழில் நுட்பங்கள் பற்றி கொண்டேன்.



# மீண்டும் வடிவேலு?

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வடிவேலு தெனாலிராமன் என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்தார். இப்படம் சுமாரான வரவேற்பை பெற்றது. அதன் பிறகு எலி படத்தில் நடித்தார். இப்படமும் எதிர்பார்த்தபடி வெற்றியடையவில்லை. இதன்பின் எந்த படத்திலும் நடிக்காமல் இருந்த வடிவேலு, மீண்டும் நடிக்க திட்டமிட்டு இயக்குனர்களிடம் கதை விவாதத்தில் ஈடுபட்டுவருகிறாராம்.

இந்நிலையில், வடிவேலு அடுத்ததாக சூது கவ்வும் படத்தை இயக்கிய நலன் குமாரசாமி இயக்கத்தில் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. நலன் குமாரசாமி தற்போது காதலும் கடந்துபோகும் என்னும் படத்தை இயக்கியிருக்கிறார். இதில் விஜய் சேதுபதி, மடோனா உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

இப்படம் அடுத்த மாதம் திரைக்கு வரவிருக்கிறது. இப்படம் வெளியான பிறகு வடிவேலு நடிக்கும் படத்தின் அறிவிப்பை வெளியிடவுள்ளதாக தகவல் வந்துள்ளது.





# கீர்த்தி சு

ரஜினி முருகன் ப
ரசிகர்களாகிவிட்டார்கள்.
வலைத்தளத்திலும் கீர்த்
குவிகின்றது.
இந்நிலையில் இவர் சமீ
பங்கேற்றார், இதில் விஜ
என்ன வைக்கலாம் என்று
ஹீரோ, விஜய் - டான்ஸிங்
குறிப்பிட்டார்.

# விஜய்யுடன் இணையும் பிரபுதேவா

நடன இயக்குனர், நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் என பல அவதாரம் எடுத்துள்ள பிரபுதேவா, கடைசியாக தமிழில் "எங்கள் அண்ணா" படத்தில் கதா நாயகனாக நடித்துள்ளார். இப்படத்திற்குப் பிறகு தமிழில் இவர் நடிப்பில் எந்த படமும் வெளியாகவில்லை. இந்தியில் முன்னணி இயக்குனராக வலம்வரும் பிரபுதேவா, தற்போது தமிழில் நடிக்க ஆர்வம் காண்பித்துள்ளார்.

இவர் நடிக்க இருக்கும் புதிய படத்தை மதராசப்பட்டணம், தாண்டவம், தெய்வத்திருமகள், தலைவா ஆகிய படங்களை இயக்கிய விஜய் இயக்க இருக்கிறார். இந்த படத்தில் பிரபு தேவாவுக்கு ஜோடியாக தமன்னா நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இப்படத்தின் படப்பிடிப்பு பெப்ரவரி மாதம் தொடங்கவிருக்கிறது. இப்படத்தை பிரபுதேவா தயாரிக்க இருப்பதாகவும், திகில் படமாக உருவாக்க இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளது.



# அரண்மனை – 2

## திரை விமர்சனம்

பெரிய ஜமீன்தாரான ராதாரவி தனது மகன்கள் சித்தார்த் மற்றும் சுப்பு பஞ்சுவுடன் ஒரு மிகப்பெரிய அரண்மனையில் வாழ்ந்து வருகிறார். இந்த அரண்மனையிலேயே அண்ணன் தங்கைகளான மனோபாலாவும், கோவை சரளாவும் வேலைக்காரர்களாக பணிபுரிந்துவருகிறார்கள். சுப்பு பஞ்சுவுக்கு திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறது. சித்தார்த் துக்கு அவரது முறைப்பெண்ணான திரிஷா வுடன் நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறது.

திருமணத்துக்கு கொஞ்ச நாட்கள் இருக்கும்போது இரண்டுபேரும் வெளியூர் சென்றுவிடுகிறார்கள். அந்த நேரத்தில் ராதா ரவி திடீரென கோமாநிலைக்கு சென்றுவிடுகிறார்.

இதனால் இருவரும் அவசரமாக அரண்மனைக்கு திரும்பி, ராதாரவியை கூடவே இருந்து பார்த்துக் கொள்கிறார்கள். ராதா ரவிக்கு சிகிச்சை அளிப்பதற்காக அந்த அரண்மனையிலேயே நேர்சாக தங்கி பணிபுரிந்து வருகிறார் பூனம் பஜ்வா. மேலும், ராதா ரவியை குணப் படுத்துவதற்காக சூரியும், நாடி ஜோசியராக அந்த அரண்மனைக்கு வருகிறார்.

இந்நிலையில், அந்த அரண்மனையில் ஒரு கறுப்பு உருவம் நடமாடுவது, கோமா நிலையில் இருக்கும் ராதா ரவி திடீரென அந்தரத்தில் தொங்குவதுபோல திரிஷாவுக்கு தெரிகிறது. இதனால், பயந்துபோய் அரண்மனையில் உள்ளவர்களிடம் சொல்கிறார். ஆனால் அவர்கள் நம்ப மறுக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில், அந்த வீட்டிலேயே தோட்டக் காரனாக பணிபுரிந்து வரும் ராஜ்கபூர், திரிஷாவை தவறான கண்ணோட்டத்தோடு பார்க்க, சித்தார்த் அவரை அடித்து, அரண்மனையை விட்டு துரத்துகிறார். சித்தார்த்தை பழிவாங்க குடித்துவிட்டு அரண்மனைக்கு வரும் ராஜ்கபூர் மர்மமான முறையில் இறக்கிறார். அவரை சித்தார்த் தான் கொலை செய்துவிட்டார் என்று பொலிசார் சித்தார்த்தை கைது செய்கிறது. இதையடுத்து, அரண்மனையில் நடந்த சம்பவங்களுக்கு தீர்வுகாண திரிஷா தனது

அண்
வரவ
அரண்
என்ப
அவற்
இல்
சித்
அடக்
வெளி
திரிஷா
கலக்
பெண்
இர
அழுத்
பேயா






# கீர்த்தி சுரேஷ் கலக்கல் பதில்

ரஜினி முருகன் படத்திற்கு பிறகு பலரும் கீர்த்தி சுரேஷ் ரசிகர்களாகிவிட்டார்கள். பேஸ்புக், டுவிட்டர் என அனைத்து சமூக வலைத்தளத்திலும் கீர்த்தியின் புகைப்படங்களுக்குத்தான் லைக்ஸ் குவிகின்றது.

இந்நிலையில் இவர் சமீபத்தில் நடிகை குஷ்பு நடத்தும் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றார், இதில் விஜய், அஜித், சூர்யாவிற்கு பொருத்தமான பெயர் என்ன வைக்கலாம் என்று கேட்டார். அதற்கு அவர் அஜித் - ரொமாண்டிக் ஹீரோ, விஜய் - டான்ஸிங், ஹீரோ, சூர்யா - செண்டிமெண்ட் ஹீரோ எனக் குறிப்பிட்டார்.




# ரசிகர்களை மிரட்ட வரும் அடுத்த பேய் படம்

அக்டோஸ்பைடர் புரொடக்ஷன் சார்பில் துரை மற்றும் சண்முகம் இருவரும் தயாரிக்க, பரத், விஷாகா சிங், மீனாக்ஷி தீட்ஷித் நடிப்பில் மணி ஷர்மா எழுதி இயக்கி இருக்கும் படம் பயம் ஒரு பயணம்.

"இது ஒரு பேய் படம்தான். ஆனால் வழக்கமான பேய் படங்களில் எல்லாம் ஒரு பங்களா அல்லது வீட்டுக்குள் பேய் இருக்கும். அங்கே போகிறவர் களுக்கு பிரச்சினை வரும். ஆனால் இந்தப் படத்தில் ஒரு காட்டுக்குள், எங்கே இருந்து எப்போது வேண்டுமானாலும் பேய்வரும். நீங்க தப்பிக்கவே முடியாது" என்கிறார் இயக்குனர் மணி ஷர்மா.

அப்படி என்ன கதை? என்று இயக்குனரிடம் கேட்டபோது,

"வனவியல் புகைப்படக்கார இளைஞர் ஒருவர், காட்டுப் பகுதியில் உள்ள ஒரு பங்களாவுக்குள் தங்கிவிட்டு அங்கிருந்து கிளம்புகிறார். ஆறு மணி நேரத்துக்குள் அந்தக் காட்டை கடந்து அவர் வரவேண்டும். ஆனால் மூன்று நாட்கள் ஆகிறது. அதிலும் ஒரு இரவு என்பது முக்கியமானது.

அடர்ந்த காட்டில் தரையே வீடாகவும் வானமே கூரையாகவும் உள்ள சூழலில் அந்த இரவில் பேயிடம் சிக்கும் அந்த புகைப்படக்காரருக்கு என்ன நடக்கிறது என்பதுதான் இந்தக் கதை" என்கிறார்.

மேலும், பொதுவாக இப்போது பேய்ப் படம் என்றால் காமெடி கலந்து எடுப்பது எல்லோருக்கும் வழக்கமாக இருக்கிறது. ஆனால் இது முழுக்க முழுக்க சீரியசான பேய் படம். காமெடியும் இருந்தாலும் திகில்தான் இந்தப் படத்தின் பலம். விஷாகா சிங் நாயகியாகவும் பேயாகவும் நடிக்கிறார். நாயகனின் மனைவியாக இன்னொரு கதாநாயகியாக மீனாக்ஷி தீட்ஷித் நடிக்கிறார்.

அண்மைக் காலமாக காமெடி கேரக்டரில் அதிகம் நடித்துவந்த நடிகை ஊர்வசி இந்தப் படத்தில் விசாகாவின் அம்மாவாக ஒரு சீரியசான கேரக்டரில் நெகிழ்ச்சியூட்டும்படி நடித்துள்ளார். அவரது கணவராக ஜோன் விஜய் நடிக்கிறார். படத்தின் வில்லன் இவர்தான்.

நாயகனின் நண்பனாக முனீஸ்காந்த் நடிக்க, மற்றும் சிங்கம் புலி, யோகிபாபு போன்றோரும் நடிக்கிறார்கள் என்கிறார். படத்தில் நான்கு இனிமையான பாடல்கள் இருக்கிறது. படத்தின் பெரும்பகுதியை மூணாறு காட்டுப் பகுதியில் அடர்ந்த காட்டில் இரவிலேயே எடுத்தோம்.



றார்கள். அந்த
நிலைக்கு

அரண்மனைக்கு
பார்த்துக்
சை அளிப்பதற்காக
தங்கி பணிபுரிந்து
தா ரவியை குணப்
யராக அந்த

யில் ஒரு கறுப்பு
பில் இருக்கும் ராதா
துபோல திரிஷாவுக்கு
அரண்மனையில்
ல் அவர்கள் நம்ப

லேயே தோட்டக்
, திரிஷாவை தவறான
த் அவரை அடித்து,
சித்தார்த்தை
க்கு வரும் ராஜ்கபூர்
வரை சித்தார்த் தான்
சார் சித்தார்த்தை
ண்மனையில்
திரிஷா தனது

அண்ணன் சுந்தர்.சிக்கு போன் செய்து அரண்மனைக்கு வரவழைக்கிறார். அரண்மனைக்கு வரும் சுந்தர்.சி., அரண்மனையில் நடக்கும் சம்பவங்களுக்கு யார் காரணம் என்பதை கண்டறிய முடிவு செய்கிறார். இறுதியில், அவற்றையெல்லாம் சுந்தர்.சி., கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

சித்தார்த் வழக்கமான ஹீரோயிசம் இல்லாமல் பேயின் அடக்குமுறைக்கு பயந்தவாறு எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். முறைப்பெண்ணாக வரும் திரிஷா, முதல் பாதியில் பாடல் காட்சிகளில் கவர்ச்சியில் கலக்கியிருக்கிறார். பிற்பாதியில், ஆவி புகுந்த பெண்ணாக மிரட்டியிருக்கிறார்.


இரண்டாம் பாதியில் வரும் ஹன்சிகா அழகாகவும், அழுத்தமான நடிப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார். பேயாகவும் வந்து மிரட்டியிருக்கிறார். சூரி, கோவை சரளா - மனோபாலா கூட்டணியின் காமெடி படத்திற்கு மிகப்பெரிய பலம்.




தங்கன்

மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்து...! பரந்தன், முல்லைத்தீவு வீதியிலே பரந்தனிலிருந்து தர்மபுரம் வரை பெரும்பான்மையினராக வாழ்ந்துகொண்டிருக்கும் நில உரிமை எதுவுமற்ற விவசாயக் கூலி மக்களின் துயரமான வாழ்வை கண்ட கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளரான செழியன் அவர்கள் சமாதான காலத்திலே அந்த மக்களின் குடியிருப்புக்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டை எப்படியாவது செய்து கொடுக்கவேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தார்.

இந்த முடிவானது தமிழ்பேசும் மக்களது நிலத்துடனான இறுக்கமான பிணைப்பும், உறவும்தான் அவர்களது தேசிய உணர்வை வளர்த்து தமிழ் மக்களது இனவிடுதலையை விரைவுபடுத்தும் என்ற அர சியல் சார்ந்த அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டதா? அல்லது அந்த மக்களின் துயரங்கள் மலிந்த வாழ்வைக் கண்டதால் அவரது உள்ளத்தில் எழுந்த இரக்க உணர்வால் ஏற்பட்டதா என்பது எவருக்குமே தெரியாத ஒன்றாக இருந்தது. ஆனால் ஆயுதப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட இளைஞர்களது அரசியலைப் பார்க்கும்போது செழியன் அவர்களது மேற்படி உணர்வானது நிச்சயமாக அந்த மக்கள்மீது அவர்கொண்ட இரக்கத்தால் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும்.



தமிழ் மக்களது விடுதலைப் போராட்டமானது தமிழ் மக்கள் மத்தியிலே வாழ்ந்துகொண்டிருந்த மேல் மத்தியதர வர்க்கத்தினரின் பிரச்சினைகளைத்தான் இன்றுவரை முன்வைத்து வருகின்றதே தவிர, உழைக்கின்ற சாதாரண மக்களைப் பற்றியோ அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றியோ எப்பவும் சிந்தித்ததில்லை! அதிலும் குறிப்பாக இளைஞர்களின் ஆயுதப்போராட்டமானது சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்கள்மீது மேற்கொண்ட ஆயுதரீதியிலான வன்முறைக்கு எதிரானதாக பெரும்பாலும் இருந்ததே தவிர அவர்கள் மக்களின் பிரச்சினைகளை ஆழமான அரசியல் உணர்வுடன் சிந்தித்தவர்களாக இருக்கவில்லை. அப்படியான ஒரு சூழலில் தமிழ் தேசியவாதிகளால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுவரும் இந்த வறிய கூலி மக்களின் பிரச்சினைகளைப் பற்றி செழியன் அவர்கள் காட்டிய அக்கறையானது மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றுதான்.

இவ்வாறு முடிவெடுத்த செழியன் தனது முடிவை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களிற்கு அறிவித்து, அவர்மூலமாக புலிகளது மத்திய குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு புலிகளது முழுமையான அனுமதியைப் பெற்றுக்கொண்ட அவர் அடுத்த கட்டமாக ஒரு 200 வரையான குடும்பங்களை குடியேற்றம் செய்யக் கூடிய நிலத்தைப் பரந்தனுக்கும் தர்மபுரத்துக்குமிடையில் தேடத் தொடங்கினார்.

இவ்வாறு தேடத்தொடங்கிய செழியன் கண்டாவளைப் பகுதியில் அரச காணி இருப்பதாக அறிந்து உடனடியாக அந்த நிலத்தைப் போய் பார்த்தார். அந்த நிலம் வயலும் வயல் சார்ந்த இடமுமாய் பள்ளக்காணியாக இருப்பதைக் கண்டு அந்தக் காணியை நிராகரித்தார். தனது நிலம் தேடும் முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தும் தீவிரப்படுத்தினார். அப்போது 1950 ஆம் ஆண்டுகளிலிருந்து முரசுமோட்டை பகுதியிலே ஓர் விவசாயியாக வாழ்ந்துவரும் ஓர் முதியவரைச் சந்தித்து அவருடன் உரையாடியபோது,

2 ஆம் கட்டைச் சந்திக்கு வடக்கே ஒன்றரைக் கிலோமீற்றர் வரையான தூரத்தில் இருக்கும் சிறு காட்டுப்பகுதி யாருக்கும் வழங்கப்படாத அரச காணி யாய் உள்ளது எனவும் அங்கே அந்த நிலமற்ற மக்களை குடியேறலாம் எனவும் அந்த முதியவர் அவர்களிற்கு இனம் காட்டிய உடனேயே அந்த இடம் செழியனுக்குப் பிடித்துக் கொண்டது. உடனேயே மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து முரசுமோட்டைப் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் வறிய கூலி மக்களின் மூன்றாவது பரம்பரையில் வந்த ஓர் துடிப்பான சமூக உணர்வு கொண்ட இளைஞான செல்வா அவர்களைச் சந்தித்து செழியன் தனது திட்டத்தை அவருக்கு எடுத்துக்கூறியதோடு அந்தப் பகுதியிலே வாழும் நிலமற்ற வறிய கூலிமக்களை உடனடியாக கூட்டி கோரக்கன் கட்டுச் சிறு காட்டுப் பகுதியைத் திருத்துவதற்கான ஒழுங்குகளை வேகமாகச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

2003 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதியளவில் கோரக்கன்கட்டுக் குடியிருப்புக்கான முதல் கூட்டத்தை செல்வா கோரக்கன்கட்டு காட்டுப் பகுதியில் உள்ள ஒரு ஒதிய மரநிழலில் கூட்டினார். இக்கூட்டத்தில் செழி யனும் கலந்துகொண்டார். தமக்கான நிலம் தமக்குச் சொந்தமாகக் கிடைக்கப்போகுது என்பதால் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து வந்து முரசுமோட்டைப் பகுதியில் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விவசாய முதலாளி கள் என மலையகக் கூலி மக்களால் கருதப்பட்டுவரும் வன்னி விவசாயி களின் மனோபாவத்தை நன்றாக விளங்கிக்கொண்ட விவசாயிகளின் மனோபாவத்தை நன்றாக விளங்கிக் கொண்ட முதியவர்களும் அக்கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்தார்கள். மலையகத்திலிருந்து வந்து வன்னிப் பகுதியான முரசுமோட்டைப் பகுதியில் குடியேறி நீண்டகாலமாக அப்பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் சில முதியவர்கள் இக்குடியேற்றம் சம்மந்தமான தமது அச்சத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி இக்குடியேற்றத்தைக் கைவிடுமாறு வேண்டினர். ஆனால் பெரும்பாலான இளைஞர்கள் அந்த முதியவர்களின் கோரிக்கையை ஏற்கமறுத்தபோதும் அந்த நிலமற்ற மக்களின் மத்தியிலே குடியேற்றம் பற்றிய அச்சம் ஏற்பட்டிருந்தது. இதைப் புரிந்துகொண்ட செல்வா அவர்கள் உரையாற்றும்போது,

“கடந்த ஐம்பது வருடங்களிற்கும் மேலாக நிலஉரிமை எதுவுமில்லாத வறிய கூலிகளாய் பெரும் அவலங்கள் நிறைந்த ஓர் நாடோடி வாழ்க்கை யையே இந்த மண்ணில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எங்கள் குடிசைகள் அடிக்கடி இடம்மாறிக்கொண்ட இருக்கின்றது. எமதிந்த மோசமான அவல வாழ்வை நாம் எமது சந்ததிக்கு விட்டுச் செல்லப் போகிறோம்? வேண்டாம்... அவலங்களும்.... துயரங்களும் நிறைந்த இந்த நாடோடி வாழ்க்கை எங்கள் குழந்தைகளிற்கு வேண்டாம். நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த நரக வாழ்க்கை எங்களோடு முடியட்டும். எங்கள் குழந்தைகளாவது நிம்மதியாக வாழவேண்டும் என மிகுந்த உணர்ச்சிபூர்வமாக அங்கிருந்தவர்களிற்கு எடுத்துக் கூறியதோடு,

“இந்தக் கூட்டத்திலே கிளி.மாவட்டப் பொறுப்பாளரும் உதவியாக இருக்கிறார்கள். எமதிந்த் குடியேற்றத் திற்கு உதவியாக விடுதலைப் புலிகள் நிற்கின்றார்கள்.

எனவே நாங்கள் எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் எமது குழந்தைகளிற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். என அந்த மக்களின் மனங்களிலே ஓர் நம்பிக்கையை ஏற்படுத்த முயன்றார். ஆனாலும் சிலர் இந்தக் குடியிருப்போடு சம்மந்தப்படாமல் ஒதுங்கிக் கொண்டனர். குடியிருப்போடு இணைந்துகொண்டோர் அனைவரும் உடனடியாகவே கோரக்கன்கட்டுக் சிறுகாட்டுப் பகுதியை திருத்தம் செய்வதாக முடிவெடுத்துக் கொண்டனர்.

இந்த முடிவுக்கொப்ப அடுத்த நாள் காலை மண்வெட்டி, கத்தி கோடரி போன்ற ஆயுதங்களுடன் இளைஞர்கள், யுவதிகள் முதியோர் களென ஓர் ஐம்பது பேர்வரை மிகுந்த உற்சாகத்தோடு கோரக்கன் கட்டுக் காட்டுப்பகுதியை நோக்கிப் புறப்பட்டனர். கடந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாக அவர்களது மனங்களில் பெரும் பாரமாக அழுத்திக் கொண்டிருந்த அவர்களது நிலம்சார்ந்த பிரச்சினைக் குத் தீர்வு காணப்படப்போகின்றது என்ற மகிழ்ச்சி அவர்கள் ஒவ்வொருவரினது முகங்களிலும் மிகத் தெளிவாகத் தெரிந்தது.

தமது வயல் நிலங்களில் வேலை செய்துகொண்டு தமது பூரணமான கட்டுப்பாட்டிற்குள் இருந்த அந்தக் கூலி மக்களும் தமக்குச் சொந்தமாக நிலம்பிடிக்க முயற்சிக்கிறார்கள் என்ற செய்தியை முரசுமோட்டைப் பகுதியில் நிரந்தரமாய் வாழும் விவசாய முதலாளி களால் (இந்த வார்த்தை அந்த மக்கள் பாவிக்கும் வார்த்தை) கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மலையகத்திலிருந்து வந்த அந்த வறிய கூலி மக்களின் இந்த முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென முரசுமோட்டை விவசாய முதலாளிகள் ஏகமனதாக முடிவெடுத்துக் கொண்டனர் என அவர்கள் எமக்குக் கூறும்போது, முரசுமோட்டை விவ சாயிகள் மீதான வெறுப்பை அந்த இளைஞர்களது முகத்தில் நாம் கண்டோம்.

கடந்த 60 வருடங்களாக தமிழன் என்றரீதியில் இனரீதியாக சிந்தித்து அந்த இனத்தினது விடுதலைக்காக குரல் கொடுத்துவரும் இந்த விவசாயத் தமிழருக்கு 30 வருடங்களிற்கு மேலாக தமிழ் இனத்தின் விடுதலைக் காக ஆயுதப்போரை மிகத்தீவிரமாக நடாத்திய இந்த மத்திய வகுப்புத் தமிழனுக்கு வறிய மக்களாய் வாழ்ந்து வரும் அந்தக் கூலித் தமிழர்களின் உரிமையை மதித்து அவர்களது உரிமை வாழ்வை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது ஏன்? என்ற கேள்வியை அரசியல்சார்ந்த ஆய்வாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு நாம் கோரக்கன்கட்டை நோக்கி எமது பயணத்தை தொடருவோம்...!

மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து மிக நீண்டகாலமாக நிலஉரிமை எதுவுமின்றி வறிய கூலிகளாய் வாழ்ந்துகொண்டிருந்த அந்த மக்களின் காடு திருத்தும் பணி மிகச் சுறுசுறுப்பாய் கோரக்கன்கட்டில் நடந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து முரசுமோட்டைக்குச் சென்று ஏக்கர் கணக்கான நிலத்தை தமக்குச் சொந்தமாக்கி வாழ்ந்து வரும் விவசாயிகள் அந்தக் கூலி மக்களின் வாழ்வாதாரத்திற்கான முயற்சியை தடுத்தே தீருவது என்ற உணர்வுடன் கோரக்கன் கட்டுக் காட்டுப் பகுதியை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

இந்த வார சிறுகதை

# துளிர்களும் ஒரு நாள் பழக்கமும்!



இன்று விடியும்போதே மிகவும் சோர்வாக இருந்தது வாணிக்கு. அன்றைய நாளின் வேலைகள் குறித்த நினைவுகள் மண்டைக்குள் நிரந்தரமாக தங்கிவிட்டதாகத் தோன்றியது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகத்தான் விடிகிறது. வாரத்தின் எல்லா நாட்களுக்கென்றும் ஒரு மனநிலை இருக்கிறது. திங்கட்கிழமைகள் கொஞ்சம் ஆசுவாசமாக விடியும்.

அன்று அவளது வேலைகள் அத்தனை சிரமமில்லை. செவ்வாய்க் கிழமை ஒரு பதட்டம் தொற்றிக் கொள்ளும், புதன்கிழமைகளில் பெரும்பாலும் முந்தைய நாளின் இரவே எதையாவது செய்து வைத்துக் கொண்டு அதை எடுத்துக்கொண்டு ஓடவேண்டும். வியாழக்கிழமைகள் பெருமூச்செடுத்துக் கொள்ளக் கூடியவை. வெள்ளிக் கிழமைகளுக்கு என்று அவள் தனியாகச் சக்தி சேமிக்கவேண்டியிருக்கும். சனிக்கிழமைகள், நேரடியாக ஞாயிற்றுக் கிழமைகள் வந்தால் நன்றாயிருக்கும் என்ற ஏக்கத்தோடு விடியும். ஞாயிற்றுக் கிழமைகள் அவளுக்கு அடுத்த வாரத்திற்கான புத்துணர்வு தருவதற் காகவே விடிபவை. அதை தவறவிடாமல் முழுமையாய் அனுபவிப்பாள் அவள்.

இன்று செவ்வாய்க்கிழமை. கர்ப்பிணிகள் பரிசோதனை நாள், ஆய்வுக்கூட்டம், அது இது என்று இன்று வாணியின் அலுவலக வேலை கொஞ்சம் பதட்டமானது தான். ஊரிலிருந்து மாமி யார் வந்திருந்தார். நீரிழிவு நோயாளி யான அவருக்கு, தனியாகச் சமைத்து வைத்துவிட்டுத்தான் அவள் கிளம்ப வேண்டும். இந்த மாதம் முழுக்க மாமி யார் இங்கு தான் இருப்பார்கள். அடுத்த ஒரு மாதம் அவளுக்கு சமையல் வேலை குறையும். அவள் கணவனின் தம்பி வீட்டுக்கு போய்விடுவாள் மாமி யார். பரபரவென்று வேலைகளைத் தொடங்கினாள்.

வெளியில் வாக்கிங் போயிருந்த அவள் கணவன் வந்து மின்விசிறியைச் சுழலவிட்டு, “அப்பாடா” என்று அமர்ந்தான். மாமியாருக்கும், கணவனுக்கும் தேநீர் கொண்டு போய் கொடுத்தாள். யாரைப் பற்றியோ மாமி யார் கணவனிடம் பேசிக்கொண்டிருந்தார். அந்த தெருவிலிருந்த பலரும் மாமியாரின் தோழிகளாயிருந்தனர். அவர்களின் கதை கள் அடிக்கடி அந்த வீட்டின் பேசு பொருளாயிருக்கும். லீலாவதியின் மருமகள் குறித்தோ, கமலாவின் மகன் குறித்தோ, மீனாட்சியின் கணவன் குறித்தோ பேச அவள் மாமியாரிடம் நிறைய விஷயங்கள் இருந்தன. கேட்கத் தான் வாணிக்கு நேரமிருப்பதில்லை. காலை நேரங்கள் தன்மகனிடம் கதைபேசும் நேரமாயிருந்தது மாமியாருக்கு. சிலசமயம் காதில் விழும் செய்திகளுக்கு கருத்து சொல்வதோடு வாணி அதை மறந்து வேலைக்குக் கிளம்பிவிடுவாள். இன்றும் ஏதோ மீனாட்சியின் கணவன் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். “பாவம், பாவம்” என்ற வார்த்தைகள் மட்டும்தான் அவள் காதில் விழுந்தன. வேலை களை முடித்து, சாப்பாட்டு கூடையுடன் கிளம்பிவிட்டாள் வாணி.

“என்னங்க, போயிட்டு வரேன். உங்களுக்கு மதிய சாப்பாடு பாக்கில வச்சிருக்கேன். மாமி, சாப்பாடு மேசை யில எல்லாம் எடுத்து வச்சிருக்கேன், மாத்திரை எல்லாம் மறக்காமச் சாப்பிடுங்க. கீரைக்கூட்டு கட்டாயம் சாப்பிடுங்க. சாயங்காலம் சீக்கிரம் வர்றேன்” என்று சொல்லிக்கொண்டே செருப்பை மாட்டிக்கொண்டாள்.

“சரிம்மா, கோயிலுக்குப் போகணும் இன்னைக்கு, மறக்காம சீக்கிரம் வந்துடு”

மாமியார் நினைவூட்டலுக்கு “ம்ம்ம். சரி..” என்றபடி பேருந்து நிறுத்தம் நோக்கிப்போனாள் வாணி. அருகிலேயே வீடு இருப்பது ஒரு வசதி அவளுக்கு. இன்னும் நிறுத்தம் மக்களால் நிரம்பத் தொடங்கவில்லை. அது சரி, நம்மை மாதிரி ஏழு மணிக்கே வந்து பேருந்தைப் பிடிக்க எல்லோருக்கும் அவசியமா என்ன? என்று நினைத்துக்கொண்டாள். அதிலும் இது மே மாதம் பள்ளிகள் விடுமுறை என்பதால் அடுத்த தெரு புவனா டீச்சர்கூட வரவில்லை. இல்லையென்றால் அவளும் இவளைப் போலவே காலை ஏழு மணி பேருந்துக்கே வந்து நிற்பாள். “ம்ம்ம், பெண்களுக்கு ஆசிரியை வேலை தான் சரியாயிருக்கும்” என்று அவள் அம்மா அடிக்கடி சொல்வாள். புவனா டீச்சர் வராத நாட்களில் எல்லாம் அம்மா சொன்னது நினைவுக்கு வந்து வாணிக்கு வருத்தமாக இருக்கும். இந்த மருந்தாளுநர் பணிக்கு படிக்காமல் டீச்சர் வேலைக்குப் படித்திருக்கலாம் என்று தோன்றும். “எப்போதாவது யாராவது நீங்க நேத்து தந்த மாத்திரையில் இடுப்பு வலி நல்லா குறைஞ்சிடுச்சும்மா”ன்னு சொன்னா, இந்த வேலைக்கு வந்தது நினைத்து சந்தோசம் வந்துவிடும். என்ன மனசு இதுன்னு நினைத்துக்கொள்வாள்.

மருத்துவமனைக்குள் நுழையும் போதே அங்கு நிறைந்திருந்த கூட்டத்தைப் பார்த்து அவளுக்கு மலைப்பாக இருந்தது. பதிவேட்டில் கையொப்பமிட்டு விட்டு தன்னறைக்கு வந்து, மாத்திரைகள் அடங்கிய பிளாஸ்டிக் ட்ரேக்களை எடுத்து மேசையில் அடுக்கிவைத்தாள்.

இன்று வரப்போகும் கர்ப்பிணிகளுக்கான மாத்திரைகள் தனி யாக எடுத்துவைத்தாள். மருத்துவர் வந்து நோயாளிகளைப் பார்க்கத் தொடங்கியதும், மெல்லமெல்ல மக்கள் அவள் அறையின் சன்னலில் சேரத் துவங்கினர். கொஞ்சம் இயந்திரத்தனமாய் அவள் வேலை துவங்கியது. நேரம் செல்லச் செல்ல, கூட்டம் அதிகமாகத் துவங்கியது. கையில் சீட்டுக்களை வாங்குவதும், அதற்கான மாத்திரை களைப் பொறுக்குவதும், சாப்பிடும் முறைகளைச் சொல்லியபடி அவற்றைச் சன்னலுக்கு வெளியே தெரியும் மரப்பலகையில் வைப்பதுமாய் அவள் ஓர் இயந்திரம் போல இயங்கிக் கொண்டிருந்தாள். இடையில் வந்த ஒரு சீட்டுக்கு தலை நிமிர்த்திப் பார்த்தாள். அது இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைச் சீட்டு. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை நாளாக இருந்தது. அந்த நாட்களில் பெரும்பாலும் ஏற்கெனவே அதற்கான மருந்துகளை வாங்குபவர்கள் வருவார்கள். புதிதாக வரும் நோயாளிகள் வாரத்தின் எந்த நாளும் வருவதுண்டு. வாணியின் முன் ஒரு முதியவர் நின்று கொண்டிருந்தார்.

“என்னப்பா, இன்னைக்குத் தான் புதுசா இரத்த அழுத்தம் பரிசோதனை செய்தீங்களா?” என்ற அவளது கேள்விக்கு, அவர் “இல்லம்மா” என்றார்.

“அப்புறம் ஏன் இன்னைக்கு வந்திருக்கீங்க? வெள்ளிக்கிழமை வரணும்னு தெரியாதா?” கொஞ்சம் வேகம் கூடியிருந்தது வாணியின் கேள்வியில்.

விநாடி நேரம் மௌனித்தவர் மெல்லச் சொன்னார், “இல்லம்மா, ஊருக்குப் போயிட்டேன். அதான் வெள்ளிக்கிழமை வரமுடியல”.

“நோட்டைக் கொடுங்க”, என்றபடி அவரது கையிலிருந்த நோட்டை வாங்கினாள். அவர் கடந்த வெள்ளிக்கிழமையே மாத்திரை வாங்கி யிருக்க வேண்டியவர் என்பது தெரிந்ததும், வாணிக்கு சர்ரென்று கோபம் வந்தது.

ஊருக்கு போறதுதான் முக்கியமா? போய் அங்கே கொஞ்சநேரம் உக்காருங்க, நான் மாத்திரை எடுத்துதர்றேன்.”

படபடவென்று அவள் பொரிந்தாலும், அந்த முதியவர் எதுவும் பேசவில்லை. “சரிம்மா” என்றபடி அவர் விலகி எதிரில் இந்த நீளமான திண்டில் அமர்ந்து கொண்டார்.

கூட்டம் குறைந்துகொண்டே வந்தது. வாணி அவரை மறந்தேபோனாள். அநேக மாக அவள் சன்னலை சாத்தும் நேரம் வந்தபோது தான் எதிரில் அமர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அந்த முதியவரைப் பார்த்தாள். அவளுக்கு பாவமாகிவிட்டது.

“அய்யா, இங்கே வாங்க. முன்னாடியே வந்து இன்னொரு முறை எனக்கு நினைவு படுத்தியிருக்கலாமே, மறந்தே போயிட்டேன்பா” என்றபடி அவர் சீட்டை வாங்கினாள்.

“இல்லம்மா, நீங்க வேலையா இருந்தீங்க. நான் தாமதமா வந்துட்டு உங்களைத் தொந்திரவு பண்ணக் கூடாதில்ல. அதான் அப்படியே உக்கார்ந்திட்டேன்” அமைதியாய் சொன்னார்.

“எந்த ஊருக்குப் போயிருந்தீங்க. மகன் வீட்டுக்குப் போயிருந்தேம்மா...

“எங்க போயிருந்தாலும், அங்க பக்கத்தில இருக்கிற ஆஸ்பத்திரியில காட்டி இந்த மாத்திரைய வாங்கியிருக்க லாமே, இப்ப ரெண்டு நாளா என்ன பண்ணினீங்க? மாத்திரைக்கு வெளியில வாங்கினீங்களா?”

“இல்லம்மா, அங்கே ஆஸ்பத்திரி எங்கே இருக்குன்னு தெரியல, நான் நோட்டையும் கொண்டு போகல. ரெண்டு நாளா மாத்திரை சாப்பிடலைம்மா”

“அப்படி இருக்கக் கூடாதுப்பா. முறையா பரிசோதனை செய்துக்கணும், ஒழுங்கா மாத்திரை சாப்பிடணும். சரியா இப்படி விட்டுவிட்டு சாப்பிடக்கூடாது” பேசியபடியே மாத்திரைகளை எடுத்து வைத்தாள் வாணி.

“ஆமா, மாத்திரை சாப்பிட்டு எதுக்கு தான் உயிரோட இருக்கனும். போய் சேந்தா தேவலை. இன்னும் வேளை வரலையே அங்கே கொஞ்சநாள் இங்கே கொஞ்ச நாளுன்னு எத்தன நாளைக்கு இந்த அலைச்சலோ” புலம்பிக் கொண்டே மாத்திரைகளை எடுத்து வைத்துக் கொண்டார் அவர்.

“ஏம்பா, என்ன ஆச்சு, எங்கே அப்படி அலையிறீங்க” என்றாள் வாணி.

“ம்ம்ம், வயசாகக் கூடாதும்மா” சொல்லிக் கொண்டே கிளம்பினார். பாவம், அவருக்கு என்ன பிரச்சினையோ என்றபடி தன் அடுத்த வேலைகளில் கவனமானாள் வாணி.

மாலை பேருந்தைப் பிடித்து வீடு வருவதற்குள் வழக்கத்தை விடவும் தாமதமாகிவிட்டது. எல்லா செவ்வாய்க் கிழமையும் அவள் மாமியாருடன் அருகிலிருந்த முருகன் கோயிலுக்குச் சென்று வருவாள். இன்று தாமதமாகி விட்டது. இனி குளித்து கிளம்ப முடியுமா என்று யோசித்தபடியே உள்ளே நுழைந்தாள்.

“வா வாணி உனக்காகத் தான் காத்துகிட்டிருக்கேன்.”

“கோயிலுக்கு தானே அத்தே. இருங்க வந்துடறேன்”

“இல்ல வாணி, நம்ம பக்கத்து வீட்டு மீனாட்சி புருஷன போய் பாத்துட்டு வரலாம் வா”

“என்ன மாமி என்ன சொல்றீங்க அவங்களுக்கு என்ன ஆச்சு”

“அய்யோ பாவம் அவங்க கத. காலையில நான் ராஜேஷ் கிட்டெ சொல்லிகிட்டு இருந்தத நீ கேக்கலையா?”

எரிச்சல் வந்தது வாணிக்கு. காலை யில கதைக் கேக்கவா நேரம் இருக்கு என்று நினைத்துக்கொண்டே, “என்ன அத்தே சொல்லுங்க”

“அந்த மனுஷனுக்கு ஒரு கையும் காலும் வரலயாம் வாணி”

இப்போது வாணிக்கு சுரீரென்றது. அய்யோ என்று அவள் மனமும் அடித்துக்கொண்டது. “ஏன் அத்தே, எப்படி அவர் பீ.பி க்கு மாத்திரை சாப்பிட்டுகிட்டு இருந்தார்தானே விட்டுட்டாராமா?” கேட்டபடியே மறுபடியும் வெளியில் வந்து காலை செருப்புக்குள் திணித்து மாமியாருடன் மீனாட்சி வீட்டுக்கு கிளம்பினாள்.

இரண்டு வீடு தள்ளியிருந்தது மீனாட்சியம்மாவின் வீடு. பாதி நாட்கள் பூட்டிக் கிடக்கும் அந்த வீடு. அவர்களது பிள்ளைகள் வீட்டுக்கு சென்று விடுவார்கள்.

“மீனாட்சி” அத்தையின் குரலுக்கு வெளியே வந்த மீனாட்சி தளர்ந்து போயிருந்தாள். “வாங்க” என்று பொதுவாக இருவரையும் அழைத்தாள். உள்ளறைக்குப் போனார்கள். கட்டிலில் படுத்திருந்த மீனாட்சியின் கணவர் கண்கள் நிறைந்திருந்தது. எதையோ பேச விரும்பி, இயலாமல் கண்களை மூடிக்கொண்டார்.

“என்னம்மா, என்ன ஆச்சு?” வாணி யின் கேள்விக்கு மீனாட்சியம்மா பதில் சொன்னாள்.

“கொஞ்சநாளாவே அவருக்கு உடம்பு சரியில்ல. “உங்க பிள்ளைகளுக்கு சொல்லிட்டீங்களா” தலையை மட்டும் அசைத்தார்.

வாணியின் கேள்விக்கு பதிலாக மீனாட்சியம்மாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“எங்களுக்கு ரெண்டு பிள்ளைங்க. பத்து நாள் இந்த பையன் வீட்டில, பத்து நாள் அந்த பையன் வீட்டிலன்னு அலை-யறோம். இவர் சம்பாரிச்ச காலத்தில பிள்ளைங்களுக்காகன்னு செலவு பண்ணினோம். செலவுக்கு என்ன பண்றதுன்னு தெரியல. பசங்களுக்கு சொல்லியிருக்கேன். என்ன செய்றாங் களோ தெரியல?” சொல்லிக கொண்டே போனவர் உடைந்து அழ ஆரம்பித்தார்.

வாணிக்கு அவரை எப்படித் தேற்றுவது? என்று தெரியவில்லை. காலையில் அவள் சந்தித்த முதியவர் நினைவுக்கு வந்தார். அவர் புலம்பியது நினைவுக்கு வந்தது. அய்யோ அவரைக் காக்க வைத்ததும் இல்லாமல், கடுமையாக வேறு பேசினோமே என்று தன்னை நொந்துகொண்டாள்.

“கவலைப்படாதீங்க மீனாட்சிம்மா. நான் எங்க டாக்டர் கிட்டே என்ன செய்யலாம் என்னன்னு கேக்கறேன், கவலப்படாதீங்க” வேறு என்ன சொல்வது என்று தெரியாமல் வெளியில் வந்தாள் வாணி.

வழியெல்லாம் புலம்பிக்கொண்டே வந்தாள் மாமியார். இந்த மகன் வீட்டிலும், அந்த மகன் வீட்டிலுமாய் காலம் தள்ளும் தன்னைப் பற்றி பயம் வந்திருக்கவேண்டும் அவளுக்கு.

வீட்டிற்குள் நுழைந்ததும், “நீங்க பேசாம எங்க கூடவே இருந்துடுங்களேன் அத்தே, அங்கேயும் இங்கேயுமா என்னத்துக்கு அலைச்சல்?” வாணியின் கேள்விக்கு பதில் பேசாமல் கண் கலங்கி அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள். அடுத்த வெள்ளிக்கிழமை அந்த முதியவர் வரும்போது அவரிடம் தன்மையாகப் பேசவேண்டும் என்று நினைத்துக்கொண்டாள் வாணி. தனக்கும் வயதாகுமே என்ற நினைவு ஆட்கொண்டது அவளை.






# 45 வயதை கடக்கும்போது ஏற்படும் உபாதைகள்

பொதுவாக வயது அதிகமாக அதிகமாக உடலில் பிரச்சினைகள் அதிகரிக்கும். இதற்கு காரணம், உடலில் உள்ள சத்துக்களின் எண்ணிக்கை குறைவதுதான். குறிப்பாக பெண்கள் வயது அதிகரிக்கும் போது, ஊட்டச்சத்துள்ள உணவுகளை அதிகம் உட்கொள்ள வேண்டும்.

அதிலும் இறுதி மாதவிடாய் நெருங்க நெருங்க உடலின் செயல்பாடுகள் குறைவதோடு, ஊட்டச்சத்துக்களும் குறைய ஆரம்பித்து, மூட்டு வலி, கால் வலி மற்றும் பல உடல்நல பிரச்சினைகளை சந்திப்பார்கள். ஆகவே இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ள சரியான விற்றமின்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். 45 வயதைத் தொடும் பெண்களுக்கு விற்றமின் பி12 மிகவும் இன்றியமையாத விற்றமின்களில் ஒன்றாகும். அதிலும் சத்திர சிகிச்சை நடந்திருந்த அல்லது இதயத்தில் பிரச்சினை உள்ள பெண்களுக்கு, இச்சத்து மிகவும் முக்கியமானது.


ஆகவே விற்றமின் பி12 அதிகம் நிறைந்த மாட்டிறைச்சி, கானாங்கெளுத்தி மற்றும் முட்டைகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். பெண்கள் 45 வயதைக் கடக்கும்போது மாதவிடாய் நிற்கும் காலகட்டத்தை அடைகிறார்கள். அப்போது ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் உற்பத்தி நின்றுவிடும். அந்த காலக்கட்டத்தில் அவர்களுக்கு இதயநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

மனஅழுத்தம், உடல் எடை, நீரிழிவு நோய் போன்றவை இருந்தாலும் இதயம் பாதிக்கும். புகையிலை பயன்பாடு, புகைப்பிடித்தல் போன்றவை இருந்தால் பாதிப்பு மிக அதிகமாகிறது. இறுதி மாதவிடாயினால் பெண்கள் அதிகப்படியான இரும்புச்சத்துக்களை இழக்கநேரிடும். இதனால் பல பெண்கள் இரத்தச்சோகைக்கு உள்ளாவார்கள்.

எனவே இந்த நிலையை தவிர்க்க, பெண்கள் கீரைகளையும், ப்ராக்கோலியையும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். 45 வயதைக் கடக்கும்போது பெண்கள், விற்றமின் ஏ நிறைந்துள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும். இதனால் உடலில் நோயெதிர்ப்பு சக்தியானது அதிகரிக்கும். இத்தகைய விற்றமின் ஏ சத்தானது சர்க்கரைவள்ளிக் கிழங்கு, கரட் போன்றவற்றில் அதிகம் இருக்கும்.

கணவனுக்காக என்று தொடங்கி, கரு, குழந்தை வளர்ப்பு, தாய் உள்ளம் என தனது கடைசி நாள்வரை ஏதேனும் ஓர் உணர்ச்சியின்காரணமாக தனது உறக்கத்தை தனது உறவுகளுக்காக தியாகம் செய்கிறாள் மனைவி, தாய் எனும் கதாப்பாத்திரம் ஏற்கும் பெண்.

திருமணமாகி மூன்று நாட்களாக இருந்தாலும் சரி, முப்பது வருடங்கள் ஆனாலும் சரி, கணவன் தாமதமாக வீட்டிற்கு வரும் நேரத்தில் மனைவி தனது தூக்கத்தை தொலைத்துவிடுகிறாள். கர்ப்பமாக இருக்கும் ஆறு, ஏழாவது மாதத்தை கடக்கும்போது



# எப்போது பெண் தூக்கத்தை தொலைக்கிறாள்?

கண்டிப்பாக ஓர் பெண் தனது தூக்கத்தை தொலைக்க ஆரம்பிப்பாள். குழந்தை பிறந்து அது வளரும்போது ஆண்களை விட பெண் தான் அதிகம் தூக்கத்தை தொலைக்கிறாள். பசிக்காக அழும்போதும், உடல்நலக் கோளாறுகளினால் அழும்போதும், சமாதானப்படுத்தி உறங்க வைப்பதற்குள் இவளது தூக்கம் காணாமல் போய்விடும். பெரும்பாலும் பிள்ளை வெளியே சென்று இரவு சாப்பாட்டிற்கு வீடு திரும்பவில்லை எனில், அவன் சாப்பிட்டானோ, இல்லையோ என்ற ஏக்கமே தாயின் உறக்கத்தை காணாமல்போக செய்துவிடுகிறது.

வீட்டில் யாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனாலும், அவர்களைவிட அதிகமாக உறக்கத்தை தொலைப்பவள் பெண்தான் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. தான் நினைத்தது தன் கணவன் அல்லது பிள்ளைகளின்மூலம் நடக்காமல் போகும்போது அந்த பெண் மனஅழுத்தத்தின் காரணமாகத் தனது தூக்கத்தை தொலைக்கிறாள். தன் விருப்பத்தை கணவனோ, பிள்ளைகளோ அதை ஏற்க மறுக்கும்போது பெண் அதிக மனஉளைச்சலுக்கு தள்ளப்படுகிறாள்.

# பாடலை வெளியிடுவது எளிமையாகிவிட்டது

## ஏ.ஆர்.ரஹ்மான் சிறப்புப் பேட்டி

இசையும் இசை சார்ந்தும் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கும் கலைஞன் ஏ.ஆர்.ரஹ்மான். 20 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தமிழக மேடைகளில் தன் இசையை பரவவிட்டு வருகிறார். அவருடனான சிறப்புப்பேட்டி:

**சென்னை மற்றும் கோவையில் நடைபெற்ற ‘நெஞ்சே எழு" நிகழ்ச்சி உங்களுக்கு எப்படிப்பட்ட அனுபவத்தைக் கொடுத்தது?**

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நம் ஊரில் இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவருகிறேன். அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து என்று சர்வதேச இசைப் பயணத்தில் இடைப்பட்ட நாட்கள் ஓடிவிட்டன. வெளிநாடுகளில் எந்த மாதிரி இசை நிகழ்ச்சிகளை கொடுத்தோமோ அதில் கொஞ்சமும் சமரசம் செய்துகொள்ளாமல் அதே புத்துணர்ச்சியோடு தமிழகத்திலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தினோம். இந்த இசை நிகழ்ச்சியை அடுத்தடுத்த ஊர்களில் தொடர்ந்து நடத்தும் எண்ணம் இருக்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒவ்வொரு ஊருக்கும் சென்று திரும்புகிறேன். நிறைய மாற்றங்கள் உருவாகியிருக்கின்றன. இதைப் பார்க்கவே சந்தோஷமாக இருக்கிறது.

**கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளியாகி கவனம்பெற்ற படங்கள் அனைத்தும் புதிய படைப்பாளிகள் உழைப்பில் வெளியான சிறு பட்ஜெட் படங்கள். இதுபோன்ற படங்களில் உங்கள் பங்களிப்பு இருக்கவேண்டும் என்று ரசிகர்கள் விரும்புகிறார்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?**

இந்த வேலையை நானே கையில் எடுத்துள்ளேன். அதற்காகத்தான் படங்கள் தயாரிக்கும் பணிகளில் இறங்கியுள்ளேன். பல இயக்குநர்களிடம் கதை கேட்டுவருகிறேன். சின்ன பட்ஜெட், பெரிய பட்ஜெட் உள்ளிட்ட எல்லா விதமான படங்களும் தயாரிப்பேன். தற்போது என்னுடைய சக்தியை அதற்காகத்தான் செலவிடுகிறேன்.

**கதை எழுதிக்கொண்டிருந்தீர்களே..?**

ஆமாம். அந்த வேலையும் தீவிரமாக நடந்துவருகிறது.



**கர்நாடக இசை அதன் எல்லையைத் தாண்டிப்போவதாக சொல்லப்படுகிறதே?**

அப்படியெல்லாம் இல்லை. மக்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை பொறுத்துதான் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

**நீங்கள் புதிய இசையில் கவனம் செலுத்தி வருகிறீர்களா?**

பிரேசில் நாட்டு படம் ஒன்றுக்கு தற்போதுதான் இசையமைத்து வருகிறேன். இசையில் புதிய விஷயங்கள் பற்றி இனிதான் யோசிக்க வேண்டும்.

**முழு அல்பத்தைவிட சிங்கிள் டிராக் ரிலீஸ் சினிமாவில் அதிக கவனம் பெற்றுவருகிறதே?**

இரண்டுமே இங்கு முக்கியம். அல்பம் எப்போதும் சினிமா ரிலீஸாவதற்கு கொஞ்சம் முன்பே ரிலீஸாவது நல்லது. அதில் ஒரு டிராக் ஹிட் ஆகும்போது படத்துக்கு அது பெரிய அளவில் உதவியாக இருக்கும். சிங்கிள் டிராக் பண்ணும்போது அதில் மட்டும் முழு சக்தியையும் பயன்படுத்துவோம். நன்றாக வந்திருக்கும் பட்சத்தில் அதன் மேல் நம்பிக்கை ஏற்பட்டு உடனே அதை ரிலீஸ் செய்கிறோம். தற்போது அதற்கும் இங்கே கவனம் கிடைக்கிறது.

**உங்கள் இசையில் சமீபத்தில் வெளிவந்த ‘தள்ளிப்போகாதே" சிங்கிள் டிராக் அதிக கவனம் பெற்றிருக்கிறதே?**

ஒரு பாடலை வெளியிடுவது எளிமையாகிவிட்டது. முன்பெல்லாம் ஒரு பாடல் தயாராக வேண்டும் என்றால் அதை உருவாக்கி, அதற்கு ‘சிடி' கவர் தயார் செய்து, அதற்கு பிரின்டிங் வேலைகள் எல்லாம் முடித்து பின்னர் வெளியிடுவது மிகப்பெரிய வேலையாக இருந்தது. இப்போது சிங்கிள் டிராக் ரிலீஸ் செய்வதன்மூலம் அது அவசியமில்லாமல் போகிறது.

‘அச்சம் என்பது மடமையடா" படத்தில் ‘தள்ளிப் போகாதே" பாடல் உருவாக ஒரு வாரமானது. அதையே மிக்ஸ் செய்து பாடலை அப்லோட் செய்யும் வேலை ஒரு நாளுக்குள் முடிந்தது. தொழில்நுட்பம் அந்த அளவுக்கு எளிமையாகிவிட்டது. அப்படி ரிலீஸ் செய்யப்படும் சிங்கிள் டிராக் பாடல் எந்த நேரத்தில் வெளியானால் நல்லது என்பதை மட்டும் பார்த்து வெளியிட்டால் போதும்.

**சிங்கிள் டிராக் மூலம் அடையாளம் பெற்று சிலர் இசையமைப்பாளர்களாக அறிமுகம் ஆகிறார்களே?**


அது நல்லதுதான். ஏதாவது புதுமையை கொண்டுவந்தால் மக்கள் மகிழ்ச்சியடையத்தானே செய்வார்கள்.

**இசையில் கொப்பி ரைட் பிரச்சினை பற்றி அதிக செய்திகள் வெளி வருகிறதே?**

அது பெரிய சப்ஜெக்ட். இங்கே அது சார்ந்த சட்டங்களை அணுக எளிமையான வழிகள் இல்லை. ‘டிரம்ஸ்" சிவமணி அமைத்த டிராக் ஒன்று வெளியானது. அதற்கான எந்த கிரெடிட்டும் யாரும் கொடுக்கவில்லை, கேட்கவுமில்லை. இதை தடுக்க வழிகள் இதுவரை இல்லாமல்தான் உள்ளது. அதனால்தான் இசைக் கலைஞர்கள் தங்களது இசையை சுதந்திரமாக வெளியிட யோசிக்க வேண்டியநிலை இருக்கிறது.



# பாப்பா முரசு



## சிறுவர் கதை

அக்பர் சக்கரவர்த்தி, பீர்பாலிடம் எவ்வளவு மதிப்பும் பிரியமும் வைத்திருந்தபோதிலும் சிலசமயங்களில், அவர்மீது கடுமையான கோபம் கொள்வதும் உண்டு. கோபத்தின் அவசரத்தில் தண்டனை அளிப்பார். சிலநாட்களில் அத்தண்டனையை மாற்றவும் செய்வார். இது வழக்கமான கதையாகிவிட்டது இருவருக்கும். ஒருநாள் ஏதோ கோபத்தால் பீர்பாலை நாட்டைவிட்டு உடனே வெளியேறும்படி



# படிப்பு எதற்கு?

உத்தரவிட்டார். என்ன செய்வார் பீர்பால். தண்டனைக்குக் கீழ்ப்படிந்து நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.


பல மைல்கள் நடந்து களைப்புற்றார். கையில் பணம் இல்லை, பசி வேறு துன்புறுத்தியது. சோர்ந்து ஒரு வீட்டின் திண்ணைமீது உட்கார்ந்துவிட்டார். அவரைப் பார்த்த ஒருவர், இவர் பீர்பால் அல்லவா ! ஏன் இப்படியாகிவிட்டார் என எண்ணி, அவருக்கு ஆகாரம்கொடுத்து ஆறுதல்கூறி, அவ்வூர் ஜமீந்தாரிடம் அழைத்துக்கொண்டு போய் அறிமுகப்படுத்தினார்.

ஜமீந்தார் படிப்பு வாசனையே அறியாதவர். ஆனாலும், பரம்பரையாக வந்த ஜமீந்தார்! மிகவும் கஞ்சன். தம் மகனுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதற்காக பீர்பாலை நியமிக்கலாம் எனக் கருதினார். "என்னிடம் வேலையாட்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால், எம் மகனுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்காக உம்மை வைத்துக் கொள்கிறேன்" என்றார் ஜமீந்தார். 'எவ்வளவு ஊதியம் கொடுப்பீர்கள்?' என்று கேட்டார் பீர்பால்.

"என் வீட்டில் சாப்பாடு போட்டு உமக்கு மாதம் பத்து ரூபாய் தருகிறேன். நீர் பெரிய கல்விமான் என்று கூறினார் என் நண்பர். ஆனாலும், இதற்கு அதிகமாக என்னால் தர இயலாது" என கண்டிப்பாகச் சொன்னார் ஜமீந்தார். பீர்பாலுக்கு கோபம் அதிகரித்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். அருகில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "அவன் யார்?" என்று கேட்டார் பீர்பால். 'என்னுடைய குதிரைவண்டியை ஓட்டுபவன்' என்றார். 'அவனுக்கு என்ன ஊதியம்?' என்று கேட்டார் பீர்பால். "மாதம் பதினைந்து ரூபாய் கொடுத்து சாப்பாடும்போட்டு வருகிறேன்" என்றார் ஜமீந்தார். பீர்பால் கோபமுற்றார். ஜமீந்தாரை நோக்கி, 'உங்கள் மகன் பத்து ஆண்டுகள் படித்து என்ன செய்யப் போகிறான்? என்னைப் போல பத்து ரூபாய்தானே ஊதியம் பெறமுடியும்? ஆகையால், அவனுக்குக் குதிரை வண்டி ஓட்டுவதற்குக் கற்றுக் கொடுத்தால், மாதம் பதினைந்து ரூபாய் ஊதியம் கிடைக்குமே, அதை முதலில் செய்யுங்கள்' என்று கூறி எழுந்தார் பீர்பால்.

தன்னுடைய கஞ்சத்தனத்துக்குச் சரியான சூடு கொடுத்தார் பீர்பால் என வெட்கப்பட்டார் ஜமீந்தார். ஆனால், என்னுடைய சுபாவத்தை நான் மாற்றிக் கொள்ளமுடியுமா என எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்தார்.

## வாரம் ஒரு திருக்குறள்



### உட்பகை

**"மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா**
**ஏதம் பலவும் தரும்."**


மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமானால், அது அவனுக்குச் சுற்றம் சீர்படாமைக்கு காரணமான குற்றம் பலவற்றைத் தரும்.

குறள் : 884


## புதிய தகவல்கள் தெரிந்துகொள்வோம்




ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும்.



ஒரு பென்சிலைக் கொண்டு, 58 கி.மீ. நீளமான கோடு போடலாம்.



வாத்து அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்



நண்டிற்கு தலை கிடையாது. அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்!



எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் உயிர் வாழும்.



ஆப்கானிஸ்தானில் ரயில் கிடையாது

## அதிரடி ஐயாத்துரை



* வடக்கின்ர சகல இடங்களிலையும் 'அபி விருத்தி'யை வெறுத் தவையே அபிவிருத்திக் கூட்டங்களை நடாத்த வேண்டிய கட்டம் வந்துட்டுது பாருங்கோ. உதுதான் சொல்லுறது ஓடமும் ஒரு நாள் வண்டியிலேறுமெண்டு. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலை 'கூத்தாடிகள்' பேசின பேச்சுக்களும் உரைகளும். யப்பா! அரசியலில இவங்கள் நம்மட தமிழ்நாட்டுக் 'கலைஞர்' ஐயாவையே மிஞ்சிட்டாங்கள். யாழ்ப்பாணத்திலை 'மாவிட்ட புரத்துக்காரரும்' வடக்கின் 'விக்கினவிநாயகனும்' மாறிமாறி 'அப்புக்காத்துக் கதை' அளந்தவை. 'வெத்திலை' தம்பி சைலண்டாக இருந்து மட்ச் பார்த்தவர். 'சிறுபிள்ளை பாதி' மந்திரி அதிகாரி களை மிரட்டிய மிரட்டலும் உருட்டலும் கள அதிகாரிகளுக்கு எரிச்சலோ எரிச்சல்.

* 'குரக்கன் சால்வை' குடும்பத்துக்கு ஆப்படிக்க 'திரியரும்' 'சிங்கத்தாரும்' சேர்ந்து கிளம்பிட்ட மாதிரித் தெரியுது. ஆனாக் 'குரக்கன் சால்வை' குறூப்புக்கு கிராம மட்டங்களில செல் வாக்கு இருக்குது. உது சகலருக்கும் தெரியும். முந்தி ஆனைக்கட்சியின்ர 'அதி உத்தமனார்' ஒருவர் 'பாத யாத்திரை' செய்துதான் ஆட்சியைப் பிடித்தவர் எண்டு ஒரு கதை இருக்கு. 'குரக்கன் சால்வையும் தன்ர டீமோட 'பழைய யாத்திரை' ஒண்டு செய்யப்போகுதெண்டு பரவலாக் கதை வருகுது. உது எங்கை போய் முடியுமண்டு தெரியேல்லைப் பாருங்கோ. 'சிங்கத்தாருக்கு' 'ஒரு வருசம்' எண்ட 'தத்து' வேறு இருக்கு.

* வடக்குப் பெரிய அவையின் கீழே வருகின்ற பெரிய அதிகாரிகளில சிலர் மேலே ஊழல் குற்றச்சாட்டுக்கள் எண்டு 'தொழிற்சங்கங்களும்' 'கணக்காய்வு அதிபதிகளும்' போட்டு வாங்கினம். ஒருவரையாவது நீங்கள் பிடிச்சனீங்களோ? 'பூனையை' வளத்தும் 'எலி' பெருகின கதைதான் பாருங்கோ. இப்ப 'எலிகள்' எல்லாம் 'பெருச்சாளிகளா' மாறிட்டுது. வன்னிக்குள்ள 'வேலாள' கல்வி அதிகாரி 'கொன்ராக்ட்' செய்யிற பெண் கல்வி அதிகாரி ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் 'பைல்' கணக்கா நிரம்பி வழியுது. சும்மா பகிடி விடாதேங்கோ. 'நெல்சிப்' பெருச்சாளிகளே 'பிக்கப்'பில வலம் வரேக்கை எங்களைப் பிடிக்க முடியுமோ? நாங்களும் பிடிக்கிறதுக்கு 'ஆக்களைப்' பிடிப்பமல்ல.

* 'சமஸ்டி'க்கு வரைவிலக்கணத்தினைத் தேடுவதற்கு 'கூத்தாடிகள்' இருவர் லண்டன் பயணம். 'மந்திரத்தாருக்கு' 'சமஸ்டி' எண்டாலே அலர்ஜி. உப்ப புதிய 'பேரவை' ஒரு 'தீர்வு' வெளியிட்டது எல்லோ. உதைப் பாக்க தலைசுத்துது. நீங்கள் தீர்வு பெறவேண்டும் எண்டு உழைக்கிறீங்களோ? அல்லது கிடைக்கக் கூடாது எண்டு உழைக்கிறீங்களோ? உதுக்குள்ள 'மொனிட்டர் ஞானத்தார்' வேற ஒரு குறூப்பை வைத்துக்கொண்டு குத்திமுறியுறார். காய்முந்தி 'இடைக்கால நிர்வாகசபை' எண்டு வெளிக்கிட்டு 'கிராண்ட் அடி' வாங்கினதை இன்றும் மறக்கேல்லைப் போல கிடக்குது. 20 பேர் 'கள்ளக்' கையெழுத்து போட்டும் 'விக்கின விநாயகன்' மசியேல்லைப் பாருங்கோ. மனுசன் 'பனங்காட்டு நரி' எல்லோ.

* கிழக்குப் பக்கமா ஒரு இனமோதலை உருவாக்கிறதுக்கு 'கூத்தாடிகள் தூபம் போடுற மாதிரித் தெரியுது. மேசையில இருந்து தமிழ்பேசும் 'சகோதர இனத்தவரோட' 'டீ' குடிச்சாலும் 'கூத்தாடிகளுடைய' கொள்கை தெரியும்தானே? கிழக்கிலை முதலமைச்சர், பிரதி அமைச்சர்கள், எம்.பி-மார் எண்டு எல்லோரும் ஓரினம். தாங்கள் வேறினம் எண்டு பிரிச்சுப் பேசினம். நீங்கள்தானே சிறப்பு இனம். 'தமிழ்க் கூத்தாடிகள் இனம்' இதுக்குள்ள 'வன்னியிலயும்' இனத்துவேசச் சாம்பிராணியினைப் புகைக்க விட்டிருக்கினம் 'கூத்தாடிகள்'. அங்கையும் 'கபினட் அமைச்சர்' ஒரு எம்.பி இவையெல்லா ருக்கும் தான் 'பவர்'. தாங்கள் 'டம்மி' எண்டு புலம்பிக்கொண்டு திரியினம்.

* உப்ப 'தமிழ் அரசியல் தலைவர்களுக் கெல்லாம்' பெரிய கவலை என்ன தெரியுமோ? உவர் வீணைக்கட்சித் 'தேவர்' எந்தப் பக்கம் ' பண்டாரவன்னியனா?' 'கௌரவர் அணியா?' 'நேச அணியா?' 'அச்சு அணியா?' மனுசன் யாழ்ப்பாணத்தில நிண்டாலும் மக்களைச் சந்திக்குது. கொழும்பில மக்கள் தன்னைச் சந்திக்க வந்தாலும் 'பஸ்' காசுகொடுக்குது எண்டும் கேள்விப்படுறன். 'சேவை' செய்யுறதுக்கு 'அதிகாரம்' தேவையில்லைப் பாருங்கோ. 'மனம்' தான் தேவை. 'தேவ சேவை' தொடருட்டும்.

# வாராந்த செய்திக்கொத்து

## ஊடகவியலாளர்கள் மீதான ரணிலின் குற்றச்சாட்டு சரியானதே: ஏ.ஜெயசூரியன



ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்து தவறில்லை என இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் ஊடகம் குறித்து தெரிவித்த கருத்து, ஊடக அச்சுறுத்தலுக்கான செயற்பாடு என எதிர்க்கட்சிகள் தமது விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ள நிலையிலேயே இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.ஜெயசூரியன் இதனை தெரிவித்தார். யுத்தம் நிறைவடைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தவேளையில், ஊடகவியலாளர்கள் தமது பணியை திறன்பட செய்யவேண்டும் எனவும் அவர் ஊடகவியலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கொழும்பில் 3ம், 4ம் திகதிகளில் விசேட போக்குவரத்து நடைமுறை!



சுதந்திர தின நிகழ்வுகளை முன்னிட்டு இடம்பெறுகின்ற முன்னோடி பயிற்சி நடவடிக்கையினால் புதன்கிழமையும், சுதந்திர தினத் தன்றும் விசேட போக்குவரத்து நடைமுறையை அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இதன்படி, புதன்கிழமை(3) அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணிவரை விசேட போக்குவரத்து நடைமுறையை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## T-20 போட்டி வரலாற்றில் இலங்கையர் புதிய சாதனை உலக சாதனை



இலங்கையின் உள்ளூர் T-20 போட்டிகளில் வளர்ந்துவரும் கிரிக்கெட் வீரரான தசுன் ஷானக தனது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்திவருகின்றார். சிங்களீஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியின் தலைவராக செயற்பட்டு வரும் இவர் இரு போட்டிகளில் அதிரடியாக விளையாடி சதம் குவித்திருந்தார். காலி அணியுடனான போட்டியின்போது 48 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 131 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இதில் 12 ஆறு ஓட்டங்களும் 10 நான்கு ஓட்டங்களும் உள்ளடங்கும். அத்துடன் சரகென்ஸ் அணியுடனான போட்டியில் வெறுமனே 46 பந்துகளுக்கு மாத்திரம் முகங்கொடுத்து 123 ஓட்டங்களை விளாசியிருந்தார். இதில் 16 ஆறு ஓட்டங்களும் 2 நான்கு ஓட்டங்களும் உள்ளடங்கும்.

## யோசிதவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்சவிற்கு எதிராக கடற்படையினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

கடற்படை லெப்டினனான யோசித, ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றிய காலத்தில் தனது சுயவிருப்பின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் அனுமதியின்றி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். இதன்படி, விரைவில் யோசிதவிற்கு எதிராக விரிவாக ஒழுக்காற்று விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முருகன் விடுதலைக்காக பத்து லட்சம் கையெழுத்து பெறுவதற்கு உதவுங்கள்!



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் எனது மகன் முருகன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலைக்காக இலங்கையில் பத்து லட்சம் கையெழுத்துக்கள் தேவையாக உள்ளது. இக் கையெழுத்துக்களைப் பெறுவதற்கு எனக்கு உதவி செய்யுங்கள் என முருகனின் தாயார் வெற்றிவேல் சோமணி உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசியல்வாதிகள், பொதுஅமைப்புகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமே அவர் இந்தக் உருக்கமான கோரிக்கையை விடுத்துள்ளார். கிளிநொச்சி மாவட்டம், பளையில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் பட்டப்பகலில் துணிகரக் கொள்ளை



யாழ்.கட்டப்பிராய் பகுதியில் பட்டப் பகலில் வீடு புகுந்து கொள்ளையிட முயன்றவர்கள், வீட்டின் உரிமையாளரின் துணிச்சலினால் வசமாக மாட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்.கல்வியங்காடு - கட்டப்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் வீட்டின் உரிமையாளர்கள் இல்லாதநிலையில், பிற்பகல் 2.30 மணியளவில் உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த அலுமாரிகள், மேசை லாச்சிகளை உடைத்து தேடுதல் நடத்தி சுமார் 55ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுள்ளனர்.

இந்நிலையில் வீட்டின் உரிமையாளரான பெண்வீட்டுக்கு வந்தபோது வீட்டின் கதவை உடைத்து கொள்ளையர்கள் உட்புகுந்துள்ளதை அவதானித்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண் கூச்சலிட்டநிலையில் கொள்ளையர்கள் ஓடியுள்ளனர். இதனையடுத்து குறித்த பெண் தனது கைத்தொலை பேசியில் புகைப்படம் எடுத்துள்ளதுடன் கொள்ளையர் களில் ஒருவரின் கைப்பையையும் பறித்துள்ளார்.

## கதிரியக்க சக்தி கொண்ட அபூர்வ இரத்தினக்கல்



கதிரியக்க சக்தி கொண்ட எக்கணைட் எனப்படும் அபூர்வ இரத்தினக்கல் ஒன்று வெலிமடையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இது உலகின் மிகப்பெரிய எக்கணைட் கல் என கருதப்படுகிறது. இது இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட மாணிக்கம் கல்லைவிட தோராயமாக மூன்று மடங்கு பெரியதாகும். அந்த பகுதி தொழிலதிபர் இதனை வாங்கியதாகவும், பளபளப்பான, கொரியா பாறைகள் காணப்படும் வெலிமடை பகுதியில் கிடைத்த இக்கல்லை7 துண்டுகளாக்கமுடியும் எனவும், இந்த அரிய கற்கள் பற்றி தெரிந்த இரத்தினபுரி ஊடகவியலாளர் ஒருவர் கூறியுள்ளார். 1985 ஆம் ஆண்டில் 168 கேரட் உடைய இவ்வகை கல் ஒன்று கிடைத்துள்ள அதே வேளை, இது 498 கேரட் உடையது. தேன் நிறம் கொண்ட இக்கல்லில் 8 மில்லியன் கோடுகள் உள்ளதாகவும். உள்ளே எந்தவித error உம் இல்லாத வகையிலும் (error-free clear sound experience) அத்துடன் இக்கல்லுக்கு quality sapphire சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

## மணமகன் தேவை விளம்பரம் ஊடாக பெண்களை ஏமாற்றி வந்த திருடன்

பத்திரிகைகளில் வெளிவரும் மணமகன் தேவை என்ற பகுதியூடாக நாட்டின் பல பிரதேசங்களிலும் பெண்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அவர்களின் தங்க நகைகளை கொள்ளையடித்து வந்த நபர் ஒருவரை களுத்துறை தெற்குப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை குறித்த நபர் 2 கிராம், 80 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே பொலிஸார் கைது செய்திருந்ததாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் பொலிஸார் குறித்த சந்தேக நபரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின்போதே இந்த நபர் குறித்த ஏனைய குற்றச்செயல்கள் பற்றி தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் களுத்துறை, பொரலஸ்கமுவ, காலி, வாதுவ, மாத்தறை, மொரட்டுவை, பாணந்துறை, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி உள்ளிட்ட பல பிரதேசங்களிலுள்ள பெண்களை ஏமாற்றி பெறுமதியான தங்கநகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் மற்றும் ஊடக வேட்டை ஆரம்பம்! - டலஸ்





அரசியல் வேட்டை மற்றும் ஊடக வேட்டை நாட்டில் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும தெரிவித்தார். கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். சி.எஸ்.என் தொலைக்காட்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஊடக வேட்டை நாட்டில் தொடர்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். அத்துடன், சி.எஸ்.என் தொலைக்காட்சியை அரசுடமையாக்கப் போவதாகவும், அந்த நிறுவனத்திற்கு விளம்பரங்களை வழங்க வேண்டாம் எனவும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஏற்கனவே கூறியிருந்ததாகவும் அவர் நினைவூட்டினார். அத்துடன், தற்போதைய அரசாங்கம் பகிரங்கமாக அச்சுறுத்தல்களை விடுக்க ஆரம்பித்துள்ளதாகவும், இது எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான விடயம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

## வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழில் கவனயீர்ப்பு!




வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணம் மாவட்டச் செய லகம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என உறுதியளித்திருந்த போதும், இதுவரையில் தங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் அதனைத் தொடர்ந்து வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில் நந்தனனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். வடமாகாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி பட்டதாரிகள். தேசிய உயர் தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகள் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## ஊழல் மோசடி ஆணைக்குழுவில் ஷிரந்தி ராஜபக்ஷ ஆஜர்



நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்சவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, பாரிய ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் ஊடக ஆலோசகராக செயற்பட்ட ஒருவருக்கு குறைந்த மதிப்பீட்டில் வீடொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு குறித்தே ஷிரந்தி ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது. கஹதுடுவ பிரதேசத்திலுள்ள குறித்த வீடு 5 இலட்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த வீட்டின் உண்மை பெறுமதி 55 இலட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழத்தை கைவிடவுள்ளோம் - சிறிதரன்



தமீழீழம் என்ற பேச்சை எடுத்தால் புத்திஜீவிகள் பயப்படுகின்றார்கள். தமிழீழம் குறித்து இனியும் பேசிக்கொண்டிருப்பதில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிவது தொடர்பாக கிளிநொச்சியிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது, "தமிழீழத்தை மக்கள் நிராகரித்துள்ளனர். சிங்கள மக்கள் மத்தியில் நின்று தமிழீழத்தை வேண்டிப் பேசஇயலாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது விஞ்ஞாபனத்தில் தமிழீழ கோரிக்கையை முன்வைத்து போட்டியிடவில்லை. தமிழீழ கோரிக்கைக்கு அப்பால் சென்று தீர்வை முன்வைத்து போட்டியிட்டவர்களையும் மக்கள் நிராகரித்துள்ளனர். கிடைக்கப்போகும் தீர்வை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

# கீழைத்தேய மருத்துவம் ஒரு வாழ்க்கைத் தத்துவம்

Dr.விக்னவேணி செல்வநாதன்
BSMS,MD

நேர்காணல் : .தவப்பிரியா
மேல் மாகாணம் ஹொரண எல்ல கந்த தமிழ் மகா வித்தியாலயம்




கீழைத்தேய பிரசித்தமான சித்த ஆயுர்வேதம் பற்றி தகவல்களைப் பெறுவதற்காக பாரம்பரிய வைத்தியத் துறைக்கான தேசிய நிறுவனம், மருத்துவ ஆலோசகர் என பல்வேறு சேவைகளை ஆற்றிவரும் டாக்டர் விக்னவேணி செல்வநாதன் அவர்களை சந்திக்கும் வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டோம்.

**○ சித்த ஆயுர்வேத மருத்துவத் துறையின் ஆரம்பம் முதல் இற்றை வரையான பங்களிப்புப் பற்றிக் கூறுங்கள்.**

பாரம்பரிய மருத்துவ முறையான இத்துறை 1800களில் அந்நியரின் ஆளுகைக்குமுன் இலங்கையில் சிறப்பாக இருந்தது. அதற்குமுன் இராவணன் ஆட்சிக் காலத்திலேயே சிறந்த வைத்திய முறையுடனும், ஏனைய கலைகள் விருத்தியடைந்த நிலையைக் கொண்டதுமான நாகரீக சமூகம் இந்நாட்டில் இருந்திருக்கிறது. இக்கீழைத்தேச மருத்துவமானது அறிவியல்ரீதியானது. வெறுமனே நோய்களைக் குணமாக்கும் விஞ்ஞானம் மட்டுமல்ல மாந்தரின் வாழ்க்கைத் தத்துவமும்கூட.

தற்காலத்தில் பேசப்படும் உடல், உள, ஆரோக்கியம் சமூக நன்னிலை, ஆன்மீகத் தெளிவு என்பவற்றையெல்லாம் 14,000 நூற்றாண்டுகளுக்கு முன்பே தெளிவாகவும் ஆழமாகவும் இன்பத் தமிழிலேயே எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

**○ மனிதரோடு பின்னிப் பிணைந்த வாழ்க்கைத் தத்துவம் எனக் குறிப்பிடுகிறீர்கள். உலக அளவில் இதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதா?**

ஆம் 1978ஆம் ஆண்டு Almaata அறிக்கையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மாற்று மருத்துவத் துறைகளை 50 வீதமான மக்கள் தமது ஆரோக்கிய தேவைக்காக நாடுவதை ஏற்றுக் கொண்டுள்ளது. இன்று இலங்கையின் தேசிய மருத்துவங்களாக ஆயுர்வேதம், சித்தயுனானி, பாரம்பரிய வைத்தியம் என்பவற்றுடன் கீழைத்தேசத்தின் மருத்துவங்களான அக்குபஞ்சர் ஹோமியோபதி என்பவை கருத்தில் கொள்ளப்படுவதுடன் பிரித்தானியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் பல்கலைக்கழக அந்தஸ்துப் பெற்ற கல்லூரிகளையே இலங்கை சுதேச மருத்துவர்கள் நிறுவியுள்ளனர். இம்மருத்துவ அடிப்படையிலான ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளனர். இவற்றுக்கு மேலாக என்ன அங்கீகாரம்? இன்று மேற்குலகின் அறிவியல் தேடல்களின் கருப்பொருள்கள் கீழைத்தேச அறிவியலை அடிப்படையாகக் கொண்டவையாக இருப்பது யாவரும் அறிந்ததே.

**○ சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யுனானி வைத்தியம் இவற்றுக்கிடையேயான பாகுபாடு என்ன?**

இந்து நாகரீகம் எனப்படும் சிந்து நாகரீக வளர்ச்சியும் அதன் வெளிப்பாடுகளின் ஒன்றாகவுமே இந்த ஆயுர்வேதம் சித்த வைத்தியம் காணப்படுகிறது. அது போல் கிரேக்க நாகரீகத்தின் தேடல்கள் கீழைத்தேச அறிவியல் பக்கம் திரும்பியுள்ளது.

சித்த வைத்திய நூல்களின் மூலமொழி தமிழாயும் ஆயுர்வேத நூல்களின் மூலமொழி வடமொழியாகவும் காணப்பட்டபோதும் இரண்டின் தொடக்கமும் சிவனே என்று கருதப்படுகிறது. சிவபெருமானால் கூறப்பட்ட இக்கலையை அகத்தியர் தமிழிலும் தன் வந்திரி வடமொழியிலும் கூறியவை. ஆரம்பத்தில் வாய்மொழியாகவும், பின் ஏடுகளிலும் எழுதப்பட்டு பேணிவரப்பட்டுள்ளது.

எனினும் ஆயுர்வேதம் சித்த மருத்துவம் இரண்டின் அடிப்படைத் தத்துவங்களும் இந்துசமய தத்துவங்களின் அடிப்படையில் காணப்படுகின்றன. இதில் சித்த மருத்துவம் என்பது சித்தர்களால் மெருகேற்றப்பட்டு காணப்படுகிறது. யுனானி மருத்துவம் உருதுமொழியில் மூல நூல்களைக் கொண்டதாகவும் கிரேக்க அயோனிய நாகரீக கலாசார பின்னணியில் உருவாகியதாகவும் காணப்படுகின்றபோதும் இம்மூன்று மருத்துவங்களும் இயற்கையை அடிப்படையாகக்கொண்டு இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகள் தாதுப்பொருட்களை, விலங்குப் பொருட்களிலான மருந்துகளைப் பிரயோகித்து சிகிச்சையளிப்பதில் மூன்றும் ஒற்றுமையை கொண்டுள்ளன. அத்துடன் இவ்வகையான மருத்துவங்கள் மனித நாகரீக வளர்ச்சியோடு வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்கமுடியும்.

**○ கீழைத்தேய மருத்துவம், மேல்நாட்டு மருத்துவம் இவற்றுக் கிடையேயான பாரிய வேறுபாடு என்ன? இவற்றுக்கிடையே தொடர்புகள் காணப்படுகின்றதா?**

கீழைத்தேய மருத்துவம் நான் ஏற்கனவே கூறியதுபோல் அதாவது மனிதன் பிறப்பு, உற்பத்தி, வாழ்க்கைக் காலம், ஆன்மா, உயிர், உடல் என்று துர்பூரணமான நன்னியக்குரிய தேவைகளை கருத்திற்கொள்கின்றது. அதாவது சுகவாழ்க்கை மனமகிழ்ச்சியான வாழ்க்கை, நீண்டகால வாழ்க்கை என்பவற்றை நோக்கமாகக் கொண்டது. மேலும் நோய் வராமல் தடுப்பது வந்த நோயை தீர்ப்பது இறப்பைத் தள்ளிப் போடுவது வாழும் காலத்தில் இளமையுடன் வாழவைப்பது என்னும் நோக்கில் பயிலப்படுவது இங்கு ஆரோக்கியம் ஒரு பேறாக கொள்ளப்படுகின்றது.

சித்த நூல்களில் 4448 நோய்கள் கூறப்பட்டுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டும். ஆயினும் நவீன மேல்நாட்டு மருத்துவம் என்பது மனிதனின் நவீன விஞ்ஞான அறிவு தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் ஆய்வுகளால் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து ஓர் உயிரை உருவாக்கும் அளவுக்கு குளோனிங் முறை வளர்ச்சியடைந்துள்ளது.

மேலைத்தேய மருத்துவ மருந்துகள் விஞ்ஞானரீதியாக ஆய்வுகூடங்களில் செயற்கையாக உருவாக்கப்பட்டவை. ஆரம்பத்தில் நுண்ணுயிர்கள் நோயால் உருவாவது என்னும் கருதுகோள், பின் தரவுகளின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியான காரணகாரியங்களை அடிப்படையாகக் கொண்ட பரிகார முறைகளைக் கொண்டது. காலத்துக்கு காலம் மாற்றங்களுடன் முன்னேற்றத்தையும் கொண்டது.

ஆயினும் கீழைத்தேய மருத்துவத்தில் உடலுக்கு அந்நோயை எதிர்க்கும் சக்தியைப் பெருக்கும் நோக்கில் உயிர்ச் சக்திகளில் (Vital Energy) நீக்கம், நிறைத்தல், காப்பு என்னும் முறைகளில் சிகிச்சை செய்யப் படுகின்றது. மேலும் ஓர் உயிர் அங்கியை வெவ்வேறு கூறுகளாக நோக்கி, வெவ்வேறு துறைசார் உதாரணமாக Cardiology, Dermatology என்று மருத்துவம் செய்யப்படுகிறது. ஆனால் கீழைத்தேய மருத்துவத்தில் பெரும்பாலும் உயிர், உடல், மனம், யாவற்றுக்கும் ஒன்று சேர்ந்த வைத்தியமே வழங்கப்படுகிறது. இவற்றுக் கிடையேயுள்ள தொடர்புகள் என்னும்போது, மேல்நாட்டு மருத்துவத்தில் பலவகையான கண்டுபிடிப்புகள் கீழ்நாட்டு அறிவியலை அடிப்படையாகக் கொண்டது என்றால் மிகையாகாது.

மேலைநாட்டு சத்திர சிகிச்சையின் என்பதின் தந்தை என இன்னும் போற்றப்படுபவர் கீழைத்தேய அறுவை மருத்துவத்தைக் கூறிய சுசுருதர் என்பதும், விஞ்ஞான உலகின் Chemistry என்பதை முதன் முதலில் இரசகந்தக சேர்வை கறுப்பாக இருந்ததும் அது Cheem எனும் கிரேக்க மொழியில் கூறப்பட்டு Alchemy என்னும் சொல்லடியிலிருந்து உருவானதே Chemistry இதனை முதன் முதல் உலகுக்கு எடுத்துச் சொன்னவர் தெலுங்கு தேச மருத்துவரான சித்த நாகார்சுனன் மேலும் எத்தனையோ தாவரப் பொருட்களின் அடிப்படையிலேயே மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதும் விஞ்ஞான உலகத்தால் மறுக்கமுடியாதது. எனவே மேல் நாட்டு மருத்துவத்தில் ஆரம்பம் கீழ்நாட்டு மருத்துவ அறிவு என்பதுதான் இரண்டுக்கும் உள்ள தொடர்பு ஒன்று மெஞ்ஞானக் கண்டுபிடிப்பு அடுத்தது விஞ்ஞானக் கண்டுபிடிப்பு.

**○ மக்களின் மேல்நாட்டு மருத்துவத்தில் காட்டும் ஈடுபாடு, சித்தஆயுர்வேத மருத்துவத்தில் காட்டுவதில்லையே? இதற்கு என்ன காரணம்?**

அந்நியரின் ஆளுகைக்கு பல கீழைத்தேய நாடுகள் உட்பட்டு இருந்ததால், மேல்நாட்டுச் சட்டம், அறிவியல் பேணப்பட்டு சலுகைகள்கூட காணப்பட்டதால் அரசு, அரசியல், அதிகாரம், அறிவியல் வளர்ச்சி என்பன மேல்நாட்டு மருத்துவத்திற்கு சாதகமான நிலையை தோற்றுவித்தன. இதற்கு மூலிகை வைத்தியத்தால் செப்பனிடப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியம் பல சவால்களுக்கு விலகியநிலையில் மக்கள் மத்தியில் சரியான விழிப்புணர்வு இன்மையால் ஈடுபாடு குறைவு. மேலும் சமய, நாகரீக மாற்றத்திற்கேற்பவே பங்களிப்பு இருக்கும். எமது நாட்டில் பெரும்பான்மை சமூகத்தினர் பெரிதும் வரவேற்கின்றனர். பௌத்த தேரர்கள் தமது மத ஸ்தாபனத்தினூடாக சிகிச்சையளிக்கிறார்கள்.

**○ எவ்வாறான நோய்களுக்கு பெரும்பாலும் வருகிறார்கள்?**

சளி, சருமரோகம், தோல் நோய், தொய்வு, பீனிசம், வாதம், வயிற்றுப்புண், தலைவலி, மூலநோய் சிறு குழந்தைகளின் நோய்கள், வயது வந்தவர்களுக்கு வரும் பலவகை நோய்களுக்கு வருகிறார்கள். பெரும்பாலும் பெண்கள் சம்பந்தமான நோய்களான மாதவிலக்கு, அதிக உடற்பருமன், வெள்ளைபடுதல், மலடு போன்றவற்றுக்கு நிரந்தர சுகம் வேண்டி எம்மிடமே வருகிறார்கள்.

**○ நோயாளிகளுக்கு குறிப்பிட்ட நோயை தடுப்பதற்கான வழிமுறைகளை குறிப்பிடுவீர்களா?**

குறிப்பிட்ட நோய்க் காரணியை இல்லாமல் செய்ய உடம்பின் சக்தியை அதிகரித்து உடம்பையே அதற்கு எதிராக செயற்படவைத்து நோயை இல்லாமல் பண்ணுவோம். சிகிச்சையானது ஓர் படிமுறையிலேயே வழங்கப்படுகிறது.

1) உடம்பை எதிர்க்க வைக்கும் சிகிச்சை

இங்கு உடம்பின் கழிவுகளை வெளியேற்றக் கூடிய மலம் இளக்கி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி தன்மையுள்ள மூலிகைகளான மருந்துகளை கொடுத்து நச்சுத் தன்மையை வெளியேற்றி உடல், உள சமனிலையை பேணியபின் அதற்கு சிறப்பான மருந்துகள் கொடுப்போம்.

2) நோய்களுக்குரிய காரணி, நோயை நீக்குதலுக்கு ஏற்ற மருந்துகளை வழங்கி பின் காப்பு - பாதிக்கப்பட்ட அவயவத்தை, தொகுதி இழையத்தை சிதைவுகளிலிருந்து பாதுகாத்து பலப்படுத்துவோம்.

3) அந்த நோய் திரும்பவும் வராதபடி வன்மையை அதிகரிக்கும் மருந்துகளை கொடுப்பது. இங்கே உடனடியான பலனைப் பெறமுடியாது. குறிப்பிட்ட காலம் பிடிக்கும் மக்களுக்கு பொறுமை அவசியம்.

---

## எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்

57. உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இதயநோய்கள் இருந்தால், உங்கள் இதயத்தை மருத்துவர் மூலம் சோதிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

**கிட்னியைக் கவனியுங்கள்**

58. கிட்னியில் கல் இருக்கிறதா? சாப்பாட்டில் மெக்னீசியம் சேருங்கள். நிறைய பீன்ஸ் சாப்பிட்டாலே போதும்! கோதுமை, ஓட்ஸ், பாதாம், முந்திரி, மீன், பார்லி போன்றவையெல்லாம் மெக்னீசியம் அதிகம் உள்ள சில உணவுகள்.

59. சிப்ஸ், கொக், இனிப்புள்ள பாட்டில் ஜூஸ்கள், சீனி இவையெல்லாம் கிட்னியில் கல்லை உருவாக்கும் வில்லன்கள். உஷார்!

60. நிறையத் தண்ணீர் குடிப்பது, சிறுசிறு கிட்னி கற்களை அகற்ற உதவும். கூடவே கரட், திராட்சை மற்றும் ஒரேஞ்சு ஜூஸ் என்று ஏதாவது ஒன்றைக் குடிப்பது மிகவும் நல்லது.

61. காய்கறிகளை நிறைய சாப்பிடுபவர்களுக்கு, 'கிட்னியில் கல்' என்ற பயமே தேவையில்லை.

**பல்லுக்கு உறுதி!**

62. பல்லில் வலி, ஈறுகளில் வீக்கம், வாயின் வெளிப்புறத்தில் வீக்கம், பல் கறுப்பு நிறமாக மாறுவது, பல்லில் குழி ஏற்பட்டு உணவு தங்குவது, குளிர்ந்த மற்றும் சூடான உணவு உட்கொள்ளும்போது கூச்சம் ஏற்படுவது போன்றவை பல் சொத்தை ஏற்படுவதற்கான அறிகுறிகள்.

63. பற்களில் ஏற்படும் பாதிப்பு, தொண்டைக்குப் பரவி, சமயங்களில் இதயத்தையும் பாதிக்கும். எனவே, பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

64. தேநீர், கோப்பி போன்றவற்றை அடிக்கடி குடிப்பது பற்களுக்கு நீங்களே வேட்டு வைப்பதற்குச் சமம். மிகவும் குளிர்ந்த நீரைக் குடிப்பதைத் தவிருங்கள்.

65. சூடான உணவை சாப்பிட்ட நொடியே, ஜில்லான உணவுக்கு மாறினால், உடலுக்கும் பல்லுக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

66. இனிப்புச் சாப்பிடுபவர்களுக்குப் பல் சொத்தை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, எது சாப்பிட்டாலும் வாய் கொப்பளிக்கவேண்டும்.

67. அக்கி எனப்படும் முகத்தில் தோன்றும் கட்டிகளுக்கு மண் பூசும் வழக்கமிருக்கிறது. அக்கி, ஒருவித கிருமித்தொற்றுமூலம் ஏற்படக்கூடியது. அதற்கான மருந்துகளைப் பயன்படுத்துவதே நல்லது.


68. சருமத்தை இளமையாக, சுருக்கங்கள் இல்லாமல் வைத்திருக்க தண்ணீர் அதிகம் குடிப்பது முக்கியமானது. மனஅழுத்தம், சோர்வு, இறுக்கமான ஆடை, மது, புகை, கோப்பி இவையெல்லாம் சருமத்தின் வில்லன்கள்.

69. தேவையற்ற அழுக்குகள் சருமங்களில் தங்கி, அதன் பொலிவையும், உயிர்ப்பையும் கெடுக்கின்றன. எனவே, முகத்தை அடிக்கடி கழுவிச் சுத்தப்படுத்துவது அவசியமானது.

70. முகப்பரு இருந்தால் உடனே கிள்ளி எறிய விரல்கள் படபடக்கும். ஆனால், அது ஆபத்தானது. முகத்தில் பள்ளங்களை நிரந்தரமாக்கிவிடும்.




# விளக்கு மட்டுமா சிவப்பு?



## சத்தியவான் சாவித்திரி

சரசுவின் நெற்றி வியர்த்திருந்தது. வேதநாயகம் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று அடித்தது.

அது சாவித்திரியின் மரணத்திற்கு அடிக்கப்பட்ட சாவு மணிபோலக் கேட்டது.

"நீதிமன்றத்திற்கு நேரமாகிவிட்டது. மீதி விஷயத்தை நாளைக்குக் கேட்டுக்கொள்ளலாம்" என்று நினைத்த வேதநாயகம், "நீ வேண்டுமானால் போய்விட்டு நாளைக்கு வாம்மா!" என்றார்.

"இங்கே தங்குவதென்றாலும் நீ தங்கலாம்" என்றாள் சரசு.

"பரவாயில்லையம்மா! நான் நாளைக்கே வருகிறேன்" என்று வெளியேறினாள் ஜெயஸ்ரீ.

வேதநாயகம் கோர்ட்டுக்குப் புறப்பட்டார். சரசு உள்ளே போய் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கத் துவங்கினாள்.

அந்தப் புத்தகத்தின் தலைப்பு "மனதுக்கு நியாயம்"

மணி பதினொன்றை அடித்தபோது, மறுபடியும் குற்றவாளிகள் சரணாலயத்தில்.

அதாவது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அடி எடுத்து வைத்தார் வேதநாயகம்.

'இன்றைக்கு எந்தக் குற்றவாளி இலவச வக்கீல் தேடி வரப்போகிறானோ?' என்ற கவலையோடு அவர் பின்னாலேயே நின்றுகொண்டிருந்தார் குமாஸ்தா குப்புசாமி.

வழக்கம்போல் சாராயக் குற்றங்கள் நீதிமன்றத்தின் பாதி நேரத்தை விழுங்கின. அவை நடந்து கொண்டிருக்கும்போதே, அவரது கண்கள் நீதிமன்றத்தைச் சுற்றிலும் ஒரு கண்ணோட்டத்தை விட்டன.

அங்கு ஒரு மூலையில், இரண்டு 'கார்ட்டூன்' பொலிசாருக்கு இடையில், ஓர் இளம் வாலிபன் அமர்ந்திருந்தான். அவர்களைக் 'கார்ட்டூன் பொலிசார்' என்பதற்குக் காரணம் அவர்கள் அவ்வளவு இளைத்துப் போயிருந்தார்கள்.

நடுவிலே உட்கார்ந்திருந்த வாலிபன் வாட்டசாட்டமாகத்தான் இருந்தான். அவன் இரண்டு கைகளையும் முன்புறம் நீட்டித் தோளிலே இருந்த துண்டைவிரித்து அதை மூடியிருந்தான்.

கைகளைப் பிணைத்திருக்கும் அரசாங்கக் காப்பு பிறக்குத் தெரியக் கூடாது என்பதிலே அவ்வளவு அக்கறை. அவனைப் பார்த்து பார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். கொஞ்சசத்தூரத்தில் அழுக்குச் சேலையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு பெண்.

பார்த்தவுடனேயே 'இவர்கள் ஏழைகள்' என்று கண்டுபிடிப்பதற்குப் பாரத புத்திரர்களுக்குச் சில இலக்கணங்கள் உண்டு அல்லவா? இந்த இலக்கணங்கள் முழுமையாக அமையப் பெற்றிருந்தார்கள் அவர்கள் இருவரும்.

அவள் எட்டு மாதக் கர்ப்பிணி. கையிலேயும் ஒரு குழந்தை, இந்த இலக்கணமே போதாதா உண்மையிலேயே அவர்கள் ஏழைகள்தான் என்பதற்கு?

"அவளது கணவனாகத்தான் அவன் இருக்கவேண்டும்" என வேதநாயகம் நினைத்தார். அவர்கள் இருவரும் 'ஜாடை' செய்து கொண்டதிலிருந்து சில விஷயங்கள் அவருக்குப் புரிந்தன.

"வக்கீல் பிடிப்பதற்குப் பணம் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று அவன் கேட்கிறான்.

'இல்லை' என்பதுபோல் கையை விரித்து அவள் கண்ணீர் வடிக்கிறாள்.

அவன் 'உச் உச்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான். "பழையபடியும் ரிமாண்டுக்குத்தான் போகவேண்டியிருக்கும்" என்பதுபோல் பாவனை செய்கிறான்.

அவள் குமுறிக் குமுறி அழுகிறாள். கைக்குழந்தையை இறக்கிக் கீழே விடுகிறாள்.

குழந்தை, 'அப்பா' என்று அவனிடம் ஓடுகிறது. பொலிசார் தடுக்கிறார்கள்.

அவன் அவளைக் கூப்பிட்டுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போகும்படி சொல்கிறான்.

அவர்களையே பரிதாபமாகப் பார்த்த வக்கீல் வேதநாயகம், குமாஸ்தா குப்புசாமியை அழைத்து, அந்த ஆளை விசாரிக்கும்படி கூறினார்.

குப்புசாமி மெதுவாக அந்த ஆளிடம் சென்று, "உனக்கு வக்கீல் வேண்டுமா?" என்று கேட்டார்.

"ஆமாம் சாமி" என்றான் அவன் பரிதாபமாக.

"சரி, உன் பேர் என்ன?" என்று கேட்டார்.

"சக்திவேல்" என்றான் அவன்.

"நல்லது. உன்பேரைச் சொல்லிக் கூப்பிட்டதும் குற்றவாளியா?" என்று கேட்பார்கள். 'இல்லை' என்று சொல்லிவிடு. "வக்கீல் வைத்திருக்கிறாயா?" என்று கேட்பார்கள். "அதோ அந்த வக்கீல் எழுந்து உனக்காக வாதாடுவார். ஜாமீனுக்கெல்லாம் அவரே ஏற்பாடு செய்வார். ஜாமீனில் வந்து மற்ற விஷயங்களைச் சொல்" என்றார் குப்புசாமி.

அவன் விலங்குபோட்ட கையை மேலே தூக்கிக் கும்பிட்டான். கையை மூடியிருந்த துண்டு கீழே நழுவி விழுந்தது. அவன் மனைவியைப் பார்த்து ஒரு புன்னகை செய்தான். அவள் ஆகாயத்தைப் பார்த்து ஒரு கும்பிடும், குமாஸ்தா குப்புசாமியைப் பார்த்து ஒரு கும்பிடும் போட்டாள்.

குப்புசாமி பணிவோடு வேத நாயகத்தைக் கை காட்டினார். அவள் வேதநாயகத்திற்கு ஒரு பெரிய கும்பிடு போட்டாள்.

'சக்திவேல்' என்று அழைத்தான் நீதி மன்றத்து டவாலி.

சக்திவேல் எழுந்து எதிரே நின்றான். இரண்டு பொலிசாரும் சட்டையைத் தட்டி விட்டுக்கொண்டு பக்கத்தில் நின்றார்கள்.

ஒரு கட்டுக் காகிதத்தோடு இன்ஸ்பெக்டர் ஒருவரும் வந்து 'அட்டென்ஷனில்'ல் நின்றார்.

வழக்கம்போல், "நீ குற்றவாளியா?" என்ற கேள்வி. 'இல்லை' என்ற பதில். வக்கீல் வேதநாயகம் எழுந்து ஜாமீன் பெட்டிஷனை நீட்டினார்.

அதற்குள் குப்புசாமி இரண்டு ஜாமீன்தாரர்களைக் கூட்டி வந்துவிட்டார்.

நீதிமன்றங்களில் ஜாமீன் கொடுப்பதையே தொழிலாக நடத்துபவர்கள் சிலர் உண்டு. அவர்களிலே குப்புசாமிக்கு வேண்டியவர்கள் இருவர். தங்கள் சொத்துக்கான பத்திரங்களோடு இவர்கள் தயாராக இருந்தனர். சக்திவேலுக்கு ஜாமீன் கிடைத்துவிட்டது. ஜாமீன்தாரர்களுக்குத் தரவேண்டிய 'மாமூல்' தொகையை வேதநாயகம் கொடுத்தார்.

'சார்ஸ்ஷீட்' என்னும் குற்றச்சாட்டுப் பட்டியலைக் கையில் வாங்கிப் பார்த்தார் வேதநாயகம். 'நகரத்தில் உள்ள ஒரு கடையில் பூட்டை உடைத்துத் திருடியதாக' அவன் மீது வழக்கு.

மணி ஒன்றரை அடித்தது. நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தார் வேதநாயகம். பின்னாலேயே வந்தான் சக்திவேலு.

"இன்னும் பதின்மூன்று நாட்கள் கழித்து வாய்தா போடப்பட்டிருக்கிறது. நீ நாளை காலை எட்டு மணிக்கெல்லாம் என் வீட்டிற்கு வா" என்று விலாசத்தைச் சொன்னார் வேதநாயகம்.

சக்திவேலுவும் அவன் மனைவியும், குழந்தையும் சாஷ்டாங்கமாக அவரது காலில் விழுந்து வணங்கினார்கள்.

"உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. உங்கள் பிள்ளைகுட்டி நல்லா இருக்கணும்" என்று அப்பாவிகளின் பரம்பரைப் பல்லவியைப் பாடி முடித்தார்கள். வேதநாயகமும் குப்புசாமியும் காரில் ஏறிப் புறப்பட்டார்கள்.

டைனிங் டேபிளில் உணவை எடுத்து வைத்துவிட்டுத் தயாராக இருந்த சரசு, "இன்றைக்கு எந்தக் குற்றவாளி" என்று கேட்டுக்கொண்டே வேதநாயகத்தை எதிர்கொண்டாள்.

"ஒரு திருடன்" என்றார் குப்புசாமி.

வேதநாயகம் அவரை முறைத்துப் பார்த்து, " ஒழுங்காகச் சட்ட பரிபாஷையில் சொல்லுங்கள். 'திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர்' அவ்வளவுதான். குற்றம் நிரூபிக்கப்படும்வரை ஒருவன் நிரபராதியே. கீழ் கோர்ட்டில் அவன் தண்டிக்கப்பட்டிருந்தாலும், அப்பீல் செய்துவிட்டானானால் அந்த அப்பீல் முடிகிறவரை அவன் நிரபராதியே! என்னுடைய கருத்துப்படி அந்த அப்பீலிலும் அவன் தோற்றுப்போனால் கூட, தன் மனச்சாட்சிப்படி அவன் நிரபராதியே என்று கருதுவானானால் ஆண்டவன் முன்னிலையில் அவன் நிரபராதியே!" என்றார்.

"அனுதாபத்தோடு பார்க்கும் கண்களுக்குக் குற்றவாளியும் நிரபராதியே. ஆத்திரத்தோடு பார்க்கும் கண்களுக்கு நிரபராதியும் குற்றவாளியே" என்றாள் சரசு.

'உள்வீட்டு நீதிமன்றத்தில்' குறுக்கிட விரும்பாத குப்புசாமி, தன் வீடு நோக்கி நடந்தார். டைனிங் டேபிளில் வந்தமர்ந்தார் வேதநாயகம். அவள் கொஞ்சம் 'கூட்டு' எடுத்துவைத்தாள்.

"நாகரிகச் சமுதாயம் 'கூட்டு' வாழ்க்கையையே மறந்துவிட்டது" என்றார் வேதநாயகம்.

அவள் 'குழம்பு' எடுத்து ஊற்றினாள்.

"மனிதர்களுடைய அறிவே குழம்பிப் போயிருக்கிறது" என்றார் வேதநாயகம்.

"உங்கள் 'சிலேடை' நன்றாக இருக்கிறது.

(விளக்கு எரியும்)

**வாரமொரு சிந்தனை** **சொல்லின் செல்வர்** இரா.செல்வவடிவேல்



# கூட்டுறவே நாட்டுயர்வு

## சிந்தனை ஒன்றுசேர்ந்து அறிவொளி பெறுவோம்!

கூடி வாழ்வது என்பது எளிதன்று, சுயநலமும், தன் முனைப்பும் மனிதனைக் கூடிவாழ, கூடித்தொழில் செய்ய அனுமதிக்காது. ஒருமையுளராகி உறவுகளைப் பேணி, வளர்க்கத் தெரியாதார் குற்றங்களை முயன்று காண்பர். இயல்பாகக் குற்றங்கள் இல்லையெனினும் படைப்பர். சிறுமை தூற்றுவர். இத்தகு மனப்போக்குடையோர் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஒத்துவர மாட்டார்கள்.

நோயும், மரணமும் துரத்தினாலும், எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் மருத்துவர்களை நாடுகின்றோம். மந்திரங்களை நாடுகின்றோம். சாமிகளைக் கும்பிடுகின்றோம். அதுபோல தானே மனித உறவிலும் பிரிவுகள் தோன்றுவது! இந்தப் பிரிவுகள் உடனுக்குடன் மருத்துவம் செய்யப் பெற்றுச் சீர்செய்யப் பெறாவிடில் கூட்டுறவு வளராது.

கோடிக்கணக்கான செங்கற்களைக் கொண்டுதான் சுவர்கள் எழுப்பப்படுகின்றன. அவற்றில் அடுக்கப்பெறும் கற்கள் ஒன்றையொன்று தழுவித் தாங்கி கொள்வதன் மூலமே சுவர்கள் எழும்புகின்றன. அதுபோல, நாம் ஒவ்வொருவரும் பிறிதொரு நபரைத் தழுவித் தாங்கி அழைத்துக்கொண்டு போனால் கூட்டுறவு தோன்றும். சமூகம் தோன்றும்.

அதுமட்டுமா? மேசன் சுவர் கட்டும்போது இடைவெளியைச் சரிசெய்ய சல்லிக் கற்களைப் போடுவார். சல்லிக் கற்கள் கிடைக்காது போனால் முழுக் கல்லை உடைத்துச் சல்லியாக்கிப் போடுவார். ஆனால் சுவரில் சல்லி இருப்பது தெரியாது. சுவரின் வெளிப்புறத் தோற்றம் மட்டுமே தெரியும். சுவர் தன்னுள் அடங்கியிருக்கும் சல்லிகளைக் காட்டாது முழுத் தோற்றத்தை மட்டும்தான் காட்டும்.

அதுபோல, மனிதருள்ளும் குணக்கேடர்கள் சிலர் இருக்கத் தான் செய்வர். பலவீனர்கள் இருப்பர். நலிந்தோர் இருப்பர். மனித சமூகத்தின் இந்தக் குறைகள் வெளியே தெரியாமல் நடந்து கொள்வது தான் கூட்டுறவின் நோக்கம். வல்லவர்களும், வல்லமையற்றவர்களும், ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும், ஒருங்குசேர்ந்து நடத்தும் இயக்கமே கூட்டுறவு.

கூட்டுறவில் அங்கத்தினர்கள் கூடுதலாகவோ, குறைவாகவோ, முதலீடு செய்யலாம். ஆனால் முதலீட்டின் அளவால் உயர்வும் இல்லை. தாழ்வும் இல்லை. எல்லாருக்கும் ஒரே வாக்குத்தான். கூட்டுறவுச் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட நடுவுநிலையைப் பேணுதல் வேண்டும். அது மட்டுமல்ல, கூட்டுறவில் செய்யப்பெறும் முதலீட்டுச் சந்தை வட்டிகூடக் கிடைக்காது. குறைந்தவட்டிதான் கிடைக்கும்.

ஆதிபத்திய நஞ்சுக்கு மாற்று கூட்டுறவேயாம். கூட்டுறவு பயன் அளிப்பது,அதன் இயக்கத்தைப் பொறுத்தது. கூட்டுறவு அமைப்பிலுள்ள அங்கத்தினர்கள் அதன் செயற்பாட்டிற்கேற்ப பயன் அடைவர்.

கூட்டுறவு பயன்அளிப்பது அதன் இயக்கத்தைப் பொருத்தது. கூட்டுறவு அமைப்பிலுள்ள அங்கத்தினர்கள் அதன் செயற்பாட்டிற்கேற்ப பயன் அடைவர். கூட்டுறவு ஜன நாயக மரபுகளைப் பின்பற்றுவது, கூட்டுறவு வெற்றிபெற அதன் அங்கத்தினர்கள் தொடர்ந்தும் இயங்க வேண்டும். பொருளாதார மேம்பாட்டிற்கும் கூட்டுறவு சிறந்தது. கூட்டுறவு மூலம்தான் கடைகோடி மனிதனையும் கடைத்தேற்ற இயலும்.

இன்று நமது பிரதேசத்தில் கூட்டுறவின் தோல்விக்கான காரணங்களை ஆராய்வது அவசியமாகும். கூட்டுறவுப் பண்டக சாலைகள் (சங்கங்கள்) ஒருசிலரின் கைப்பிடிக்குள் சிக்கித் தவிக்கிறது. தள்ளாடுகின்றது. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை அவதானித்தால் கிளை உறுப்பினர்கள் முதல் அனைத்துப் பதவிகளையும் குறித்த சிலர் மட்டுமே தொடர்ந்து கைப்பற்றி வருகிறார்கள். ஜனநாயக முறையில் நடைபெற்றால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் குறிப்பிட்ட சிலரது வலைக்குள் கிளைக் குழுக்கள் உள்ளன. இதுதொடர்பாக கூட்டுறவுத்துறையினர், பொறுப்பில் உள்ளவர்கள் ஆராயவேண்டும். கூட்டுறவுத் துறையில் ஏற்படும் ஊழல்கள் பற்றி தினம் செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் கூட்டுறவுத்துறை நலிவடைவது என்பது தவிர்க்கமுடியாததாகவே அமையும்.

மக்கள் புவியை நடத்த வேண்டுமெனில், பொதுவில் நடத்த வேண்டுமெனில், அதற்குரிய ஒரே ஒரு சாதனம் கூட்டுறவுதான்! அதனால், சோவியத்தில் புரட்சிக்குப்பின் புனர் நிர்மானத்தில் ஈடுபட்ட மாமேதை லெனின், கூட்டுறவு இயக்கத்தில் தனிக் கவனம் செலுத்தினர். கூட்டுறவின் வளர்ச்சியே சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பாகும் என்றார். பொருளாதாரச் சீராவுடைய சமுதாய அமைப்பு காலூன்றக் கூட்டுறவே சாதனம் என்றார்.

மக்களின் சிந்தனைப் போக்கையும் செயல்களையும் மாற்றிச் சமுதாயத்திற்குப் பயன்படுவர்களாக மாற்றுவதில்தான் கூட்டுறவின் வெற்றி இரகசியம் இருக்கிறது. சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாகவும், உறுதுணையாகவும் கூட்டுறவு வெற்றி பெற்றால்தான் கூட்டுறவு இயக்கத்திற்கு அர்த்தமுண்டு.

இன்று நம்முடைய நாட்டில் ஊராட்சி மன்றங்களிலும், கூட்டுறவு அமைப்புக்களிலும் மக்கள் பங்கேற்க முடியாமல் அரசு, அதிகார வர்க்கத்தின் கையில் ஒப்படைத்து விட்டது. காடு பாதி, நாடுபாதி, என்பது போலத்தான் கூட்டுறவு இயக்கம். தங்களுடைய உரிமை பறிக்கப்பட்டமை குறித்து மக்களிடத்தில் கோபம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மக்கள் கோப்படவேண்டும்.நாட்டில் நிகழும் அநீதிகளுக்கு எதிராக, அதிகாரிகள் ஆட்சியாளர்களின் ஊழலுக்கு எதிராக, தம்மாள் வாக்களிப்பின்மூலம் சகல துறைகளிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தன்னலப்போக்கு குறித்து தமிழர் தேசிய இனம் எனும் கோட்பாட்டை மறந்துவிட்ட அரசியல் கட்சிகள்... இப்படியாக பல விடயங்களில் மக்களுக்கு கோபம் வரவேண்டும். பயனுள்ள கோபம் ஒன்றுதான் நாட்டையும் கூட்டுறவையும் காப்பாற்றும்.

ஒன்று சேர்ந்து நம்மைக்
காத்துக்கொள்வோம்
ஒன்று சேர்ந்து உண்போம்
ஒன்று சேர்ந்து வீரியம்
பெறுவோம்
ஒன்று சேர்ந்து அறிவொளி
பெறுவோம்.

**(தொடரும்)**

## தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் தங்கப் பதக்கம் வென்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் அணிக்கு



இலங்கை பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சங்கத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட சமபோசா கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான 15 வயதுப் பிரிவில் மகாஜனாக் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது. கிண்ணத்துடனும் தங்கப் பதக்கத்துடனும் தாயகம் திரும்பிய அணியினருக்கு கல்லூரி சமூகத்தினாரால் மகத்தான வரவேற்பு வழங்கப் பட்டது.

கல்லூரியின் முன்றலில் வைத்து கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகரத்திடம் கிண்ணம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து முன்றலில் இருந்து வீராங்கனைகள் கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரியின் பாவலர் துரையப்பா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டு தேனீர் விருந்து உபசாரம் இடம்பெற்றது.

## பமிலியன்ஸ், ஜொலிஸ்ரார் அணிகளுக்கு இலகுவெற்றி




ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றுவருகின்றன.

இந்தத் தொடரில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டபிளை அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் பமிலியன்ஸ் அணி 37 : 14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில், ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார் அணி 71 : 51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

## செரீனாவை விழ்த்தினார் கெர்பர்

2016ஆம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸின் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் கெர்பர். பெண்கள் ஒற்றையர் பிரிவிற்கான இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் உலகத் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், 7ஆம் இடத்தில் இருக்கும் ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரும் பலப்பரீட்சை நடத்தினார்கள். 21 கிராண்ட்ஸ்லாம் பதக்கத்தை வென்றுள்ள செரீனா, 22ஆவது கிராண்ட்ஸ்லாம் வென்று ஸ்டெபி கிராப் சாதனையை சமன் செய்யும் நோக்கத்தில் களம் இறங்கினார். பரபரப்பாக சென்ற ஆட்டத்தின் முதல் செட்டை 6-4 என கெர்பர் கைப்பற்றினார். ஒரு கட்டத்தில் கெர்பர் 5-3 என முன்னிலையில் இருந்தார். செரினாவின் அனல்பறக்கும் சர்வீஸ்களை கெர்பர் எளிதாக முறியடித்து அந்த செட்டை 6-4 எனக் கைப்பற்றி முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார்.

# புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பம்

## வடமாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் தவராசா



தற்போது ஏற்படுத்தப்படவுள்ள புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பாக மக்களினது கருத்துக்களை உள்வாங்கும் செயற்பாடானது தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பமாகும். இதனை தமிழ் மக்கள் அனைவரும் முழுமையாக பயன்படுத்த வேண்டுமென வடமாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கு மக்களின் கருத்துக்களை பதிவுசெய்யும் செயற்பாடு தொடர்பாக அக்குழுவின் அங்கத்தவராகவுள்ள எதிர்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அமைச்சரவையின் அனுமதியுடன் பிரதமர் காரியாலயத்தால் புதிய அரசியல் உருவாக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை பதிவுசெய்வதற்காக உருவாக்கப்பட்ட குழுவானது இலங்கையின் சகல மாவட்டங்களிலும் தனது அமர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் இந்த செயற்பாடானது நல்லதொரு விடயமாகும். ஏனெனில் இலங்கையின் 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பானாலும் சரி 1978ஆம் ஆண்டு யாப்பானாலும் சரி மக்கள் கருத்து உள்வாங்கி அமைக்கப்படவில்லை. அந்தவகையில் இது ஒரு புதிய முயற்சியாகும். குறிப்பாக கொழும்பில் இடம்பெற்ற அமர்வுகளில் பல முன்னேற்றகரமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இக்குழுவின் அமர்வுகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் போது பெருமளவான தமிழ் மக்கள் இதில் தமது கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும். ஏனெனில் இது தமிழ் மக்களுக்கு கிடைத்த நல்லதொரு சந்தர்ப்பம்.

உருவாக்கப்படுகின்ற புதிய அரசியல் அமைப்பிலே தமிழ் மக்களுடைய உரிமைகள் எவ்வாறு நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தொடர்பாக தமது கருத்தை கூற வேண்டும். இதன்மூலம் மக்களது கருத்துக்கள் இக்குழுவின் ஊடாக அரசியல் அமைப்பு சபைக்கு கொண்டு செல்லப்படும்.இக்குழுவில் கருத்துக்களை கூறுவதற்கு அரசியலமைப்பு தெரிந்திருக்க வேண்டிய அவசியமோ அல்லது சட்டவாக்க மொழிநடை தெரிந்திருக்க வேண்டிய அவசியமோ தேவையில்லை.ஒரு சாதாரண நபர் புதிய அரசியல் அமைப்பு இவ்வாறு தான் இருக்க வேண்டும் என தன் மனதில் எழும் விடயத்தை கூற முடியும். அக்கருத்தை எழுதியும் கொடுக்கலாம். வாய் வார்த்தைகள் மூலமாகவும் பதிவு செய்யலாம்.

அத்துடன் நாங்கள் கூறுவதெல்லாம் அரசியலமைப்பில் உள்வாங்குவார்களா என்ற எண்ணம் கொள்ளாமல் முதலில் கருத்துக்களை பதிவு செய்வோம். அதன் பின்னர் அவற்றை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். எனவே, அனைத்து தமிழ் மக்களும் இச் சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றார்.

**அறிக்கைப்போர் நடத்தும் அமைப்புகளின் மெத்தனம் குறித்து எதிர்கட்சி தலைவர் விசனம்!**

தமிழ் மக்களின் உரிமை சம்மந்தமாகவும், அவர்களுக்கு எவ்வாறான தீர்வு தேவை என்பது பற்றியும் ஆளுக்கொரு அமைப்பை உருவாக்கி, அறிக்கை விடுவதும், கொடிபிடித்து கோசமிடுவதும் என விளம்பரம் தேடும் பலர், அண்மையில் பிரதமரால் அமைக்கப்பட்ட தீர்வுதிட்டம் சம்மந்தமான இருபதுபேர் கொண்ட மக்கள் கருத்தை அறியும் குழு முன்தோன்றி, தமது ஆலோசனைகளை வழங்க முன்வரவில்லை என்ற தன் விசனத்தை, வட மாகாண சபை எதிர்கட்சி தலைவர் திரு சின்னத்துரை தவராசா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவை அடியொற்றி செய்யப்படும் இந்த நகர்வை பத்தோடு பதினொன்றாக பார்க்க முடியாது. கடந்த காலங்களில் அரசுகள் அரசியல் தீர்வுக்காக ஆணைக்குழுக்களை அமைப்பதும், அதன் ஆலோசனைகளை எதிர்கட்சிகள் எதிர்ப்பதும், அல்லது அரசே கைவிடுவதும் என்ற அனுபவம் காரணமாக, இதுவும் ஒரு கண்துடைப்பு நாடகம் என கூறுபவர்கள் உண்டு. ஆனால் இம்முறை சூழ்நிலை எமக்கு சாதகமாக இருப்பதை அவர்கள் எண்ண மறுப்பதாகவே தோன்றுகிறது. காரணம் இந்த அரசு வரலாற்றில் முதல் முறையாக ஆளும் தரப்பு எதிர்தரப்பு இணைந்த நல்லாட்சிக்கான அரசாக உருவாக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி என்றவுடன் நம்பி பின்செல்ல முடியாது என்பவர் சேர் பொன் அருணாசலம் டி எஸ் சேனநாயக்காவுடனும், ஹண்டி பேரின்பநாயகம் சேர் ஜோன் கொத்தலாவலையிடமும், செல்வநாயகம் பண்டா - டட்லியுடனும், அமிர்தலிங்கம் ஜெயவர்த்தனாவுடனும், வரதராஜபெருமாள் பிரேமதாசாவுடனும், பிரபாகரன் எரிக் சொல்கைமுடனும் நம்பித்தான் உறவாடினர் இறுதியில் நடந்தது என்ன? என்ற கேள்வியை எழுப்பலாம். அதற்கான பதில்தான் இன்றைய சர்வதேச நாடுகளின் இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிய, சிறீலங்கா அரசின் மீதான கால அவகாசம் குறிப்பிட்டு கொடுக்கப்படும் அழுத்தம்.

தம் நலம் சார்ந்த செயலாக சர்வதேசம் இதனை செய்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை என்ற போதும், எம் இனம் இதன் மூலம் அடையக்கூடிய பலாபலன்களை நாம் உதாசீனம் செய்ய கூடாது. தனிமனித வாக்கு மீறல்களால் ஏற்பட்ட விரக்தி எம் மனதில் ஏற்படுத்தி உள்ள சந்தேகங்களை முன்னிறுத்தி நாம் முடிவுகள் எடுத்தால், அல்லற்படும் மக்களின் அன்றாட பிரச்சனைகள் கூட அனுமன் வால் போல் நீண்டு செல்லும் நிலை ஏற்படும். கொடிபிடித்து கோசம்போட அழைத்தவர் அதை முடித்து தம் வசதியான வீட்டில் கட்டிலில் குறட்டை விட, அதில் கலந்து கொண்ட மக்கள் அகதி முகாம் சகதியில் பாய் விரித்து தூக்கத்தை தொலைப்பர்.

நீண்ட நொடிய யுத்தம் தமிழ் மக்களை இறுதியில் தங்களை வெல்ல வந்த இராணுவத்திடம், வெட்கம் இன்றி பசித்த தன் பிள்ளைகளுக்காய் சோற்று பாசல் கேட்டு கை ஏந்த வைத்தது. தன் வயிறு காய்ந்தபோதும் மெய்வருந்த இருந்த தாய் தன் சேயின் பசித்த வயிற்றுக்கு தன்னில் பால் சுரக்க, இரந்தாகிலும் தான் உண்ணும் நிலைக்கு மனதை மாற்றவைத்தது. கை இழந்து கால் இழந்து உடம்பின் அவயங்களில் விழுப்புண் சுமந்து, விடுதலை கனவில் மட்டும் களம் புகுந்துசமராடி, சரித்திரமான ஆயிரக்கணக்கான போராளிகளின் பெற்றோரை கூட, அநாதரவாக அலைய வைத்தது. வெட்டிக்கோசங்களும் வீராப்பு வசனங்களும் பேசி மக்களை தெருவுக்கு இறக்கும் தலைமைகள், ஏற்ற தீர்வு என்ன என்ற ஆலோசனை வழங்க தங்கள் பங்களிப்பை செய்ய முன்வருவதில்லை என்பதே, எதிர் கட்சி தலைவர் திரு தவராசா வின் நியாயமான ஆதங்கமாகும். கலாநிதி நல்லையா குமரகுருபரன், சட்டவாளர் திரு அப்பாத்துரை விநாயகமூர்த்தி, திரு பாக்கியசோதி சரவணமுத்து போன்ற சிலர் தாம்சார்ந்த அமைப்பினூடாக ஆலோசனையை வழங்கி உள்ளது சற்று ஆறுதல். முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு அண்ணாமலை வரதராஜ பெருமாளும் அதிகாரபகிர்வு உட்பட்ட தீர்வு பற்றிய தனது முன் அனுபவ ஆலோசனையை வழங்கியுள்ளார்.

நீண்டகால அரசியல் கலந்துரையாடல் அனுபவம் கொண்ட திரு தவராசா வெறுமனே அரசியல்சார்ந்த அமைப்புகள் மட்டுமல்ல, தமிழ் சங்கங்கள் போன்ற பொது அமைப்புகளும் தமது அலோசனைகளை வழங்கி பேரினவாதிகளின் சிந்தையில் சிக்கியுள்ள இன நல்லுறவை மீட்க பல குரல்கள் எழுப்பும் ஒருமித்த கோரிக்கைதான் பலன்தரும் என்பதை எதிர்வுகூறுகிறார். சர்வதேச அழுத்தம் ஏற்படுத்தி தந்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை, பல அமைப்புகளை புலம்பெயர் பணத்துக்காக உருவாக்கி வெறும் உறுமல் மட்டும் செய்யாது, தீர்வுக்கான ஆலோசனைகள் வழங்க முன்வரவேண்டும் என்ற அவரின் எதிர்பார்க்கை யதார்த்தமானது.

எதிர்கட்சி தலைவர் திரு தவராஜா மாகாண சபை கூட்டங்களில் முன்வைத்த விடயங்களை அவர் இருக்கும் இடத்தை வைத்து ஏற்கமறுத்தவர்கள் அவர் கூறிய விடயம்பற்றி காலம் கடந்த பின் உணரத்தலைப்பட்டமை அண்மைய நிகழ்வுகள் மூலம் நிரூபணம் ஆகின்றன. மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அண்மையில் முதல்வருடன் சந்திப்பை நடத்திய ஆளும்தரப்பு உறுப்பினர்கள் முன்வைத்த முதன்மை கோரிக்கை வினைத்திறன் உள்ள மாகாண சபை செயன் முறை என்பதே. வலம்புரி ஆசிரியருக்கு பகிரங்க மடல் எழுதிய வைத்தியர் செந்தூரன் குறிப்பிட்டதும் மாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயல்ப்பாடு பற்றியதே.

பல உண்மைகளை ஆதாரத்துடன் கூறிய எதிர்கட்சி தலைவர் மாகாண அரசின் மெத்தனபோக்கு பற்றி பட்டியலிட்ட விடயங்கள் கனதியானவை.

1. மாகாண சபைக்கு என மத்திய அரசால் ஒதுக்கப்படும் நிதியை அந்தந்த மாவட்டங்களின் முக்கிய தேவைக்கேற்ப நாமே ஒதுக்கும் அதிகாரம் எமக்கு வேண்டும். அதை விடுத்தது மத்திய அரசு மாவட்டங்களுக்கு குறித்தொதுக்கும் திட்டங்களுக்கு செலவிடும் முகவராக நாம் இருக்கக்கூடாது.

2. செயல்படுத்த உள்ள திட்டங்களுக்கான ஒப்பந்ததாரர் தரும் செலவின மதிப்பீட்டு மனு கோரலை மத்திய அரசின் நிதி வரும்வரை காத்திருக்காமல் முன் கோரலாக பெற்று வைத்திருந்து நிதி கிடைத்ததும் வேலையை ஆரம்பித்து குறித்த ஆண்டுக்கென கிடைத்த நிதி மீண்டும் திறைசேரி திரும்பும் நிலையை இல்லாமல் செய்யவேண்டும்.

3. எமக்கு பகிரப்பட்ட விடயங்களுக்கான சட்டவாக்கத்தை உருவாக்காது கால இழுத்தடிப்பு செய்வதால் நாம் மத்திய அரசின் சட்டப்படி செயல்படும் நிலையை மாற்றவேண்டும். உதாரணமாக கூடுறவுசபை மாகாணத்துக்கு முழுமையாக பகிரப்பட்டவிடயம். ஆனால் அதற்கான சட்டவாக்கம் உருவாக்கபடவில்லை. எமக்கு அதிகாரம் இல்லை என கூறிக்கொண்டு இருப்பதை தவிர்த்து, எமக்கு தரப்பட்ட அதிகாரங்களை பிரயோகிக்க கூடிய சட்டவாக்கங்களை விரைவாக உருவாக்க குழுக்களை அமைக்கவேண்டும். என பலவிடயங்கள் பற்றி அவர் யோசனை தெரிவித்தார்.

அன்று அமைச்சர்களின் செயல் மற்றும் அமைச்சுகளில் நடப்பவைகள் பற்றி அவர் தெரிவித்த கருத்துகளை ஏற்காது அவருடன் வாதப்பிரதிவாதம் செய்த ஆளும்தரப்பு உறுப்பினர்கள் தான் இன்று முதல்வரிடம் அமைச்சர்கள் பற்றிய முறைப்பாட்டை செய்துள்ளனர். அமைச்சர்களை பற்றி குறை கூறத்தான் என்னிடம் நேரம் ஒதுக்கித்தரும்படி கோரினீர்கள் என முதலமைச்சரே வட மாகாண சபை ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு எழுதிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளமை. எதிர்கட்சி தலைவர் திரு.தவராசாவின் கூற்றை உறுதி செய்கிறது.

எதிர்கட்சி தலைவர் என்ற நிலைக்கு அப்பால் திரு தவராசாவுக்கு நீண்ட அரசியல் அனுபவம் உண்டு. பல ஜனாதிபதிகளால் அமைக்கப்பட்ட இனப்பிரச்கானக்கான தீர்வு திட்ட ஆணைக்குழுக்களின் ஆலோசனை கூட்டங்களில் அவர் கலந்து கொண்டுள்ளார். தவிரவும் ஒரு அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சரின் ஆலோகசராய், செயலாளராய் மிக நீண்ட காலம் செயல்பட்டு வந்துள்ளார். ஆரம்பகால போராளிகளான புஸ்பராஜா, முத்துக்குமாரசாமி, பத்மநாபா போன்றவர்களுடன் ஈழ விடுதலை இயக்கத்தில் செயல்பட்டுள்ளார்.

போராளி, கணக்காய்வாளர், பாராளுமன்ற உறுப்பினர், அரசியல் நிர்வாகி, எதிர்கட்சி தலைவர் என்ற அவரது பாதையில் நிறைய நடைமுறை அனுபவங்களை கொண்டவராக அவர் இருப்பதனால் அவரது ஆதங்கத்தை வெறுமனே அவரை ஒரு கட்சி சார்ந்தவராக கொள்ளாது, அவர் கூறிய விடயத்தில் உள்ள அனுபவ பகிர்வை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இன்று ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை பயன்படுத்தி சகல மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளும் தங்கள் ஆலோசனைகளை நேரில் ஆஜராகி முன்வைக்கும் போது அது கனதியான நல்ல பலனை தரும்.

எம்மிடையே திரு தவராசா போன்ற பல அனுபவம் உள்ள திறமையானவர்கள் தனிமரங்களாக இருக்கும் நிலை மாறவேண்டும். இனப்பிரச்கானக்கான தீர்வு விடயத்தில் எம்மவர் அனைவரும் ஒன்றிணைந்து தோப்பாக செயல்ப்பட வேண்டும். சில வருடங்களுக்கு முன் திரு அண்ணாமலை வரதராஜபெருமாள் தனது கட்டுரை ஒன்றில் ஈழத்தமிழர்களில் நிறைய திறைமைசாலிகள் இருக்கிறார்கள் ஆனால் அவர்கள் தோப்பாக அல்லாது தனி நபர்களாகவே செயல்ப்படுகிறார்கள் என ஆதங்கப்பட்ட நிலை தற்போதும் தொடர்கிறது. அந்த நிலை இனிமேலாவது மாறவேண்டும்.

**– ராம் –**

# வாரமொரு காரம்



# மேவிக் கதைத்து சிலரை பாவியாக்கும் கல்வி அதிகாரிகள்!

அன்று தொட்டு இன்றுவரை அதிகாரவர்க்கங்களில் காணப்படும் அநாகரிகமான ஓர் அணுகுமுறையாக இது இருந்துவருகின்றது. குறிப்பாக நிர்வாக ஆளுமைத்திறன் குறைந்தவர்களிடமே இது பெரும்பாலும் காணப்படுகின்றது. ஆசிரியர்களை நெருங்கவிடாது மேவிக் கத்திவிட்டால் தாம் தமது காரியங்களை சாதித்துவிடலாம் எனும் அடிப்படையில் கத்துகின்ற வெளியீட்டின் பூரணத்துவம் தெரியாத பல மனநோயாளர்கள் தற்போது கல்வி வலயங்களில் இருக்கின்றார்கள்.

தேவைகள் நிறைவு செய்யப்படாமல் பாதைமாறும் தொடர்பாடல்கள் பெரும்பாலும் கல்விப்புலங்களில்தான் ஏற்படுகின்றன. இதனால் பல உயிர்ப்பலிகள்கூட அண்மைக் காலங்களில் நிகழ்ந்துள்ளன. வழங்கப்பட்ட இடமாற்றத்தின் மத்தியில் தனது குடும்ப இக்கட்டுக்களை கல்வியதிகாரிகளிற்கு விளங்கவைக்க முடியாதநிலையில் தற்கொலைசெய்துள்ளார் செந்தூரன் எனும் ஆங்கில ஆசிரியர். வயதுக்கிற்கு ஆசிரியர்கள் போனால் எதையும் சாதிக்கமுடியாதென்ற கட்டம் கல்விப்புலங்களில் இருக்கின்றது. இது தவறு. தயவு செய்து இதை மாற்றக் கற்றுக் கொள்ளுங்கள். வேறு பதவிநிலை ஊழியர்களைவிட ஆசிரியர்களிற்கு தொழில்வசதிகளை செய்து கொடுப்பதனூடாகத்தான் கல்வி நிலை வெளியீட்டை வெற்றிகரமாகப் பெறமுடியும்.

அதிபரிற்கும் ஆசிரியருக்கும் பிரச்சினையென்று ஆசிரியர்போனால் சம்பவத்தின் நிதர்சனத்தில் நியாயம் தேடாமல் ஆசிரியரிற்குத் தலையடிபோட்டு அதிகாரத்தை காட்டி மிரட்டுவது இவர்களின் வழமையான நடைமுறையாக உள்ளது. "ஆசிரியர்களுடன் அரை நிமிடமேனும் பொறுமையாகக் கதைத்தால் அவர்களிற்கும் தமக்கும் இடையிலான இடைவெளிகள் குறைந்துவிடும்" எனும் அடிப்படை அநாகரிக சிந்தனையை பெரும்பாலும் அனைவரும் சுமந்து நிற்கின்றார்கள். சுயகௌரவங்களை சுயமரியாதைகளை இவ்வாறு தேட முற்படுபவர்கள் ஆளுமை குறைந்தவர்களேயாகும். வெளியீட்டில் வெற்றிகாண நினைப்பவர்கள் இந்த எல்லைகளை தன்னருகே போடமாட்டார்கள்.

ஆசிரியர்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முற்படுவதற்குக்காரணம் தனிமைப்பட்ட தன்னிலை உங்களிடம் செல்லுபடியாகாமையேயாகும். உங்கள் பக்கங்களில் இருக்கின்ற அழுத்தங்கள் புரியாமலும், ஆசிரியர்கள் மேலுள்ள தவறுகள் புரியாமலும் இதை எழுதவில்லை. நீதியின் நிழலுக்குள் சில நியாயங்களைத் தேடுங்கள். புறநடைகளை சிந்திக்காதீர்கள். வேதனையின் விளிம்பில் வரும் வேண்டுகோள், இது தயவுசெய்து வேடிக்கையாக எடுக்காதீர்கள். சிலரைப் பழிவாங்காதீர்கள். நடந்து முடிந்த பிரச்சினைகளிற்கு தீர்வுகாணப்பட்டால் அதை அன்றுடன் மறந்துவிடுங்கள். அதை வைத்து எதிர்காலப் பிரச்சினைக்கு எடை போடாதீர்கள். இவன் இப்படித்தான் என்று நீங்கள் நினைத்துவிட்டால் அவன் நல்லபடி திருந்த சந்தர்ப்பம் கிடைக்காது.

ஆசிரியரின் கோரிக்கைகளையும் பொறுமையுடன் செவிமடுங்கள். அதற்குப் பதிலளியுங்கள். "எங்களைக் கேள்வி கேட்க நீர் யார்?" எனும் எண்ணப்பாடுகளை விட்டொழியுங்கள். இது பொது நிறுவனம். ஆசிரியர்களிற்கும் மாணவர்களிற்கும் சேவை செய்யத்தான் உங்களிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உங்களின் அந்தஸ்தை எல்லைப்படுத்த உங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தாதீர்கள். தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். இங்கு யாரையும் சுட்டவில்லை. காரணம், பழிவாங்கலிற்காக இதை எழுதவில்லை. மனமாற்றம் வேண்டுமென்பதே இதன் அடிப்படையாகும். புரிந்துகொள்ளுங்கள்.

மனிதர்களிற்கப்பால் மனிதத்திற்கு மதிப்பளியுங்கள். இதுவே உங்கள் கடமை.

# இந்தவாரம் உங்கள் பலன்

(04.02.2016 தொடக்கம் 10.02.2016 வரை)

## மேடம்

நண்பர்களின் துணையோடு நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த செயலை செய்துமுடிப்பீர்கள். நினைக்கும் செயல்களை சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதார நிலை உயரும். மற்றவர்களுடன் பேசும்போது கூடுதல் எச்சரிக்கை அவசியம். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும். வீடு, வண்டி, வாகனங்களால் ஆதாயம் உண்டு. பிரயாணங்களால் பலன் கிட்டும். பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக சுற்றுலா செல்லும் சூழல் உருவாகும். பொழுதுபோக்கு அம்சங்களில் நாட்டம் அதிகரிக்கும். உடல்நிலை சீராக இருக்கும். வாழ்க்கைத்துணையின் செயல்களுக்கு பக்கபலமாக இருந்து செயல்படுவீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள்.

## இடபம்

திடீர், திடீரென்று எதிர்பாராத செலவுகள் ஏற்படும். இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கு கூடுதலாக செலவழிக்கநேரும். பொருளாதார நிலையில் மாற்றம் தோன்றும். சேமிப்புகள் கரையத் தொடங்குமோ என அச்சத்தால் வருத்தம் கொள்வீர்கள். உடன்பிறந்தோர் உதவிகரமாய் செயல்படுவார்கள். திடீர் விருந்தினர் வருகையால் வீடுகளை கட்டும். வாகனங்கள், பிரயாணங்களால் ஆதாயம் உண்டு. தாயாரின் உடல்நிலையில் கவனம் அவசியம். குழப்பம் நீடிக்கும். வாழ்க்கைத்துணை உங்களுக்கு மிகுந்த பக்கபலமாக இருந்து செயல்படுவார். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அதிகம் அலையநேரிடும். தொழில் சிறப்பாக இருக்கும். உத்யோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் நற்பெயரோடு கௌரவம் உயரும்.

## மிதுனம்

கௌரவத்திற்காக அலைச்சல் அதிகரிக்கும். தொலைதூர பிரயாணங்கள் செல்லநேரிடும். அடுத்தவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் சூழல் உருவாகும். மனச்சஞ்சலம் ஏற்படும். பொருளாதார நிலையில் பின்னடைவு உண்டாகி படிப்படியாக சரியாகும். உடன்பிறந்தோரால் உதவிகள் கிட்டும். தைரியத்துடன் சில காரியங்களில் இறங்கி வெற்றி காண்பீர்கள். வண்டி, வாகனங்களால் ஆதாயம் காண்பீர்கள். பிள்ளைகளின் வாழ்வில் சுபநிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்வீர்கள். வாழ்க்கைத்துணையின் ஆலோசனைகள் சிறந்த வழிகாட்டியாக அமையும். நண்பர்களால் ஆதாயம் காண்பீர்கள். முன்னேற்றம் உண்டு.

## கடகம்

இழுபறி நீடித்தாலும் எடுத்த செயல்களை போராடி முடிப்பீர்கள். எதிலும் தெளிவாக இருப்பீர்கள். பொருளாதார நிலை சுணக்கம் காணும். கையிருப்பு கரையும். குடும்பத்தில் சலசலப்பு இருக்கும். பேச்சில் கவனம் அவசியம். கொடுத்த வாக்கை காப்பாற்ற சிரமப்படவேண்டியிருக்கும். உடன்பிறந்தோரால் தொல்லைகள் உண்டாகும். பிள்ளைகளால் செலவுகள் கூடும். உடல்நிலையில் கூடுதல் கவனம் அவசியம். எதிர்காலம் பற்றிய விஷயங்களில் வாழ்க்கைத்துணையோடு கருத்து வேறுபாடு கொள்வீர்கள். நண்பர்களுக்கு உதவப்போய் தர்மசங்கடமான சூழல் ஏற்படும். ஆன்மீகப் பயணங்கள் மனநிம்மதி தரும்.

## சிங்கம்

எதிர்பாராத திடீர் மாற்றங்கள், நிகழ்வுகள் நடைபெறும். நற்சிந்தனை, தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வது நல்லது. படிப்படியாக நற்பலன்களை அதிகளவில் அடைவீர்கள். குடும்பத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பொருளாதார நிலை திருப்திதரும். சேமிப்புகள் உயரும். உடன்பிறந்தோரால் தர்ம சங்கடமான நிலை ஏற்படும். பிரயாணத்தின்போது அறிமுகமில்லாதவர்களிடம் கூடுதல் கவனம் தேவை. சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். கண்டிப்பாக உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம். சிறுசிறு பிரச்சினைகள்கூட பெரிதாகலாம் என்பதால் அலட்சியமாக இருக்காமல் கவனித்துக்கொள்வது நல்லது.

## கன்னி

நிம்மதியான வாழ்க்கை நிலை தொடரும். பொருளாதார நிலை சீராக இருக்கும். மற்றவர்கள் செய்யத் தயங்கும் காரியங்களைகூட அசாத்தியமான தைரியத்துடன் செய்து வெற்றிகாண்பீர்கள். தகவல் தொடர்புசாதனங்கள் ஆதாயம் தரும். திடீர் விருந்தினர் வருகையால் வீட்டில் கலகலப்பு நிலவும். மாணவர்களின் கல்வி நிலை சிறப்பாக இருக்கும். வண்டி, வாகனங்கள், பிரயாணங்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தைரியத்தை கண்டு பெருமை கொள்வீர்கள். சிந்தனையின் வேகம் செயலில் தெரியும். வாழ்க்கைத்துணையின் உடல்நிலையில் கவனம் தேவை. செலவுகள் கட்டுக்குள் வரும். தொலைதூரப் பிரயாணத்திற்காக திட்டமிடுவீர்கள்.

## துலாம்

எதிலும் நிதானம் அவசியம். நீங்கள் நம்பிய சிலர் கலகம் செய்து உங்களை குழப்ப முயல்வார்கள். அடுத்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்காது சுயசிந்தனைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செயல்படுவது அவசியம். பொருளாதார நிலை திருப்தி தரும். சேமிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தார் மகிழ்ச்சிக்காக சுற்றுலா செல்வீர்கள். உடன்பிறந்தோரால் உபத்திரவங்கள் தோன்றும். வாகனச்செலவுகள் கூடும். மாணவர்கள் கடுமையாக உழைக்கவேண்டிய நேரம் இது. பிடிவாதம் கூடும். எதிலும் நன்மை, தீமையை ஆராய்ந்து செயலில் இறங்குவது நல்லது. உடல்நிலை சீராக இருக்கும். வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்ற கூடுதல் முக்கியத்துவம் அளிப்பீர்கள்.

## விருச்சிகம்

எதிலும் சிறப்பான நற்பலன்கள் ஏற்படும் காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுநாள் வரை நீங்கள் கண்டு வந்த அலைச்சல்களின் பலனாக உட்கார்ந்த இடத்திலிருந்து உங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தின் பொருளாதார நிலை முன்னேற்றம் அடையும். சேமிப்புகள் உயரும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்ய நேரிடும். மாணவர்களின் கல்வி நிலை சிறக்கும். புதிய நிலம், வீடு, வண்டி வாங்க ஏதுவான காலமாக இருக்கும். பிள்ளைகளின் செயல்கள் பெருமைகொள்ளத்தக்க வகையில் அமையும். விருந்து, கேளிக்கை. கொண்டாட்டங்களில் நாட்டம் கூடும். வாழ்க்கைத்துணையின் பெயரில் புதிய சேமிப்புகளில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகும்.

## தனுசு

உத்வேகம், செயல்வேகம் கூடும். சரியான நேரத்தில் நண்பர்கள் துணையோடு உங்கள் திட்டங்களை செயல்படுத்துவீர்கள். சமயோஜித புத்தி சரியான நேரத்தில் வெற்றிபெற்று தரும். வரவு திருப்தி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுவையான உணவுகளில் நாட்டம் கூடும். மற்றவர்கள் செய்யத் தயங்கும் காரியங்களில் அசாத்தியமான தைரியத்துடன் செயல்பட்டு வெற்றியை காண்பீர்கள். புதிய வீடு கட்டும் முயற்சியில் உள்ளோருக்கு வாய்ப்புகள் சாதகமாகும். உடல்நிலை சீராக இருக்கும். வாழ்க்கைத் துணையின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படுவீர்கள். வியாபாரிகள் நல்ல தனலாபம் காண்பார்கள்.

## மகரம்

நினைக்கும் விஷயங்களை செயல்படுத்தும் திறமைகூடும். வேகம், விவேகத்தோடு கவுரவமும் கூடும். பல வழிகளிலும் வரவும் அதற்கேற்ற செலவும் இருக்கும். சேமிப்பு கரையும். குடும்பத்தில் சலசலப்பு இருந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. உடன்பிறந்தோர் நலனில் அக்கறைகொண்டு செயல்படுவீர்கள். செல்போன் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களில் மாற்றம் செய்வீர்கள். வாகன மாற்றம் செய்ய விரும்புவோர்க்கு வாய்ப்புகள் அமையும். பிள்ளைகளின் வாழ்க்கைத் தரம் உயரும். அவர்களின் செயல்கள் உங்கள் கவுரவத்தை உயர்த்தும். உடல்நிலை சீராக இருக்கும். அயல்நாட்டு நண்பர்களிடமிருந்து உபயோகமான தகவல்கள் வந்துசேரும்.

## கும்பம்


எடுத்த செயல்களில் இழுபறி இருந்தாலும் தடை இருக்காது. ஆக்கபூர்வ சிந்தனைகள் மனதை ஆக்கிரமிக்கும். பொருளா-தார நிலையில் ஏற்றஇறக்கங்கள் இருக்கும். வரவும், செலவும் சமமாக இருக்கும். பேச்சில் கடுமை வெளிப்படும். மற்றவர்கள் மனம் புண்படாத வண்ணம் பேசுவது நல்லது. குடும்பத்தில் சலசலப்பு இருக்கும். உடன்பிறந்தோர் உதவி-கரமாய் இருப்பார்கள். மாணவர்களின் கல்வித்தரம் உயரும். வாகன ஆதாயம் உண்டு. இன்டர்நெட் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களால் மன நிம்மதி அடைவீர்கள். பிள்ளைகளால் ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையோடு கருத்துவேறுபாடு கொள்வீர்கள்.

## மீனம்

சாதக பாதகங்கள் கலந்திருக்கும். பெரிய சவாலை சந்திக்க உள்ளீர்கள். பொருளாதார நிலை சரிவு காணும். குடும்பத்தில் சலசலப்பு தோன்றி மறையும். உடன்பிறந்தோரின் உதவியுடன் நீண்டநாட்களாக இழுபறியில் இருந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிப்பீர்கள். வாகனத்தால் ஆதாயமும் செலவும் இருக்கும். மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற கூடுதல் உழைப்பு தேவை. எல்லாம் இருந்தும் ஏதோ ஒரு மனக்குறை மனதில் இருப்பதை தவிர்க்க இயலாது வாழ்க்கைத்துணையோடு கருத்து வேறுபாடு கொள்வீர்கள். சிக்கன நடவடிக்கை வெற்றிதரும். இரவில் நிம்மதியான உறக்கம் கெடும். சரிசம பலனை தரும் வாரம் இது.

## வேற்றுக் கிரகவாசியின் தோற்றத்தில் அதிசயக் குழந்தை

தலை முழுமை பெறாமலும், கண்கள் திறந்தநிலையிலும் வேற்றுக் கிரகவாசியின் தோற்றத்தில் அதிசயப்பெண் குழந்தை ஒன்று இந்தியாவில் பிறந்துள்ளது. சவிதா ராணி - வயது 32. ஆந்திரா மாநிலத்தில் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்தவர். இக்குழந்தையை சுகப்பிரசவமாக பெற்றெடுத்தார். ஆயினும் பிரசவத்தை தொடர்ந்து தகவல் அறிந்து ஏராளமான நபர்கள் வைத்தியசாலைக்கு வெளியில் குவிந்தனர். இருப்பினும் இருநாட்கள் கழித்து இதயம் செயற்படாமல் குழந்தை இறந்துபோனது. பிரசவ காலத்தில் தாய் சத்தான உணவு களை சாப்பிட தவறியமையே குழந்தை விபரீதமாக பிறந்ததற்கு காரணம் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். இத்தாய்க்கு ஏற்கனவே 3 பிள்ளைகள் உள்ளனர்.



எப்போதும் இணையத்தளம் பெண்களுக்கு ஆபத்தான விடயம்தான். சமூக இணைப்பு தளங்களை பயன்படுத்துகின்ற பெண்கள் பலரும் ஆண்களிடம் இருந்து ஆபாச படங்கள் கிடைக்கப்பெற்று இருப்பார்கள். பல ஆண்கள் மிகமோசமாக நிர்வாண படங்கள் எடுத்து அனுப்புகின்றார்கள். ஆஸ்திரேலிய - அமெரிக்கன் மொடல் அழகிக்கு இக்கசப்பான அனுபவம் பல தடவை-கள் நேர்ந்தது. பலவழிகளிலும் போராடிப் பார்த்தார்.



ஆபாச ஆண்களை பழிவாங்கும் அழகி

நிறைவில் சரியான தீர்வை கண்டு பிடித்தார். நிர்வாண படங்களை எடுத்து அனுப்பு கின்ற ஆண் களின் காதலி-களை சமூகத் தளங்களில் அடையாளம் கண்டு இப்படங் களை மீண்டும் அனுப்பி விடுகின்றார். இது நல்ல பலனை கொடுக் கின்றது.



## புற்றுநோயை குணப்படுத்தும் பழம் கண்டுபிடிப்பு

புற்றுநோயை குணப்படுத்துகின்ற பழம் ஒன்றை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர். இப்பழ மரம் வட குயின்ஸ்லாந்தில் மாத்திரம் வள ர்கின்றது. பிராணிகளுக்கு பழத்தை கொடுத்து சோதனைசெய்து பார்த்ததில் 70 சதவீதம் திருப்தி அடைந்து உள்ளார்கள்.

## நீங்கள் காணாத பிராணிகள்



பிரித்தானியாவில் அரிய இன வெள்ளை அணில் ஒன்றும், தான்சானியாவில் அபூர்வ வெள்ளை ஒட்டகச்சிவிங்கி ஒன்றும், நியூசிலாந்தில் நடக்கும் மீன் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

## காளியம்பாள் – உடுவில் சிந்து இறுதியில் பலப்பரீட்சை

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சித் தொடரின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்பலப்பரீட்சை இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதியது. இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் செ.சண்முகலிங்கம் கலந்துகொண்டார்.



## ரேவடி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது



வல்வை நேதாஜி விளையாட்டுக் கழகம் வல்வெட்டித்துறைப் பிரதேச அணிகளுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் வல்வை ரேவடி விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

றெயின் போய்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்வை ரேவடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முதல் பத்து நிமிடங்களும் உருண்டோடின. 14 ஆவது நிமிடத்தில் சைனிங்ஸ் அணியின் முன்கள வீரர் குமரன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.

கோல் கணக்கில் வேறெந்த மாற்றமும் ஏற்படாமல் சைனிங்ஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. 1 : 0 என்ற சைனிங்ஸின் ஆதிக்கத்துடனேயே இரண்டாம் பாதியும் நகர்ந்துகொண்டிருந்தது. ரேவடியால் பழிதீர்க்க இயலவில்லை. இந்நிலையில் ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே எஞ்சியிருக்கும்பொழுது ரேவடி அணியின் வீரர் சஞ்சீவன் அசத்தலான கோல் ஒன்றைப்போட சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நிலை உருவானது. சமநிலைத் தவிர்ப்பிலும் இருஅணிகளும் விடுவதாக இல்லை. இருந்தபோதும் இறுதியில் ரெவடி அணியின் கோல்காப்பாளரின் சிறப்பான செயற்பாட்டினால் 5 : 4 என்று கோல்களின் அடிப்படையில் ரேவடி அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.